தமிழர் நேசன்

(தமிழர் கல்விச்சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VI. { துந்துபி௵ பங்குனி௴ } பகுதி 12.

தூரதிருஷ்டிக் கண்ணாடி.

The Telescope

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி B.A., B.L., எழுதியது.

கடவுள் விளையாட்டாக மகத்தான பிரபஞ்சத்தை உண்டாக்கினார். அதன் பிறப்பும், வளர்ப்பும் உருவமும், எல்லையும். குணமும்; பிற குணங்களும் அவருக்குத் தான், தெரியுமே யன்றி; அவை நமது ஊகத்துக்கும் எட்டா. அதனுள் சிதறிக் கிடக்கும் நக்ஷத்திரங்கள் எண்ணில் அடங்கா. அதன் ஒரு மூலையில் கிடக்கும் நமது சூரியன் அளவில் மிகவும் சிறிதான ஒரு நக்ஷத்திரம். அதைச் சுற்றி ஓடிவரும் நமது பூமியானது அதன் சிற்றளவிலும் பதின் மூன்று லக்ஷத்தில் ஒரு பங்கு. அதன் மீது வாழ்ந்துவரும் கோடானு கோடி ஜீவராசிகளுள் ஒன்றே யாகும். மானுடராகிய நாம். சின்னஞ் சிறிதிலும் சிறிய இப்பூமியின் கண்ணுள்ள வஸ்துக்களைப் பற்றி எல்லாம், வெகு தூரம் "எனவும்" மிக உயரம், ஆழம்", எனவும், பெரிதெனவும் அதிகமெனவும், கருதிப்பேசி வருகிறோம் நம்முடைய சிறுமை எவ்வளவு;

இப்படி எல்லாம் நவீன வான சாஸ்திர ஆராய்ச்சிகளை அறிந்த அறிவாளர் தமது சிறுமையையும் கடவுளது பெருமையையும் நன்கு உணர்கின்றனர். இப்படி எண்ணுவதற்குக் காரணம் தூரதிருஷ்டிக் கண்ணாடியே.

முன் காலத்தில் மனிதன் தன்னைப்பற்றி மிகவும் பெருமையாக எண்ணியிருந்தான். எல்லாவற்றிற்கும் மேலான உயிராகிய மானுட உயிரை உண்டாக்க நினைத்த கடவுள், மனிதனுக்கு வாழிடமாகச் சிறப்பும் செழிப்பும் மிகுந்து, அளவிலும் மிகப்பெரிய இப்பூமியைச் சிருஷ்டித்து; அதற்கு ஒளி கொடுத்து மனித உயிரைக் காப்பாற்றச் சூரியனையும், அழகு கொடுத்து மனிதர் மனதைக் களிப்பிக்கச் சந்திரனையும் நக்ஷத்திரங்களையும் உண்டு பண்ணி, மனிதன் இன்று வாழ்வதற்கும், ஆண்டு அதிகாரம் செலுத்துதற்கும் செடி, மீன், விலங்கு, பக்ஷிகளையும் உண்டாக்கினர் என்று எண்ணிக் கூறித் தன் பெருமையையும், கடவுள் தனக்காகப்பட்ட பாட்டையும் பற்றி மனோராஜ்ஜியம் செய்து மனிதன் இறுமாந்திருந்தான்.

பூமி, சமுத்திரம், ஆகாயம், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் எல்லாம் மனிதனுக்காகத் தான் சிருஷ்டிக்கப்பட்டனவா. அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை இயற்றியமைக்கக் கடவுள் கஷ்டப்பட்டு வேலைசெய்தாராம்! வேலையின் கொடுமையால் அவர் களைப்பாற நேர்ந்ததாம்! இஃதுண்மையாயின் மனிதனுடைய பெருமையே பெருமை!

சற்றேறக்குறைய நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னே ஐரோப்பாவிலுள்ள பள்ளநாடுகளுள் ஒன்றாகிய ஹாலண்டு (Holland) நாட்டில் ஒரு சிறு கிராமத்தில் ஒரு தொழிலாளி ஒருவன் மூக்குக் கண்ணாடிகள் செய்து வயிறுவளர்த்து வந்தான். அவன் வீட்டுக் குழந்தைகளுக்கு விளையாட்டு சாமான்

கள் கண்ணாடிகள் தான். பொதுவாகவே எல்லாக் குழந்தைக ளுக்குமே கண்ணாடியைக் கண்டால் வெகுசந்தோஷம். கண் ணாடித் துண்டுகளை ஒரு கண்ணுக்கு நேராய்ப் பிடித்துக் கொண்டு, மற்றொரு கண்ணைப் பொத்திக்கொண்டு, கண்ணா டியின்வழி நாலாபக்கங்களிலும் சுற்றிப் பார்த்து விளை யாடுவது தான் குழந்தைகளுக்கு வழக்கம் அவ்வாறே அந்தக் குழந்தைகளும் நித்தியம் கண்ணாடிகளை வைத்து விளையாடிவந்தன. அவற்றைத் தனித்தனியாகவும், அடுக்கடுக் காகவும், பரப்பியும் நெருக்கியும் வைத்துக் கொண்டு நாற்புற மும் சுற்றிப்பார்த்து விளையாடிவந்தன. ஒரு நாள் ஒரு குழந் தை ஒரு கண்ணைப்பொத்திக்கொண்டு, ஒரு கண்ணாடியைத் தன் மற்றக் கண்ணின் அருகிலும், மற்றொரு கண்ணாடியைத் தன் நீட்டிய கையிலும் வைத்துக்கொண்டு அவை இரண் டின் வழியாயும் நாலாபக்கமும் சுற்றிப்பார்க்க நேர்ந்தது. அப்பொழுது அரைமைல் தூரத்துக்கப்பாலிருந்த அந்த ஊர்க் கோயிலின் ஸ்தூபி மிகவும் கிட்ட இருந்தாப்போல் அந்தக் குழந்தைக்குத் தோன்றிற்று. ஆச்சரியமுற்று, இர ண்டு கண்களையும் திறந்துபார்த்தது ஸ்தூபி பழைய இடத் துக்குப்போய்விட்டது மறுபடியும் கண்ணாடிகளைக் கண்ணு க்கு நேராகப் பிடித்துக்கொண்டு பார்த்தது. ஸ்தூபி மறுபடி யும் கிட்ட வந்தது.

மிகவும் விந்தையாயிருந்த இவ்விளையாட்டை அக் குழந்தைகள் சிறிதுநேரம் விளையாடி விட்டுப் பிறகு தங்கள் தகப்பனிடம்போய் இவ்வாச்சரியமான நிகழ்ச்சியைக் கூறின. அவன் முதலில் குழந்தைகள் சொல்லுவதைப் பொருட்டாக் காது அசட்டை பண்ணினனெனினும், அவர்கள் வற்புறுத் திக்கூறவே சற்று அவநம்பிக்கை யுடனேயே வெளியில் சென்று அவர்கள் சொன்னபடி செய்து பார்த்தான். குழந்

தைகள் கூறியது மெய்தான்! அவன் வேலையில் கெட்டிக்காரன். ஆகவே அது மந்திரத்தாலல்ல; மாயத்தாலல்ல; கண்ணாடியின் குணத்தால் தான் என்பதை நிச்சயமாக வைத்துக் கொண்டான். அக்கண்ணாடிகள் சாதாத் தட்டைக் கண்ணாடிகளல்ல: அவை மையம் குவிந்தவை: லென்சுகள். (Lenses) லென்சுகளை ஒரு விதமாய் அடுக்கிவைத்து அவற்றின் வழியாக நோக்கினால் தூரத்தில் இருக்கும் வஸ்துக்கள் கிட்ட வந்தது போல் தோன்றுவன என்ற உண்மையை அவன் அறிந்து கொண்டான். கண்ணில் ஒன்றும், கையில ஒன்றுமாக வைத்துப் பிடித்துக்கொள்ளுவது கஷ்டமாயிருந்ததால் ஒரு கண்ணாடிக் குழாயின் இருமுனைகளில் அதே அளவு தூரத்தில் அவ்வாறே இரண்டு லென்சுகளைப் பதிப்பித்துப் புதியதொரு கருவியை உண்டாக்கினான். அந்தக் கருவி தூர இருக்கும் வஸ்துவையும் நன்றாகப் புலனாக்கிக் காட்டியதால் தூரதரிசனி (சேய் நோக்கு—Telescope) என்ற பெயர் அதற்கு இடப்பட்டது அது பிறந்த அன்று பிடித்தது மனிதனுடைய பெருமைக்குச் சனியன்! தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் மேலுக்கு மேல் சீர்திருத்தப்பட்டு அவற்றின் வல்லமை அதிகப்பட அதிகப்பட மனிதனது பெருமை படிப்படியாகக் குன்றிக் குறைந்து போயிற்று. மனிதனும் தான் இப்பிரபஞ்சத்துள் மிகவும் தாழ்ந்த படியைச் சேர்ந்தவனே என்று ஐயுறத் தொடங்கினான்.

எவ்வாறெனில்: இவ்வுலகில் மனிதன் வெகு காலமாகத் தன்னைச் சுற்றியிருக்கும் பகைவராம் மிருகங்களோடு எதிர்த்துப் பிராணதாரப் போர் புரிந்ததில், தன்னுடைய அறிவின் உதவியால் பற்பல கருவிகளைச் செய்து அப்பகைவர் அனை வரையும் முறியடித்துத் தன் உயிரைக் காப்பாற்றித் தன் இனத்தை வளர்த்துச் சிறிது சிறிதாக இவ்வுலகிலுள்ள உயிர்

அனைத்திலும் மேலான பதவியைத் தன்னுடையதாக்கினுன். அவனே இப்பூமியின் கண்ணுள்ள உயிர்ப் பிராணிகளிற் சிறந்தவன்; அவை அனைத்துக்கும் அரசன். ஆயினும் துணைக்கருவிகள் அரிதான அக்காலத்தன்றி, ஆயுதங்கள் மலிந்த இக்காலத்தும் விலங்குகளாலும், மீன்களாலும், மடியும் மனிதர் எத்தனை பேர். நச்சரவும், கொடும்புலியும், யானையும், திமிங்கிலமும் கொல்லும் மனிதர் எத்தனை பேர்! ஈயும், பேனும், கொசுவும், நுண்ணினும் நுண்ணிய பாக்டீரியாக்களும் கொல்லும் மனிதர் எத்தனை! பூமியின் அசைவும், கடலின் அலையும், காற்றின் தாக்கும், எரிமலையின் வெடிப்பும், பல்வேறு பிணிகளும் அவனை அடித்துக் கொன்று அவனது தாழ்மையையே வெளிப்படுத்துகின்றன. ஆகவே இப்பூமியில் அவன் அதிகாரம் முற்றிலும் செல்லுகிறது என்று சொல்லுவதற்கில்லை. ஆயினும் ஒன்று; இப்பூமியாவது பிரபஞ்சத்துள் காணப்படும் வஸ்துக்கள் எல்லாவற்றையும் விட அளவில் பெரியது என்றிருக்குமாயின் அவன் இவ்வாறு தன்னைத் தேற்றிக் கொள்ளக்கூடும் "கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட பெரிய பிரபஞ்சத்துள் என் வீடாகிய பூமியே மிகவும் பெரியது. அதனுள் வாழ்வன யாவற்றுள்ளும் நானே மேலானவன். சிற்சில வேளைகளில் சிற்சில ஜந்துக்களால் எனக்குத் தீங்கு உண்டாகிறது என்பது மெய்தான். ஆனுல் என்ன? முன் காலத்தில் இவ்விதமான ஆபத்துக்கள் எனக்கு அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. அப்போதெல்லாம், வீட்டை விட்டு வெளியே போனுல் வீட்டுக்குத் திரும்பி வந்தால் தான் நிச்சயம்; தூங்கச் சற்றுக் கண்ணயர்ந்தால் உயிரோடு விழித்தால் தான் நிச்சயம் என்று ஆபத்து அவ்வளவு அதிகமாக இருந்தது. நான் முதலில் கல்லினுற் செய்த ஆயுதங்களையும், பிறகு செப்பு வெண்கல ஆயுதங்களையும் உண்டாக்கி என் உயிரைக்

காத்து அந்த ஜந்துக்களைக் கீழ்ப்படுத்தினேன்; இப் பொழுது வெடிக்குண்டுகளை உபயோகித்து அவைகளை ஒரு நொடியில் கொன்று விடுகிறேன். இனிமேல் வரப்போகிற நாளில் இன்னும் அரிய விஷயங்கள் எவ்வளவோ செய்வேன். இப்பொழுதாவது சுடும்போது ஓசை உண்டாகிறது. இனி மேல் சற்றும் ஓசையின்றி ஒரு விநாடிப் பொழுதில் மின் சாரசக்தியால் என் சத்துருக்களைத் தொலைக்கமுடியும். எத்தனை ஜந்துக்களைச் சந்ததி அற்று ஒரு குஞ்சு கூட இல் லாது வேரோடு நாசம் செய்திருக்கிறேன்' எத்தனை ஜந்துக் கள் என்னைக் கண்ட மாத்திரத்தில் என் காற்றும் எட்டிய மாத்திரத்தில், அஞ்சி அகன்றோடச் செய்திருக்கிறேன்! எனக்கு அடிமையாய் ஊழியம் செய்ய எத்தனை ஜந்துக களைப் பழக்கியிருக்கிறேன்! சிற்சில வேளைகளில் நான் பூமிக் கும் கடலுக்கும், காற்றுக்கும், நெருப்புக்கும்; விலங்குக் கும் இறையானால் என்ன? பூமியைக் கீறி உழுது பயிரிட்டுச் சாப்பிடுகிறேன் அதன் முதுகின் மேல் என் வண்டியை ஓட்டிச் சுகமாய்ப் போய் வருகிறேன். அதனுள் சுரங்கங் கள் தோண்டி அதன் வயிற்றினின்று நிலக்கரியையும் பல வகை உலோகங்களையும் ஒளிமிக்க வைரத்தையுமே பிடுங்கி எடுத்து உபயோகப் படுத்துகிறேன். சமுத்திரத்தின் மீது என் கப்பல்கள் இங்கு மங்கும் ஓடவில்லையா? அதில் வாழும் மீன்களைப் பிடித்து நான் தின்கவில்லையா? அதிலிருந்து முத்துக்களையும், பவழங்களையும் எடுத்து நான் பூண வில்லையா? காற்றும் நெருப்பும் எனக்கு அடிமைகள். நான் இட்ட வேலைகள் யாவற்றையும் அவை பொறுமையுடன் செய்கின்றன மாவைத் திரிப்பது ஒன்று; ரொட்டியை வாட்டுவது மற்றொன்று, நீரை இறைப்பது ஒன்று; அதைக் காய்ச்சித் தருவது மற்றொன்று. நான் நில மேல் நடக்

கிறேன்; நீர்மேல் மிதக்கிறேன்; வானிலும் பறக்கிறேன். என்னைச் சுற்றியிருக்கும் யாவற்றுக்கும் நானே தலைவன். பின்னை ஏன் என் பெருமையைப் பற்றிய ஐயம்?''

ஐயத்திற்குக் காரணம் நாம் முற்கூறிய பூதக்கண்ணாடியே.

மனிதன் எக்காலத்தும் குழந்தைக்குணமெனச் சிலர் கருதும் குருகுருப்பு மேலிட்டவன். குருகுருப்பே அறிவுக்கு மூலகாரணம்; அறிவுக்கு அது தூண்டுகோலாம். ஒரு சிறு குழந்தையினிடம் யாதாயினும் ஒரு புதிய பொருளைக் கொடுத்தால் அது அதைத் தடவியும், தட்டிக் கொட்டியும், திருப்பிப் புரட்டியும், நக்கியும் கடித்தும் விளையாடும். இஃதெல்லாம் இயற்கை தூண்டப் பல புலன்களாலும் அது அப்பொருளைப்பற்றியவை அனைத்தையும் அறிந்துகொள்ள எடுக்கும் முயற்சியே; அதன் குணத்தை இவ்வாறு அறிந்த பின்பு அவ்வறிவை அது பயன்படுத்த முயலுகிறது. ஒலிக்கும் பொருளைத் தட்டியும், உடையும் பொருளை உடைத்தும், சுவையுள்ள பொருளைச் சுவைத்தும் அது விளையாடுகிறது. இவை தாம் அது அறிவைப்பயன்படுத்தும் முறைகள். சிறிய பையன் ஒருவன்கையில் கத்தியொன்று அகப்பட்டால் அவன் செய்யும் சேஷ்டைகளுக் கணக்கில்லை. அது வெட்டக்கூடியது, வெட்டுதற்கு உபயோகமாவது என்பதை அவன் முன்பே அறிவான். ஆதலால் அவன் தன்னைச் சுற்றிய பொருள்கள் மீதெல்லாம் கத்தியைப் பிரயோகிப்பான். அவன் சீவாத பென்சில்களும் செதுக்காத மரங்களும் குறை, மேஜை நாற்காலி எங்கும் அதன் குணத்தை நிரூபிக்க எத்தனிப்பான். சிற்சில வேளைகளில் தன் கைவிரலையும் வெட்டிக் கொள்ளுவான். வளர்ந்து முதிர்ந்து அறிஞனான மனிதனும் இவ்வகைச் சுபாவமே மேலிட்டவன் தான் பெற்ற புதிய அறிவை எங்கும் புகுத்த முயலுவதே அவன் சுபாவம்.

புதியதாய் உண்டாக்கப்பட்ட மிகவும் விந்தையான சக்திபொருந்திய கண்ணாடிக் குழாயின் கீர்த்தி எங்கும் பரவவே ஆங்காங்குள்ள பற்பல அறிஞர் கண்ணாடிக் குழாய்கள் செய்துத் தம்மைச் சுற்றி நாலாபக்கங்களிலும் நோக்கத் தலைப்பட்டனர்.

அக்காலத்தில் பூமிதான் பிரபஞ்சத்திலுள்ள வஸ்துக்கள் எல்லாவற்றிலும் பெரிது, அது தான் பிரபஞ்சத்தின் நடுநிலை; அதைச் சுற்றியே சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் எல்லாம் ஓடி வருகின்றன என்ற பூமத்திய வாதமே மேலோங்கி நின்றது.

தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டு வானெங்கும் சுற்றி நோக்கவே வெகு ஆச்சரியமான பல விஷயங்கள் காணப்பட்டன. நாள் செல்லச் செல்ல அளவில் பெரியனவாயும், அதிகச் சக்திவாய்ந்தனவாயுமுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் செய்யப்பட்டன. அவற்றின் உதவியால், வியாழன் என்னும் கிரகத்துக்கும் உபகிரகங்கள் உண்டு; அதுவும் சனியும் நமது பூமியைவிட மிகவும் பெரியன; சூரியன் பூமியைவிட அளவில் எவ்வளவோ பெரிது; நக்ஷத்திரங்கள் என்பவை நமக்குக் கிட்ட இருப்பன அல்ல; அவை இருக்கும் தூரங்களை மனதால் நினைக்கவும் இயலாது; நக்ஷத்திரம் ஒவ்வொன்றும் ஒரு சூரியன்; பற்பல நிறமான நக்ஷத்திரங்கள் இருக்கின்றன; மங்கி அவிந்து ஒளியற்றுப் போன்ற நக்ஷத்திரங்களும் இருக்கின்றன; என்பனவெல்லாம் அறியப்பட்டது.

இக்கண்ணாடியால் புதிய அறிவு மேன்மேலும் வளர நாம் எண்ணிக் கட்டிய ஆகாயக் கோட்டைகள் பல இடிந்து போகலாயின. பூமி நாம் எண்ணியபடி மிகப்பெரிய பொருளல்ல. அளத்தற்கரிய, நினைத்தற்கெட்டா எல்லைகளுளுள்ள பிரபஞ்சத்தின்கண் உள்ள பெரும் பொருள்களைப் பற்றி நினைக்குங்கால் பூமியின் அளவு கடுகினும் சிறிதாகத் தோன்

றுகிறது. எண்ணத்திற் கெட்டாத பிரிவுள்ள பிரபஞ்சத்துள் மிகச் சின்னஞ்சிறியதாம் நக்ஷத்திரமாகும் சூரியனைச் சுற்றியோடிவரும் பல கிரகங்களிலும் சிறிய கிரகம் ஒன்றேயாகும். இப் பூமியின் கண்ணுள்ள ஓர் உயிரே நாம் என்ற அறிவை நமக்கு ஊட்டியது தூரதிருஷ்டிக் கண்ணாடியே யாதலால், அது நமது பெருமையைக் கெடுத்து நம்மைத் தாழ்மைப் படுத்தியது என்று கூறுவதில் தவறு என்ன?

ஆயினும் மனிதன் தன்னைத் தானே தாழ்மைப்படுத்திக் கொண்டானே யன்றி பிறன் ஒருவனால் அவன் தாழ்மையடைய வில்லை. இப்பொழுதும் கூட மனிதன் பூலோகத்திலுள்ள தூரதிருஷ்டிக்கண்ணாடிகள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்துவிட்டு, வேறு யார் வேண்டுமாயினும் என்னைத் தாழ்மைப்படுத்த முடியுமாயின் செய்யட்டும்? நானே என் என்னைத் தாழ்மைப்படுத்திக்கொள்ளவேண்டும்?என்று இருக்கக்கூடும். இவ்வாறு இருக்காது, மேன்மேலும் பெரிய தூரதிருஷ்டிக்கண்ணாடிகளையும் அவற்றுக்கு உதவியாய்ப் பிற துணைக் கருவிகளையும் அமைத்துத் தன் நிலைமையைக் கீழ்ப் படுத்த முயலும் மனிதனைப் பற்றிக் கூறும்போது அவன் தாழ்ந்தவன் என்று கூறலாகுமோ?

டான் க்ஃவிக்ஸாட்டின் விசித்ரானுபவங்கள்.*

The Adventures of Don Quixote.

சென்னைக் கிறிஸ்தவன் கலாசாலையில் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் R. ரங்காசாரியார் M.A , L T., ஆங்கிலக்
கதையின்று தொகுத்து எழுதியது.

ஸ்பெயின் தேசத்தைச்சார்ந்த ஒரு மாகாணத்தில் லா மாங்காவென்னுங் கிராமத்திலே ஒரு பிரபு வசித்துவந்தான். அவனுக்குக் கிடைத்த சொற்ப வரும்படியில் பெரும்பாலும் குடும்ப காலக்ஷேபத்திற்கே செலவாயிற்று. அவனுக்குள்ள வரும்படியில் அவனும் நாற்பது வயதுள்ள ஒரு வேலைக்காரியும் இருபது வயதுள்ள அவனது மருமகளும் ஒரு சிறுவனும் ஜீவிக்கவேண்டியவர்களாகையால் அவர்கள் உண்ணும் உணவு மிகவுங் கேவலமாகவே யிருந்தது. காலையிற் சமைத்து உண்ட சேஷத்தையே இராவிலும் உபயோகித்து வந்தார்கள். சாப்பாட்டிற்காகச் செலவழிந்ததுபோக மிகுதியை அவன் தன் உடுப்புக்களுக்குச் செலவிடுவான். மேலங்கியொன்று, வெல்வெட்டினாலாகிய அரையாடையொன்று, காலாடை

---

*இக்கதை ஐரோப்பாவிலுள்ள ஸ்பெயின் தேசத்தவரான செர்வான்டீஸ் என்னும் கவியால் எழுதப்பட்டது. அவர் பிறந்தது கி. பி. 1547ம் வருஷம்; இறந்தது கி. பி. 1616ம் வருஷம். அவர் சிறிது காலம் சைன்னியத்தில் சேர்ந்து அல்ஜியர்ஸ் நாட்டுக் கடற் கொள்ளைக்காரர்களோடு சண்டையிட்டு, அவரால் ஐந்துவருஷம் சிறைப் படுத்தப்பட்டு, பின்பு நாடு மீண்டதும் நாடகங்கள், கவிகள், கதைகள், முதலிய இயற்றிவந்தார். அவர் எழுதியவை யாவற்றுள்ளும் இக் கதையே மிகவும் சிறப்புற்றதாய் அவருக்கு அழியாப் புகழைத்தந்தது.

யொரு ஜதை ஆகிய இவையே அவன் விசேஷதினங்களில் உபயோகிக்கும் உடையாம். இவையன்றி, தினப்படி உடுத்திக் கொள்வதற்கு. கையினால் தைக்கப்பட்ட சில ஆடைகளை அவன் தயாரித்து வைத்திருந்தான்.

அக்கனவான் ஐம்பது பிராயத்தினன்: அரோக திடகாத்திர முள்ளவன்; ஒற்றைநாடி உடலுடையவன். அவனது முகம் மெலிந்து மலினமடைந்திருந்தது, வைகறையாகுமுன் படுக்கைவிட்டு எழும் வழக்கமுடையவன். வேட்டையில் அவன் மிகுந்த பிரியமுடையவன். பண்டையவீரர் இழைத்துள்ள அருஞ்செயல்களைச் சிறப்பித்துக் கூறும் நூல்களைப் படிப்பதையே அவன் தகுந்த போதுபோக்காகக் கொண்டிருந்தான். காலம்போவதுந் தெரியாமலே அவன் மனம் அத்தகைய புத்தகங்களிற் பொதிந்துள்ள விஷயங்களில் அழுந்திக் கிடக்கும் மறவர் மாண்பினை யறிய ஆர்வம் மிகுந்தவனாய் அவன் தனக்குள்ள பூஸ்திதியில் பெரும்பாகத்தை விற்றுப் புத்தகங்கள் வாங்குவான்.

அவனுடைய நடத்தையைக்கண்டு அதிசயித்தவர் அவ்வீட்டிலுள்ளோர் மாத்திரமே யன்று. அவனைச்சேர்ந்த உறவினரும் நட்பினரும் அக்கம்பக்கத்திலுள்ளோரும் அவனது செய்கையைக்கண்டு கலங்கினர். அவன் முனபோல் வேட்டைக்குச் செல்வதில்லை; குடும்ப விஷயங்களிலும் தலையிட்டுக்கொள்வது கிடையாது தான் வாங்கும் புத்தகங்களிற்

அவர் காலத்தில் ஸ்பெயின் நாட்டினார் சுவையுள்ள அழகிய காவியங்கள் ஒன்றையும் படிப்பதில்லை ஊரெங்கும், நாட்டிலும், காட்டிலும்- சுற்றித் திரிந்து, விசித்திரானுபவங்களை நாடி, ஒருவராலும் செய்வதற்கியலாத ஆச்சரியமான செயல்களை எல்லாம் எளிதில் செய்து முடித்து, அழியாப் புகழை அடைந்தவரெனக் கூறப்பட்டபோதிலும், வாஸ்தவத்தில் இல்லாத, இருக்கமுடியாத, பற்பல வீரர்களைப் பற்றிய பொய்க் கதைகளை மிகவும் உருசியுடன் படித்துப் பேசி வீண்போது போக்கிவந்தனர் அத்தேசத்தினர். ஆதலால் அத்தகைய

பல பயனற்றவை யென்பதையும் அவன் உணராமலே மேன் மேலும் தனக்குள்ள நிலத்தைவிற்றுப் புத்தகங்கள் சேகரித்து இரவும்பகலும் விடாது அவற்றைப்படித்துக் காலங்கழிப் பான். அதுமுதல் அவன் இரவில் தூங்குவதேயில்லை. அத ஞல் அவனது மூளை கலங்கியது மன்றி மனத்தின் வலிமை யுங் குன்றியது. போர்முனைகள், முற்றுகைகள், இரணகாயங் கள், கொலை, சித்திரவதைபோன்ற விஷயங்களைப்பற்றியே அவன் எப்போதும் எண்ணமிட்டுக் கொண்டிருப்பான்.

முடிவில் தன்நாட்டின் க்ஷேமத்தில் நாட்டமுடையவ ஞய்த் தனக்கும் அழியாப புகழையும் கீர்த்தியையும் தேடிக் கொள்ளும் வகை யின்னதென்று ஆராய்ந்து அத்தீர்மானத் தின்படியே நடக்கத்துணிந்தான். யுத்தவீரன் கோலம்பூண்டு உலகெங்குஞ் சுற்றித்திரிந்து மனத்தொழில புரிந்து பெருமை யடைய விரும்பினுன். தன் தந்தையின் பாட்டனுர் உபயோ கித்து மரித்ததுமுதல துருப்பிடித்துக கிடந்த போர்க்கவச மொன்று வீட்டில் ஒருமூலையில் இருக்கக் கண்டெடுத்து அதைத் தன்னுலானமட்டும் துலக்கிப் புதிதாக்கினுன். பின் தலைச் சீராவுக்கேற்ற முகபடாம் இல்லாதது கண்டு ஒட்டுக் கடிதாசிகளாலாய அட்டையைக்கொண்டு ஒன்று தயாரிக்கத் தொடங்கினுன் அது முடிந்ததும் தன் வலிமையை ஒரு கூரிய கத்திகொண்டு பரீக்ஷித்துப் பார்க்க, ஒரு வாரம் சிரமத் துடன்செய்து முடித்த முகபடாம் ஒரு நொடியில் துண்டு

பொய்க் கதைகள் நாளுக்குநாள் புற்றீசல்கள்போல் வெளிப்பட லாயின.

அந்தக் கெட்ட வழக்கத்தை வேரோடு அறுக்கும் பொருட்டு இக்கதை கேலியாக எழுதப்பட்டது. அவ்வழக்கமும், அப்புத்தகங்க ளும் தொலைந்துபோயின. ஆயினும் இதனுள் காணப்படும் சொற் சுவை பொருட்சுவைகளாலும், பரிகாசவிநோதங்களாலும், இப்புத்த கம் அழியாப் புகழைப்பெற்று இந் நாளும் நன்கு நிலவுகின்றது.

ப-ர்- த நே.

துண்டாய் அறுந்து கிழிந்தது. இதனால் அவனது ஊக்கம் சிறிதும் குன்றவில்லை. உட்புறத்தில் இரும்புக் கம்பிகளைப் பொருத்திப் புதிதாக வேறொருமுகபடாத்தைச் செய்து முடித்தான். தன்வேலைத்திறத்தைத் தானே வியந்து களிப்புற்றான்.

அப்பால் வீரர்க்கின்றியமையாத பரியொன்று தனக்கும் வேண்டுமென்று நினைத்தான். அவனிடம் ஏற்கெனவே குதிரையொன்றுண்டு. தேகவமைப்பு, நிறம், அழகு, கதிமுதலிய அசுவலக்ஷணங்களில் அக்குதிரைக்குப் பின்பட்டது கிடையாதென்று திட்டமாய்க் கூறலாம் ஆயினும் தன் புரவியினும் மேம்பட்ட குதிரை கிடைப்பது அருமையென்று அவன் எண்ணியிருந்தான்; அத்தகைய பெருமைவாய்ந்த குதிரைக்குத் தகுந்த பெயரிடவிரும்பி 'ரோஸினேன்ட்' என்னும் பதமே (முன்னம் சாதாரண நிலையிலிருந்து தற்சமயம் தன்னினும் மிக்க தோன்றின்றுயெனும் பெருமை வாய்ந்த) தன் குதிரையின் ஏற்றத்தை அறிவிப்பதாமெனக்கருதி அப்பெயரிட்டதனை யழைக்கலானான்

கேட்போரக் கச்சமும் உவகையுமொருங்கே விளைக்கக்கூடிய பெயரைத்தானும் வகிக்க வெண்ணி வெகுநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்து 'டான் க்விக்ஸாட்' என்னும் பெயரே காதுக்கினிமையாய்க் கம்பீர முற்றதென் றெண்ணி தான் பிறந்த ஊரையுஞ்சேர்த்துக் 'மாங்கா நாட்டு டான்க்விச்ஸாட் என்னும் புதுப் பெயருடன் வெளிக் கிளம்பினான். இத்துணைப் பெருமை வாய்ந்த வீரனொருவனுக்கு காதற்கிழமை பூண்ட சீமாட்டியிராதது அவன் பெருமைக் கிழுக்கென்றறிந்து டான் க்விக்ஸாட் தனக்குள்ளேயே "நான் ஒரு கொடிய அரக்கனை மடித்துத் தரையில் சாய்ப்பதாக வைத்துக்கொள்வோம். நான் பிரயோகித்த ஈட்டிமுனை அவனது உடலில் ஊடுருவிப் பாயவும் அதனால் குருதி சோரவும்

ஆவி துடிக்கவும் உடல இருகூறுகக் கிடக்கும் நிலையில் என் பகைவன் என்னை நோக்கி யிரந்து உயிர்ப் பிச்சையளிக்கும் படி வேண்டுவானன்றே? என் பராக்கிரமம் இருந்தவாற்றினை நான் காட்டி அறிவித்து மகிழ்தற்கு சீமாட்டி யொருத்தியைப் பெற்றிருப்பேனாயின் சிறப்பன்றோ?'' என்று எண்ணமிடு வான்.

லாமாங்சாவுக் கருகேயுள்ள ஒரு குக்கிராமத்தில் வசித் துவந்த அல்டான்ஸா லோரேன்ஸோ என்னும் சிறுமியே தன் காதலியாதற் குரிய லக்ஷணங்கள் வாய்ந்தவளெனத் தீர்மா னித்து க்விக்ஸாட் பிறர் சீமாட்டியென்று மதிக்கத் தகுந்த பெயரால் அவளை அழைக்கவெண்ணி அவளுக்கு டல்ஸி னியா வென்னும் புதுநாமமிட்டு வழங்கினான். அவனது ஜன்ம பூமிக்கும் புகழ்நாட்டக் கருதி தன் காதலியை டபோ ஸோ நாட்டு டல்ஸினியா வென்று பெயரிட்டான். டான் க்விக்ஸாட் வீரர்க்கின்றியமையாத நலன்களைப் பெற்றேமென மகிழ்ச்சிய யடைந்து கவசம் தரித்து ஆயுதங்களைத் தாங்கித் தன் திவ்வியபுரவியிலேறி இரகசியமாய் வெளிப் புறப்பட்டான் செல்கையில் திடீரென்றவனுக்கோ ரெண்ண முதித்தது. போர் முறைவல்லானொருவன் செருமுனை நோக்கி மறத்தொழில புரிவான் செல்வதன் முன் திறனும் அறிவுமுள்ள மற்றொரு வீரன் அவனுடைய பெருமைகளை யறிந்து 'வீரன்' என்றங் கீகரித்துப்பட்டஞ் சூட்டினாலன்றி அவன் எத்தகைய மறத்தொழில் புரிதற்கேனும் போர்க் கலந்தாங்கிக் கவசந்தரித்தற்கேனும் அருகனல்லன். ஆகை யால் க்விக்ஸாட்டும் முதலில் வீரனென்று பட்டம் பெற விரும்பித் தன் பரியை அதற்கிஷ்டமான மார்க்கத்தில் செல்ல விட்டான் தன் முன்னிலையில் முதலில் எதிர்ப்பட்ட எவ னிடமேனும் வீரனென்னும் பட்டம்பெறும் சடங்கு நிறை வேறிய பின் தன் ஆயுதங்களைத் துலக்கி வெள்ளிதாக்கல் அரிதன்றென நினைத்தான்.

(தொடரும்)

வாய்க்கால்.

The Streamlet.

காலம் சென்ற பிரோபஸர் P. சுந்தரம் பிள்ளை, M. A., இயற்றிய மனோன்மணீயம் என்னும் நாடகத்தினின்று எடுக்கப்பட்டது.

நமக்கூ ணளிக்கும் வயற்கு பயோகம்
எனப்பலர் கருது மிச்சிறு வாய்க்கால்
செய்தொழி லெத்தனை விசித்திரம். ஐயோ!
அலைகடன் மலையா மலையலை கடலாப்
புரட்டிட வன்றோ நடப்பதிச் சிறுகால்!
பாரீதோ! பாறைகளை நெறுநெறென் றுரைத்துச்
சிரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வழிக் கடங்கிய மண்கல் புல்பூழ்
வின்னதென் றில்லை; யாவையு மீர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீ ரடிவுட்
காலத் தச்சன் கட்டிடு மலைக்குச்
சாலத் தகுமிவை யெனவோர்ந் துருட்டிக்
கொண்டு சென்றிட் டிமற் "றையா!
அண்ட யோனியி னாணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீ ழருவியாய்த் தூங்கியுங் குகைமுக
மிழிந்தும், பூமியின் குடாபல நுழைந்தும்,
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்,
ஊறிடு சிறிய வூற்றாய்ப் பரந்தும்,

ஆறாய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்,
மதகிடைச் சாடியும், வாய்க்கா லோடியும்,
பற்பல படியான் பட்டங் கீட்டிய
தற்பமே யாயினு மாதரவாய்க் கொள் ;
இன்னமு மீதோ வேகுவேன்" எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்து மெழிலியாய்.
வந்திவ ணடைந்து, மற் றிராப்பகன் மறந்து
நிரந்தர முழைக்குமிந் நிலைமையர் யாவர் !
நிரந்தரம் ! ஐயோ ! நொந்தனை ! நில் ! நில் !
இரைந்ததென் ? அழுவையோ ! ஆயினேகுதி !
நீரே ! நீரே ! என்னையுன் நிலைமை ?
யாரே யுனைப்போ லனுதின முழைப்போர் ?
நீக்க மிலன்பு மூக்கமு முறுதியு
முனைப் போலுளவேற் பினைப் பேறென்னை

தமிழின் உற்பத்தி.

ஸ்ரீமான் ஆர். ஸ்வாமிநாதய்யர் எழுதியது.

கீழே வரைந்துள்ள வியாசம், சென்னை உபாத்தியாயர் சங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் மண்டபத்தில் ஆர். ஸ்வாமிநாதய்யர் செய்த பல உபந்யாசங்களை அவர்களே ஆங்காங்கு சுருக்கியும் விரித்தும் எழுதி யனுப்பியதாகும்:—

1. உபோத்காதம்

1 'தமிழின் உற்பத்தி' யென்றால் என்ன? ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் பேசிவரும் பாஷையானது அநாதி பரம்பரையாய் ஏற்பட்டிருக்க வேண்டுமல்லவா? 'உற்பத்தி' என்றால் ஒரு காலத்துக்குமுன் அந்த பாஷை இல்லையென்று காலவரையறை ஏற்பட்டுவிடுமே: பாஷையில்லாத காலமும் உண்டோ? ஒரு தேசத்து ஜனங்கள் தங்கள் பூர்வ பாஷையை முற்றிலும் விட்டு விட்டு வேறொரு பாஷையை அப்பியஸித்த போதிலும் இந்த நூதன பாஷையும் வேறொரு தேசத்தில் அநாதிபரம்பரையாகத் தானே வந்திருக்கவேண்டும். இப்படியிருக்க, தமிழுக்கு உற்பத்தி யென்று சொல்வது யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒவ்வாததாயிருக்கிறதென்று முதலிலேயே ஒரு ஆட்சேபனை ஏற்படலாம். அதற்கு ஸமாதானம் சொல்லவேண்டியது அவசியம்.

2. மலையாளத்தின் உற்பத்தி:—தொல்காப்பியப் பாயிரத்திலும் மாமூலனார் பாடல்களிலும் சங்க காலத்தில் வேங்கட மலைக்குத் தெற்கேயுள்ள தென்னிந்திய நாடுகளிலெல்லாம் பேசப்பட்டுவந்த பாஷை தமிழென்றே தெரிய வருகிறது. மேற்கு மலைத் தொடருக்குத் தெற்கிலும் மேற்கிலும் இக்காலத்தில் கேரளம், மலையாளம், என்று வழங்கி வருகிற தேசம் அக்காலத்தில் கொடுந்தமிழ் நிலமாக இருந்த

வேண், குட்டம், குடம் பூழி, முதலிய நாடுகள் சேர்ந்து உண்டானதுபோலும். இப்போது இக்கேரள தேசத்தில் பேசப்பட்டு வருகிற மலையாளபாஷை கடைச்சங்க காலத்தில் இல்லை. இத்தேசத்தில் கி.பி. ஒன்பதாவது நூற்றாண்டில் ஏற்பட்ட கல்வெட்டுகளும் தாமிரசாஸனங்களும் அகப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் தமிழ்ப் பாஷையில் வரையப்பட்டுள்ளனவே ஒழிய மலையாள பாஷையிலல்ல. அதுமுதல் 14—15 நூற்றாண்டு வரையில் சாஸனங்களில் உபயோகப்பட்டு வந்த பாஷை தமிழ்தான். ஆனால் தமிழ்வழக்கிலிருந்து சில வேறு பாடுகள் ஏற்பட்டு வந்தன. இவ் வேறுபாடுகள் காலக்கிரமத்தில் அதிகரித்து முடிவில் பாஷையே வேறாக மாறி மலையாளத்திலுள்ளவர்களுக்குத் தமிழ் பொருள் விளங்காமலும் தமிழர்களுக்கு மலையாளம் பொருள் விளங்காமலும் ஆகிவிட்டது. இம்மலையாள பாஷை இப்போதைக்கு சுமார் 500, 600 வருஷத்திற்குள்ளாகவே உற்பத்தியானது என்று எல்லாரும் ஒப்புக் கொண்ட விஷயம். ஆதலால் பாஷையின் உற்பத்தி என்று சொல்லுவதில் அனுபவத்திற்கு விரோதமானது ஒன்றும் இல்லை.

இப்படி இந்த இரண்டு பாஷைகளும் பேதப்பட்டிருந்தபோதிலும் தமிழ் நன்றாகத் தெரிந்த ஒருவன் மலையாளத்தை ஒரு மாதத்தில் கற்றுக்கொள்ளலாம்.

(i) தமிழில் காலங்காட்டும் முற்றுவினைகள் பெரும்பாலும் பகுதி, விகுதி, இடைநிலை, ஆகியமூன்று உறுப்புகள் சேர்ந்து உண்டாகின்றன; சிறுபான்மை நாலாவது உறுப்பாகிய சாரியையும் சேரும். மலையாள வினைகள் பகுதியும் காலங்காட்டும் சிலஇடைச்சொற்களும் சேர்வதினால் உண்டாகி ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக இருக்கின்றன. தமிழில், 'கொடுத்தேன், 'கொடுத்தோம், 'கொடுத்தாய், 'கொடுத்தீர், 'கொடுத்தான்,' 'கொடுத்தாள், 'கொடுத்தார்,' கொடுத்தது, 'கொடுத்தன, என வரும் இறந்தகால முற்றுக்கள் மலையாளத்தில் ஞான், ஞங்கள், நீ, நீங்கள் &c. கொடுத்து, என ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகி விகுதியில்லாமல் வரும். இப்படியே நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் ஞான், ஞங்கள் &c. கொடுக்குன்னு, ஞான், ஞங்கள் &c. கொடுக்கும், எனவரும். இவ்விகுதியின்மைதான் இந்த இரண்டு பாஷைகளுக்கும் உள்ள முக்கியபேதம். இப்படி பேதம் வரக்காரணம் என்னவென்று கேட்டால் தமிழிலும்

இப்படியே ஒரு காலத்தில் பகுதியும் காலங்காட்டும் இடைச் சொற்களும் சேர்ந்த எச்சங்களை முற்றுக்களாக பாவித்திருக்கவேண்டுமென்றும், பிற்காலத்தில் ஏன், ஏம், ஓம், ஆய், ஈர், அவன், ஆன், முதலிய ஸர்வநாமங்களையும், ஸர்வநாமத் திரிபுகளையும், அவ்வெச்சங்களுடன் சேர்த்து முற்றுக்கியிருக்க வேண்டுமென்றும் பாஷாசாஸ்திரத்தில் வல்ல வித்துவான்கள் சொல்லுகிறார்கள். மலையாளத்தில் ஆதியில் ஏற்பட்ட விகுதி இல்லா வழக்கு இப்பொழுதும் நடைபெறுகிறது.

(ii) பெயர்ச்சொற்களில் சில உட்பிரிவுகள் நான்காம் வேற்றுமையில் கு உருபுக்கு பதிலாக நு என்னும் உருபைப் பெறும்.

(iii) சில கூட்டெழுத்துக்களின் உச்சாரணத்தில் மலையாள வழக்கு பெரும்பாலும் தமிழில் கிராமிய வழக்கை ஒத்திருக்கிறது. செந்தமிழில் 'படித்து,' 'உடைத்து,' 'ஓடிந்து' 'உடைந்து,' 'கழிந்து,' 'வந்து,' 'இருந்து, 'கொன்று,' சென்று, 'அங்கு,' 'இங்கு,' என்று வருவன—மலையாளத்தில் 'படிச்சு, 'உடச்சு,' 'ஓடிஞ்சு,' ஓடிஞ்ஞு, உடஞ்சு, உடஞ்ஞு கழிஞ்சு கழிஞ்ஞு, வன்னு,' இருன்னு, கொன்னு சென்னு, அங்ஙு, இங்ஙு, என வரும்.

(iv) மலையாளத்தில் வடமொழிச் சொற்கள் தமிழிற்காட்டிலும் அதிக ஏராளமாகப் பிரவேசம் பெற்றிருக்கின்றன.

இவைதான் இவ்விரண்டு பாஷைகளுக்கும் உள்ள முக்கிய பேதங்கள்.

3. பாஷைகள் மாறிப்போகும் விதம் :—ஒரேபாஷையைப் பேசிக்கொண்டிருந்த ஒரு ஜாதியார் ஜனத்தொகை அதிகப்படுவதால் பல பிரிவுகளாகப்பிரிந்து வேறு தேசங்களுக்குப் போகும்படி நேரிட்டுப் பிரிவுகள் ஒன்றுக்கு ஒன்று போக்குவரத்து இல்லாமலே போய்விடலாம். புதிதாகக் குடியேறின தேசங்களில் இதரஜாதியாருடன் வியாபாரங்கூட்டுறவு முதலியவை ஏற்படுவதால் திசைச்சொற்கள் ஏராளமாகப் பாஷையில் பிரவேசம் பெற்று, உச்சாரண பேதங்களும் இலக்கண வேறுபாடுகளும் உண்டாகி, ஆதியில் பேசிவந்த பாஷை முன் உரு அறியமுடியாத பல பாஷைகளாக மாறிவிடலாம். இப்படி மாறிவிடினும் அவை ஆதியில் ஒருபாஷையாக இருந்தன வென்று தீர்மானம் செய்தல்கூடும். இதில் கவனிக்கவேண்டிய

அம்சங்கள் இரண்டு:—(i) பெயர், வினை, இடை, உரியென்று நான்கு கூறுகளாகப் பிரிக்கப்பட்ட சொல் தொகுதி முதலாவது அம்சம், (ii) பெயர்ச் சொற்களின் வேற்றுமையும், இடை நிலை விகுதி முதலியவற்றால் வினைகளுக்கு உண்டாகும் வேறுபாடும் உள்ளடங்கிய இலக்கணம் இரண்டாவது அம்சம். சொற்களின் தொகுதியாகிய முதல் அம்சத்தில் அநேக உட்பிரிவுகள் உண்டு. அவற்றுள் முக்கியமானவை:—(a) ஒன்று இரண்டு, மூன்று முதலிய எண்ணுப் பெயர்கள் (b) நான், நீ, நாம், நீர், அவன், அவள், அவர், முதலிய. ஸர்வ நாமங்கள் (c) தலை, மயிர், செவி, கண், மூக்கு, வாய் கை, கால், அடி முதலிய உறுப்புப் பெயர்கள் (d) நிலம், நீர், தீ, வளி பூனை, நாய், ஆடு, மாடு, மரம் கோழி, முதலிய சாதாரண வஸ்துப் பெயர்கள், (e) நட, நில், இரு, வா, போ, உண், படு, முதலிய ஸாதாரண வினைப் பகுதிகள (f) தந்தை, தாய், ஆய், அண்ணன், தம்பி, தங்கை, பிள்ளை, மகன், கொழுநன், முதலிய முறைப்பெயர்கள். இப் பிரிவுகளும் இவை போல்வன பிறவும் எல்லா பாஷைகளுக்கும் இன்றியமையாச் சொற்களாம். சீர்திருத்தமேயில்லாத மலைசர், காடர்களுடைய பாஷைகளும் மேற் கூறிய உட்பிரிவுகள் இன்றி நடைபெறா. இவ்வுட்பிரிவுகளுக்கு மூலமொழிகள் என்று பெயரிடலாம். இம்மொழிகளும் இலக்கணமும் இரண்டுபாஷைகளில் ஒருவாறு ஒத்திருந்தால் அப்பாஷைகள் ஒன்றுக்கு ஒன்று ஸம்பந்தப்பட்டவை என்றும் ஒரே மூலபாஷையிலிருந்து உற்பத்தியானவை என்றும் சொல்லி விடலாம்.

4 கால்ட்வெலின் திராவிட ஸித்தாந்தம்—: இப்படி பரிசோதனை செய்துதான் போன நூற்றாண்டில் தென்னிந்தியாவில் மிக்க புகழுடன் விளங்கிய பிஷப்கால்ட்வெல் (Bishop Caldwell) என்பவர் தமிழ், மலையாளம் தெலுங்கு, கன்னடம், துளு, குடகு முதலிய தென்னிந்திய பாஷைகள் ஒன்றுக்கு ஒன்று நெருங்கிய ஸம்பந்த முடையவை என்று தீர்மானித்து, அப்பாஷைகளை ஆதியில் பேசி வந்த ஜாதியாருக்கு திராவிடர்களென்றும் அப்பாஷைகளுக்கு திராவிடம் என்றும், பெயர்களைக் கல்பித்து, 'திராவிட இலக்கணம்' என்ற ஒரு நூலை எழுதினர். இத்திராவிடர்கள் ஆதியில் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் அல்லவென்றும், ஐரோப்பா விற்கும் ஆசியாவுக்கும் மத்தியப் பிரதேசங்களில்

ஆரியர், ஸெமிடிக்கர், துரேனியா, பக்கல் இவர்கள் ஆதியில் வதிந்திருக்க வேண்டுமென்றும், பிறகு இந்தியாவில் வந்து குடியேறி இருக்க வேண்டு மென்றும் இந்தியாவுக்கு ஆரியர்கள் வருவதற்கு முன்னாலேயே திராவிட பாஷைகள் பரிபூர்ணத்தை அடைந்து விட்டன வென்றும், ஆரியர்கள் வந்த பிறகு இரு ஜாதியாருக்கும் ஏற்பட்ட கூட்டுறவினாலும், ஸாமீப்யத்தினாலும் பயிற்சி ஸம்பந்தமான ஆரியமொழிகள் ஆயிரக்கணக்காக திராவிட பாஷைகளில் பிரவேசம் பெற்றபோதிலும்இப்பாஷைகளின் மூலமொழிகளும் இலக்கணமும் மாறவில்லை என்றும், திராவிட பாஷைகளுக்கு இந்த இரண்டு அம்சங்களிலும் நெருங்கிய ஸம்பந்தமுடையபாஷைகள் இந்தியாவில் இல்லையென்றும், ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் வழங்கிவருகிற துர்க்கி, பின்னிஷ், மாகியார், லாப்லாண்டிஷ் முதலிய துரேனியன் பாஷைகளே அப்படி ஸம்பந்தப்பட்டவை என்றும், மேற் கூறிய திராவிட இலக்கணத்தின் முகவுரையில் விஸ்தாரதம் செய்யப்பட்டிருக்கிறது.

5 ஸ்டென்கோனோ முதலியவர்களின் கொள்கை—: இந்த விஸ்தாரத்தில் சில அம்சங்களை இதர வித்துவான்கள் ஒப்புக்கொள்ள வில்லை. எல்லா பாஷைகளுக்கும் பொது வாயிருக்கிற அம்சங்களில் சில திராவிடத்துக்கும் துரேனியனுக்கும் பொதுவாயிருக்கிறது கண்டு பிரமித்து இந்த இரண்டு குலங்களுக்கும் விசேஷமான ஸம்பந்தமிருக்கிறதென்று கால்ட்வெல் (Bishop Caldwell) தப்பு விஸ்தாரம் செய்துவிட்டாரென்றும், திராவிடம் என்பது வெளிதேசங்களில் ஸம்பந்தமில்லாத ஒரு தனிக்குலம் என்றும், பெரும்பான்மையோருடைய அபிப்பிராயம். ஆனால் ஆரியத்துக்கும் திராவிடத்துக்கும் கால்ட்வெல் ஒப்புக்கொண்டதைக்காட்டிலும் நெருங்கிய ஸம்பந்தம் இல்லை என்பதே எல்லா ஐரோப்பிய வித்வான்களுடைய கொள்கையும் (Professor Sten Konow in *The Linguistic Survey of India* Vol IV p 282.)

6 இந்த வியாசத்தில் வெளியிடும் கொள்கை:—பிஷப் கால்ட்வெலின் திராவிட இலக்கணத்தின் முகவுரையில் தமிழ்ப பாஷையின் மூல மொழிகளில் அறுபதை அவற்றிற்குநேரான ஆரிய மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கி இவ்விரண்டு பாஷைகளுக்கும் ஸம்பந்தமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆரிய மொழிகள் ஸம்ஸ்கிருதத்தி

விருந்து எடுபட்டிருக்கின்றனவே ஒழிய வைதிக பாஷையி லிருந்தல்ல. உதாரணமாக, மயிர் செவி, வாய், கண், இரவு, தீ, ஊர், எருமை, வெள், பெரு என்னும் தமிழ் மொழிகளை கேச (केश) கர்ண, (कर्ण) முக (मुख) அக்ஷி (अक्षि) நக்த (नक्त) அக்நி (अग्नि) க்ராம (ग्राम) மஹிஷ (महिष) சுக்ல (शुक्ल) மஹத் (महत्) என்னும் பதங்களோடு ஒப்பிட்டுப்பார்த்திருக்கிறது. இப்படிக்கில்லாமல் ச்மச்ரு (स्मश्रु) ச்ரவஸ் (श्रवस) வாச் (वाच्) அக்ஷன் (अक्षन्) ராத்ரி (रात्रि) தேஜஸ் (तेजस) பூர் (पूर) ஸைரிப (सैरिभ) ச்வித்ர (श्वित्र) ப்ருஹத் (बृहत) என்னும் பதங்களோடு ஒப்பிட்டால் இரண்டு பாஷைகளுக்குமுள்ள ஸம்பந்தம் வெளியாகும், வேதத்தில் वाच[1] (வாச்) என்பதற்கு 'வாய்' என்னும் பொருளும் உண்டு வடமொழியில் பட்சிகளின் மூக்குக்கும், திர்யக் ஜந்துக் களின் மூஞ்சிக்கும் (Snout or muzzle) मुखम् (முகம்) என்றே பெயர புராதன சாஸனங்களில் பாண்டூபுரம (I. A. Vol. XI. P. 69) தசபுரம் (E. I. V. P. 38) ராஜ்யபுரம் (E. I. III. P. 265) என்றிருந்தவை இப்பொழுது ஆரேர், தசேர், ராஜோர், என மாறியிருக்கின்றன. ஆதலால் வாய், மூக்கு, ஊர் என்பவை ஆரிய மொழிகளின் திரிபுகள். இப்படியே இதர வித்துவான்களும் திராவிடத்தை ஸம்ஸ் கிருதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தார்களே ஒழிய பிராகிருதங் களோடு ஒப்பிடவில்லை. ஸம்ஸ்கிருதத்துக்கு வைதிக பாஷையே மூலமாயிருந்த போதிலும் அது வித்துவான்களு டைய ஆட்சியினாலேயும் வேறு அநேக காரணங்களினாலே யும் மிக்க மாறுபாடுகளை அடைந்து கடைசியில் ஒரு கிருத் திரிம பாஷையாக மாறிவிட்டது. இப்படியே கிரந்தங்களில் காணப்படும் மகாராஷ்ட்ரீ, பாலி முதலிய பாஷைகளும் முத லில் ஜனங்கள் பேசும் பிராகிருதங்களாக இருந்தும் கடை யில் கிருத்திரிம பாஷைகள் ஆயின. ஒரு பாஷையிலிருந்து மற்றொரு பாஷையில் மொழிகளும் இலக்கண ரூபங்களும் பிரவேசம் பெறுவது ஸாதாரண ஜனங்கள் பேசும் பாஷையி லிருந்து உண்டாகுமேயொழிய புஸ்தகங்களில் காணப்படும் கிருத்திரிம பாஷையிலிருந்திராது. முதலில் ஆரியர்கள்

(1) क्षेम इति वाचि योगक्षेम इति प्राणापानयोः (Taittiriya Upanishad) 'वाक्तआप्यायताम्' इतिवाचं (Srauta Padart..a Nirvachanam P.170)

இந்தியாவுக்கு வந்தபோது பேசின பாஷை வேதங்களில் காணப்படும் வைதிக பாஷை; இதைச் சிலர் பிரதமப் பிராகிருதமென்பர். இந்தப் பிராகிருதத்தோடும், அசோக சக்கிரவர்த்தி காலத்திலும் பிறகும் ஆரியர்கள் பேசிவந்த மத்திமப் பிராகிருதங்களோடும் திராவிட பாஷைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது திராவிடத்துக்கும் ஆரியத்துக்கும் நெருங்கிய ஸம்பந்தம ஏற்படுகிறது என்று எனது கொள்கை. இந்தக் கொள்கையை வெளிப்படுத்துவதற்கே இந்த வியாஸம் எழுதலானேன்.

7 ஆரியர்கள்—:ஆரியர்களில் டியூடானிக், கெலடிக், லத்தின், க்ரீக், ஸ்லவேனிக், ஐரேனியன், இந்தியன், முதலிய அநேக வகுப்புகள் உண்டு. இவர்கள் எல்லாரும் பல்லாயிரம் ஆண்டுக்குமுன் ருஷியாவின்தென்பாகத்தில் ஒருங்கு வசித்தனரென்றும், ஏதோ காரணத்தால் இந்து—ஐரேனியன் என்னும் கூறுர் ஏனையவர்களைவிட்டுப் பிரிந்து கிழக்கு நோக்கிவந்து கிவா (Khiva) என்னும் மருத சிலப் பிரதேசத்தில் கொஞ்ச காலம் தங்கி, ஆக்ஸஸ் (Oxus) ஜக்ஸார்டீஸ (Jaxartes) நதிகளுக்குப் பிரதிகூலமாக மேடேறி கோகண்ட் (Khokand) பதக்ஷான் (Badakhshan) என்னும் மேட்டு பூமிக்கு வந்து அங்கே சிலகாலம் தங்கினார்களென்று ஊகிக்கப்படுகிறது. அங்கிருந்து ஒரு பிரிவார் தெற்குநோக்கி காபூல் (Kabul) நதிதீரத்துக்கு வந்து பிறகு பஞ்சாபில் பிரவேசித்து, ஹிந்துஸ்தானம் முழுதும் பரவி இந்தியா தேசத்தில் குடியேறினார்கள். இவர்கள்தான் நமது முன்னோர்கள்; இவர்கள் பேசின பாஷையிலிருந்து உற்பத்தியான பாஷைகளுக்கெல்லாம் இந்து-ஆரியன் (Indo-Aryan) என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மற்றொரு பிரிவார் கிழக்கும் மேற்கும் பரவி பாமிர்ஸ் (Pamirs) மெர்வ்(Merv) பெர்ஷியா (Persia) பலோசிஸ்தான் (Baloochistan) என்னும் தேசங்களில் குடியேறினார்கள். இவர்கள் வம்சத்தவர்கள் இப்பொழுது பேசும் பாஷைகளுக்கு ஐரேனியன் (Iranian) என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

8 வேதகாலம்—.ஆரியர்கள்முதலில்இந்தியாவுக்கு வந்த காலம் வேதங்களிலுள்ள ஜோதிஷக் குறிப்புகளைக்கொண்டும் வேறு சில ஆதாரங்களாலும் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த நிர்ணயத்தில் மிக்க அபிப்பிராய பேதமுண்டு. சிலர் கி. மு.

13-ம் நூற்றாண்டுபோக்கில் ஆரியர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். வேறு சிலர் கி. மு. 30 வது நூற்றாண்டுக்கு முன்னாலேயே வந்திருக்கவேண்டு மென்கிறார்கள். இந்து-ஐரேனியர் மத்திய ஆசியாவில் ஒருங்கு வசித்த காலம் ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு 500 வருஷத்துக்கு முன்னிருக்கலாம்.

வேதகாலத்துக்குப்பின் நமக்குத் தெரியவரும் பிராகிருதங்களுள் அசோக கல்வெட்டு தர்மசாஸனங்களில் காணப்படும் பாஷைதான் எல்லாவற்றிற்கும் முந்தியது. இது சக்கிரவர்த்தியின் கோர்ட்டு (Court) பாஷையானபடியால் இந்தியா முழுவதும் ஒருவாறு அறியப் பட்டு வந்தது. அந்த காலத்தில் மேற்கே ஆரியவர்த்தத்தில் சௌரசேனியும் கிழக்கே பேஹாரில் மாகதியும், மத்தியில் அர்த்தமாகதியும் தெற்கே மஹாராஷ்ட்ரியும், வடமேற்கே பைசாசியும் பேசப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இவற்றில்நமக்குக் கிடைத்திருக்கும் கிரந்தங்களுள் ஸாதாரண ஜனங்கள் பேசி வந்ததாகநாம்ஒருவாறு ஒப்புக்கொள்ளக்கூடியவை (1) அசோக சாஸனங்களில் காணப்படும் பாஷையும் (2) நாடகங்களில் கீழ் ஜாதியார் பேசிவந்ததாகத் தெரிகிற சௌரசேனியும் (3) கி பி 5 ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சுவேதாம்பிரஜயின கிரந்தங்களில் காணப்படும் அர்த்தமாகதியுமாம். தற்காலத்தில் இந்தியாவில் பேசப்படும் ஆரிய பாஷைகள், கிழக்கு ஹிந்தீ, பங்காலீ, ஒட்ரீ, மராட்டீ, குஜராதீ, ஸிந்தி, லஹந்தா பஞ்சாபீ, நைபாலீ மேற்குஹிந்தீ, வரஜபாஷை, முதலியன வடமேற்குபைசாசீ பாஷைகளுள் முக்கியமானது காஷ்மீர் என்பது.

9 தமிழ்ச் சங்ககாலம்—: தமிழ் நூல்களுள் மிக்க புராதனமானவை இடைச்சங்க காலத்தில் எழுதப்பட்டதாகச் சொல்லுகிற தொல்காப்பியமும், கடைச் சங்க கிரந்தங்களடங்கிய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல், புறநானூறு, பதிற்றுப்பத்து என்னும் எட்டுத்தொகையுமாம். கடைசங்க காலத்தைப்பற்றி மிக்க அபிப்பிராயபேதம் இருக்கிறது. சிலர் இதை கி பி 4-ம் நூற்றாண்டு என்கிறார்கள். கிரீக்கிலிருந்து ஸம்ஸ்கிருத வழியாய்த் தமிழுக்கு வந்த ஓரை (ஹோரா) என்னும் மொழி தொல்காப்பியத்திலேயே காணப்படுவதாலும் வேறு அநேக காரணங்களாலும் சிலர் சங்ககாலமே 5-ம்

நூற்றாண்டுக்கு முன்னில்லை என்கிறார்கள். கல்வெட்டு சாஸன பரிசோதகர்கள் (Epigraphists) சங்ககாலம் கி. பி. 6-ம் நூற்றாண்டு என்கிறார்கள்.

10. பாண்டி நாட்டுப் ப்ராஹ்மீ கல்வெட்டுகள்:—பதினைந்து வருஷங்களாகப் பாண்டி நாட்டில் குகைகளில் ஆங்காங்கு கண்டுபிடிக்கப்பட்ட பிராம்மீ லிபிக் கல்வெட்டுகள் இவ்விடத்தில் குறிப்பிடற்பாலன. லிபியிருந்து இவை கி. மு. 2-வது. 3-வது நூற்றாண்டில் வெட்டப்பட்டன வென்று நிச்சயமாய்ச் சொல்லிவிடலாம். அது முதல் கி. பி. 8-ம் நூற்றாண்டு வரையில் பாண்டிய நாட்டில் கல்வெட்டாவது தாம்பிர சாஸனமாவது ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எட்டாம் நூற்றாண்டு முதல் பாண்டி நாட்டில் ஏற்பட்டிருக்கும் கல்வெட்டிலும் சாஸனங்களிலும் உபயோகப்படுத்தியிருக்கும் வட்டெழுத்து பிராம்மீ லிபியிலிருந்து உற்பத்தியான தென்று காலம் சென்ற டி. ஏ. கோபிநாத ராயரவர்கள் (T. A. Gopinatha Row) நிரூபணம் செய்திருக்கிறார் (Trav Arch; Series Vol I pp. 283 ff)

சென்ற 1919 வருஷம் பூனாவில் நடந்த காங்க்ரஸில் ராவ் சாஹிப் எச். கிருஷ்ணசாஸ்திரி அவர்கள் (Rao Sahib H. Krishna Sastri) இக்கல்வெட்டுகளைப்பற்றி ஒரு வியாஸம் வாசித்தார். இக்கல்வெட்டுகளின் பொருள் விளங்கவே யில்லையாம். சில வார்த்தைகள் नाडु, नादु, ऊर, एरि, (நாடு, ஊர், ஏரி) தமிழாயிருக்கலா மென்றும் மற்ற வார்த்தைகள் ஏதோ பிராகிருத மென்றும் ஊகிக்கலாமே யொழிய இன்ன விஷயம் எழுதியிருக்கிறதென்று தெரியவே இல்லையாம்.

II. தமிழ் நெடுங் கணக்கு.

1. எழுத்தின்முறையும் தொகையும்:—தமிழில் அகர முதல் ஔகார இறுதியான பன்னிரண்டு உயிரெழுத்தும், க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன, எனப் பதினெட்டு மெய்யும், குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆய்தம் ஆகிய மூன்று சார்பெழுத்துக்களும் உள்பட, முப்பத்து மூன்று எழுத்துக்கள் உள. வல்லின மெல்லினங்களுக்குப் பிறப்பிடம் வருமாறு:—

க, ங, முதல்நா அண்ணம் (கண்ட்யம்); ச, ஞ, இடைநா அண்ணம் (தாலவ்யம்); ட, ண, நுனிநா அண்ணம் (மூர்த்தந்யம்); த, ந, நுனிநா பன்முதல் (தந்த்யம்); ப, ம, இருவிதழ் (ஓஷ்ட்யம்); ற, ன, நுனிநா அண்ணம். இடமுறைப்படி றனக்களை ட, ண, வுக்கும் த, ந, வுக்கும் நடுவே வைக்க வேண்டியிருக்க அவைகளை மெய்களுக்கெல்லாம் கடையில் ஒதுக்கியதென்னை? இப்படியே ழ,ள க்களை ர-வுக்கும் ல-வுக்கும் நடுவே வைக்கவேண்டியிருக்க அந்தஸ்தம் என்று ஆரியத்திற்சொல்லப்பட்ட ய, ர, ல, வ, வுக்குப்பின் வைத்ததென்னை? ஆதியில் தமிழிலக்கணங் கூறினவர் வடமொழியிற் பயின்றவரானபடியால் முதலில் கு, சு, டு, து, பு, எனவும் ய, ர, ல, வ, எனவும் ஆரிய முறையைக்காட்டி தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்களை அம்முறைக்குப் பின் வைத்தாரா? அல்லது ஆதியில் தமிழிலக்கணம் எழுதும்போது இச் சிறப்பெழுத்துக்கள் பாஷையிலில்லாமலிருந்து ஆரிய மொழிகளைப் பிறழ உச்சரிப்பதினால் உண்டான புது ஒலிகளுக்காக அவை பிறகு ஏற்பட்டனவா? இரண்டு விதமாய் பதில்சொல்வதற்கும் இடம் உண்டு.

---

* இப்பொழுது கன்னட, தெலுங்கு பாஷைகளின் நெடுங்கணக்கில் கு, சு, டு, து, பு, என்ற ஐந்து வர்க்கங்களிலும் க, ச, ட, த, ப, என்ற ஐந்து முதல் வர்ணங்களைத் தவிர அப்பாஷைகளில் ஸோஷங்களென்று சொல்லப்பட்ட ம, ஜ, ஃ, த, வ, ஆகிய ஐந்து மூன்றாவது வர்ணங்களும் காணப்படுகின்றன. இது ஒரு நூதன வழக்கு என்றும், பூர்வ பூர்வகாலத்தில் தமிழில் மாதிரி அப்பாஷைகளிலும் முதல் ஐந்து வர்ணங்கள் தான் உபயோகப்பட்டுவந்தன வென்றும் ஊகிக்க இடமுண்டு. இந்த விஷயம் இரண்டொரு உதாரணங்களினால் விசதமாகும், राजन् (ராஜன்) 'அரசன்'; धिष्ण्यम् (திஷ்ண்யம்) 'திண்ணை'; दृतिः (த்ர்தி) 'தோல்பை'; द्वारम् (த்வாரம்) 'துவாரம்' என்ற ஆரிய மொழிகளுக்கு राच (ராச), तिन्ने (திந்நெ), तित्ति (தித்தி), तोलि (தொலி), என்ற தத்பவங்கள் தெலுங்கிலும்: दद्रुः (தத்ரு), 'ஓர்வியாதி'; दण्डः (தண்ட), 'தடி'; என்ற ஆரிய மொழிகளுக்கு तद्दु (தத்து), तण्डु (தண்டு), என்ற தத்பவங்கள் கன்னடத்திலும் இப்பொழுது காணப்படுகின்றன. இத் தத்பவங்கள் வெகு புராதன ரூபங்களாயிருக்கவேண்டும். இப்படி ஸோஷ வர்ணங்களில்லாத ஆரிய நெடுங்கணக்கு ஹேமசந்திராசாரியர் முதல் முதல் எடுத்துக் காட்டிய சூலிகபைசாசிகம் ஒன்றில் மாத்திரம் தான் காணப்படுகிறது. (Hemachandra IV—325.)

2. வல்லெழுத்தின் உச்சரிப்பு:—இன மெல்லெழுத்துக்குப் பின்வரும் க, ச, ட, த, ப, என்னும் வல்லெழுத்துக்கள் முறையே ग, ज, ड, द, ब, போல் ஸரள உச்சரிப்பை உடையன.

மொழி முதலிலும் மெய்களுக்குப் பின்னும், இரட்டித்துவரினும் க கரம் வல்லினமாய் உச்சரிக்கப்படும்: அதாவது, இங்கிலீஷ் K (கே) ஸம்ஸ்கிருத क (க) மாதிரி. உயிரேறிய க கரம், உயிரின் பின்னும், ய ர ல ழ ள என்னும் மெய்களின் பின்னும், இங்கிலிஷ் H மாதிரியாக உச்சரிக்கப்படும்; இதற்கு நேரான உச்சரிப்பு रामः करोति (ராம: கரோதி) என்பதில் ஜிஹ்வா மூலீயம் जिह्वामूलीय என்றுவடமொழியில் சொல்லப்படுகிற விஸர்க்கத்தின் (विसर्ग) உச்சரிப்புத்தான்.

ப கரம் மொழி முதலிலும், ற கர ட கரமெய்களுக்குப் பின்னும், இரட்டித்து வரினும் வல்லினமாய் உச்சரிக்கப்படும். [இங்கிலிஷ் P ஸம்ஸ்கிருத प]—உயிரேறிய ப கரம் உயிரின் பின்னும் ய ர ல ழ ள என்னும் மெய்களின் பின்னும், இங்கிலிஷ் F மாதிரியாக உச்சரிக்கப்படும். இதே உச்சாரணம்தான் रामःपश्यति (ராம:பச்யதி) என்னும்தொடரில் விஸர்க்கத்துக்குக் கொடுக்கப்படும் உபத்மானீயம்(उपध्मानीय) என்னும் ஒலி.

ச இரட்டித்துவரினும் ற கர ட கரங்களுக்குப் பின்வரினும் வல்லினமாய் ஸம்ஸ்கிருத ச (च) மாதிரி உச்சரிக்கப்படும். மற்ற எல்லா இடங்களிலும் ஸம்ஸ்கிருத (श) மாதிரி உச்சரிக்கப்படும்.

த கரம்மொழி முதலிலும் இரட்டித்து வரினும் வல்லினமாய் உச்சரிக்கப்படும். மொழியிடையில் உயிரேறிய த கரம் ய, ர, ழ, வுக்குப்பின்னும், உயிருக்குப்பின்னும், ஸம்ஸ்கிருத த (द) மாதிரி உச்சரிக்கப்படும்.

ட கரம் இரட்டித்துவரின் வல்லினமாய் ஸம்ஸ்கிருத ட (ट) மாதிரி உச்சரிக்கப்படும். மற்ற இடங்களில் எல்லாம் ஸம்ஸ்கிருத (ड) மாதிரி உச்சரிக்கப்படும்.

ற கரமெய் இரட்டித்துவரின் த்த வுக்கும் ட்ட வுக்கும் இடையாய் இங்கிலீஷ் T மாதிரி உச்சரிக்கப்படுகிறது; ன்ற என்னும் கூட்டெழுத்தில் ற்ற வுக்கு நேரான ஸரள ஒலி உண்டாகின்றது. மற்ற இடங்களில் எல்லாம் ற கர

மெய் இடையினம் ஆகவே ஒலிக்கப்படுகிறது என்று சொல்லிவிடலாம். இம்மெய் உலக வழக்கில் பயின்றுவாராததினால் இதன் ஒலியைப்பற்றி அபிப்பிராய பேதம் உண்டு போலும்.

3. ஆய்தவெழுத்து:—மேற்கூறிய ஜிஹ்வாமூலிய உபத்மானீயங்களுக்கு ஆரியத்தில் தனியாக வரிவடிவில்லை. அவைகளை இரண்டு புள்ளியுள்ள (ः) விஸர்க்கத்தாலேயே குறிப்பிட்டு, क (க) வுக்கு முன் வந்தால் ஜிஹ்வாமூலீயம் என்றும் (ःक), प (ப) வுக்கு முன் வந்தால் உபத்மானீயம் என்றும் (ःप), கொள்வது வழக்கம். இது காரணம்பற்றி அவைகளைப் பாணினீய சிட்சையில் पराश्रितौ (பராச்ரிதௌ) "அடுத்த பின்னெழுத்தைச் சார்பாக உடையன" என்றும், आश्रयस्थानभागिनः "சார்ந்த எழுத்தின் பிறப்பிடமே இவைகளுக்கும் பிறப்பிடம்" என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. இதே மாதிரி தொல்காப்பியத்திலும்:

சார்ந்து வரினல்லது தமக்கியல்பு இலவெனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியில் தம்மியல்பு இயலும் (பிறப்-19)

எனக்குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற மூன்று சார்பெழுத்துக்கும் இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே ஆய்தம் என்றமொழி आश्रित என்ற வடமொழியின் திரிபு என்பதற்கு ஐயம் இல்லை. இது தமிழ் இலக்கணவிஷயமாய் முதல் நூல் செய்தவர்கள் வடமொழி இலக்கணத்தில் பயின்றவர்கள் என்னும் ஐதிகியத்தை உறுதிப்படுத்துகிறது.

4. குற்றியலுகரம்:—மொழியீற்றில் வரக்கூடிய மெய்கள் பதினொன்று:— ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள. தமிழில் பிரவேசம் பெறும் திசைச்சொல்லாவது வடசொல்லாவது வல்லெழுத்தில் முடிந்தால் அச்சொல்லை உச்சரிக்கும்போது ஒரு குற்றுகரம் கடையில் கூட உச்சரிக்கப்படுகிறது. தொல்காப்பியனார்

"மெய்யீறெல்லாம் புள்ளியொடுநிலையல்" எனவும்,
"குற்றியலுகரமும் அற்றெனமொழிப" எனவும்,

சூத்திரம் செய்திருக்கின்றமையால் (புணரியல் 2 & 3) ஆதிகாலம் தொட்டு இக்குற்றியல் உகரம் மொழி ஈற்றில் வராத வல்லின மெய்களை உச்சரிப்பதற்காக ஏற்பட்ட ஸாதனம் என்று தெரிகிறது. வடக்கே வழங்கிவரும் ஆரிய

பாஷைகளில் மொழிகளின் ஈற்றிலுள்ள குற்றுயிர்கள் உச்சரிக்கப்படுகிறதில்லை. கேசவ் சந்த்ர ஸேனை, ராம மோஹன ராய, மதன மோஹன மாளவ்ய, என்னும் உலகப் பிரஸித்திபெற்ற மகான்களுடைய பெயர்கள் கேசப் சந்தர் ஸேன், ராம்மோஹன் ராய், மதன் மோஹன் மாளவ்ய், என்று வடக்கே உச்சரிக்கப்படுவது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்படியே ரூப, ராஜ, அமச்ச, தூத, கடுக, அக்ஷ, கோள, வலய, என்னும் ஆரிய மொழிகள் வட ஆரிய பாஷைகளில் ரூப், ராஜ், அமச்ச், தூத், கடுக், கோள், வலய் என உச்சரிக்கபடும். இவைகளில் கடையிரண்டும் சோல், வளை, என தமிழில் வழங்கும். ஏனை ஆறும்வல்லெழுத்தில் முடிவதால் உருபு, அரசு, அமைச்சு, தூது, கடுகு, அச்சு எனக் குற்றியலுகர வீறுகவே வரும். அல்லாமலும் முதலில் முற்றுகரமாயிருந்தது தொடர்ச்சொல் வீற்றின் கண் வந்தால் படுத்தல் வாய்ப்பட்டு குற்றுகரமாகும். 'அது' என்பதன் முற்றுகரம் 'குறியது' என்பதில் குற்றுகரமாயிற்று.

5. மெய்யீறு மாறுதல்:—இப்படியே அல்லாமல் த, ற, ட, மெய்களில் முடியும் சில மொழிகள் குற்றுகரம் பெறுமல் ஈற்று மெய்மாறித் தமிழில் வழங்குவது முண்டு. அப்படி மாறும்போது ட கரமெய் ஏறக்குறைய தனக்கு ஒத்த இடத்தில் உண்டாகும் ழ; ண, ள க்களில் ஒன்றாக மாறும். ற் கர தகரமெய்கள் ல அல்லது ன ஆகமாறும். பாடு (கஷ்டம்) என்பது ஈற்றுகரம் கெட்டு பாழ் எனவும் தமிழில் வழங்குகிறது. மாடு, நாடு என்பவை மாழ், நார், எனச் சில கிராமியங்களில் காணப்படுகின்றன.[1] பொருட்டு, காற்று என்பவை பொருள், கால், எனவும் தமிழில் வழங்குகின்றன.

மலையாளபாஷையில் வழங்கிவரும் வடமொழிகளின் ஈற்றிலும், ஸமாஸ இடையிலும் உள்ள त (த) கர, द (த) கர, மெய்களை ல கர மெய்போல உச்சரிக்கிறார்கள்.[2] (உ-ம்) தஸ்மாத், ஸாட்சாத், தைவவசாத், குருமுகாத், உத்ஸாஹம், தாத்பர்யம், சமத்காரம். இந்த உதாரணங்களில் உள்ள த கர மெய்யீறுகள் ல கரம் போல் மலையாளத்தில் உச்சரிக்கப்படுகின்றன. முதல் மூன்றுபோல் ஐந்தாம் வேற்றுமை உருபு கூடிய வடமொழிகள் தமிழில் வருவதில்லை. ஏனை மூன்றும்

1. L. S. of India Vol IV. pp 347 and 480.
2. Gundert. Mal. Eng. Diction (1872) p. XIV.

உற்சாகம், தாற்பரியம், சமற்காரம் என த-கரத்திற்கு மாறுக ற-கரம் பெற்றுத் தமிழில் வரலாம். இப்படி த கர மெய்க்கு மாறுக ல கர ழ கரங்கள் வருவது ஒரு உச்சா ரண பேதத்தைக் காட்டுகிறது.

மெல், மென், மிருது, மெத:—मृदु, 'மிருதுவான, சாந்த முள்ள, வேகமில்லாத' இவ்வடமொழி தமிழில் மிருது எனவும் மெது எனவும் காணப்படுகிறது. மெது என்பதின் ஈற்று கரம் கெடவே அது கீழ்வரும் உதாகரணங்களில் உள்ள மெல், மென் என மாறுகிறது. (உ-ம்) – மெல்லினம், மென் கணம், மென்பால், மெல்ல மெல்லப் போனன், மெல்லியார் தோள் சேர்.

மெல், மிதி.—मृद् மிதிக்கிறது அரைக்கிறது' இவ் வடமொழிதான் '(பல்லால்) மெல்லுதல்' என்பதிலுள்ள வினைப்பகுதிக்கு மூலம் போலும். இது வட இந்திய பாஷை களிலேயே मल्, मळ् 'அரைக்கிறது' எனமாறி இருக்கிறது! ம்ருத் மண், மட்டி:—मृद् 'மண், களிமண்.' இந்த வடமொழி ति (தி) का (கா) என்னும் பிரத்தியயங்களைப்பெற்று, मृत्तिका என்னும் ரூபத்தை அடைந்து, தெலுங்கில் மட்டி என மருவி அதே பொருளில் வழங்குகிறது. தமிழிலும் 'மட்டிப் பூச்சு' என்றால் 'மண்சாந்துப் பூச்சு' என்பது பொருள், இவ்வடமொழிதான் மேற்கூறிய பிரத்தியயங்களில்லாமல் தமிழ் மலேயாளத்தில் மண் எனவும், தெலுங்கில் மனு, மன்னு எனவும் வழங்குவது. தமிழில் மருதம் என்ற நிலத் திணைப்பெயர் मृदु அல்லது मृद् என்பதன் திரிபுபோலும்.

திண், திண்ணிய திடம்:—दृढ 'வலிமையுள்ள, உறுதி யான' இவ்வடமொழி திட என்னும் ரூபத்துடன் தமிழில் பிரயோகப்பட்டு வருகிறது. ஈற்று அ கரம் கெட்டு ட கர மெய் ண கரமாக மாறுவதினுல் உண்டாகும் திண் என்னும் ரூபமும் உண்டு.

சிமிழ், நிகழ், தமிழ்:—संपुट(ஸம்புட,)'சிறுபெட்டி,கூண்டு; निकट (நிகட)' சமீபத்திலுள்ள'; द्रमिड (த்ரமிட) दमिड (தமிட) 'தமிழ்'; இந்நான்கு வடமொழிகளும ஈற்று அகரம் இழந்து குற்றுகரம் பெறுமல் சிமிழ், நிகழ், தமிழ் என வழங்குகின்றன.

'தமிழ' என்பது ஆதிகாலந்தொட்டு இந் நாட்டுச் சாதி யாருக்கு உள்ள பெயர் என்றும் அது द्रमिड அல்லது दमिड

1. Beames I p. 243.

வின்மருஉ அல்ல வென்றும் சிலர் வாதிப்பதுண்டு. ஸ்டேன் கோனோ (Professor Stenkonow) காட்டியபடி "இச் சாதியார் பெயர் பாலி பாஷையில் எழுதப்பட்ட மஹாவம் சத்திலும், அர்த்தமாகதியில் எழுதிய சுவேதாம்பர ஜைன கிரந்தங்களிலும், பிராகிருத கிரந்தங்களில் புராதன பாடங் களிலும், दमिळ எனக் காணப்படுகிறது. வராஹமிஹிரர் பிருகத்ஸம்ஹிதையில் द्रमिड, द्रविड எனக் காணப்படுகிறது. தாராநாதர் எழுதிய புத்த ஸமய சரித்திரத்திலும், பழ மலையாளத்தில் எழுதிய புராணங்களிலும், வாதாமிக் கடுத்த மஹாகூட என்னும் ஊரிலுள்ள சளுக்கி அரசன் மங்களீசன் ஸ்தம்பக் கல்வெட்டிலும்,दमिल என்று காணப்படுகிறது. புராதன க்ரீக் கிரந்தங்களில்(Classical Writers)दिमिरिके, दमिरिके என்னும் ரூபங்கள் காணப்படுகின்றன"(1) பூர்வத்திலிருந்து இந்தப் பெயர் தமிழ் என்றிருந்தால் அதை இதர ஜாதியார் களெல்லாரும் द्र அல்லது द என்ற முதலெழுத்துடன் உச்சரிக்க நியாயமில்லை. ஆதலால் தென்னிந்தியாவில் குடி ஏறிய ஜாதியார் வடக்கிலிருந்து வரும்பொழுது (द्र) அல்லது द (2) என்பதை முதல் எழுத்தாக உடைய ஒரு பெயரை வகித்திருக்க வேண்டும் என்பதும், அப்பெயர் காலக்கிரமத் தில் தென்னிந்தியா உச்சரிப்பினால் வேறுபட்டு தமிழ் என மாறியிருக்க வேண்டும் என்பதும் திண்ணம்.

III ஆரியச் சிதைவுகள்.

நன்னூலார் காலத்தில் தமிழில் வரும் ஆரிய மொழி களைப் பொது எழுத்தாலும் ஆரியத்துக்கே உரிய சில சிறப் பெழுத்தாலும் ஈரெழுத்தாலும் எழுதுவது வழக்கம் 'பெய ரியல்-17' தொல்காப்பியனார்

'வட சொற்கிளவி வட வெழுத்தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே' எனவும்,

'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' எனவும் சூத்திரம் செய்தமையால் (எச்சவியல் 5-6) அவர் காலத்தில் ஆரியச் சொற்களைத் தமிழெழுத்துக் கொண்டே எழுத வேண்டுமென்ற நியமம் உண்டென ஏற்படுகிறது. தமிழ்

---

(1) Linguistic Survey of India Vol. IV p. 298.

(2) வரருசியின் III 4 சூத்திரப்படி द्र என்னும் கூட்டெழுத் துக்கு என்ற விகல்ப ரூபமுண்டு.

நெடுங்கணக்கில் ஊஷ்மாக்களுக்கு தனியெழுத்துக்கள் இல்லாததினாலும் ஒவ்வொரு வர்க்கத்திலும் மெல்லெழுத்துள்பட இரண்டே எழுத்து உள்ளமையாலும் தமிழில் வந்தவடமொழிகள் ஒலிமாறியும், அளவுகுன்றியும், வேறு பலவிதமாகச் சிதைந்தும், ஒரு பொருள் குறித்த பல சொல்லாயும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாயும், அரிதுணர் பொருளனவாய்க் கிடக்கின்றன. அல்லாமலும் தனிச் ச காரமெய் பெரும்பாலும் ஊஷ்மா மாதிரி உச்சரிக்கப் படுவதினால் அநேக வார்த்தைகளில் கெட்டே போய்விட்டது. இதே காரணத்தினால் தனிப் ப காரமெய் வ காரமாய் மாறியும் தனிக் க காரமெய் அநேக இடங்களில் கெட்டும் போய்விட்டன. விராடநாட்டில் பாண்டவர்கள் அக்கியாத வனவாஸம் செய்தபோது எப்படி அவர்களைப் பழகின நண்பர்களாலும் அறிய முடியாமற் போயிற்றோ அப்படியே தமிழிலிருக்கும் சில வடமொழிச் சிதைவுகளை அறிய முடியாமலிருக்கிறது. ஆதலால் தமிழுக்கும் ஆரியத்துக்கும் மூலமொழிகளில் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறதென்று கண்டு பிடிப்பது சிரமஸாத்தியமான காரியம். இந்த விஷயம் வட மேற்கிலுள்ள பைசாசீ பாஷைகளின் மூல மொழிகளைத் தமிழ் மூல மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒழிய முடிவுபெறாது. இவ்வியாஸத்தில் இலக்கணத்தில் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறதென்பது மாத்திரம் ஆராயப்படும். ஆயினும் வடமொழிகள் எவ்வளவு சிதைந்திருக்கின்றனவென்பதை காட்டப் பின் வரும் குறிப்புகள் எழுதப் பட்டிருக்கின்றன.*

2. கிராம்யமும் உலகவழக்கும்—இலக்கண நூல்களுக்கு ஆதிமூலமாய் உள்ளவை உலகவழக்கும் கிராம்யமும் தான். மலையாளவழக்கு தமிழில் கிராம்யம் என்று தள்ளுண்டு நூல்களில் எடுத்தாளாததான ஒரு வழக்கு. இதை ஆதாரமாகக் கொண்டுதான் இப்பாஷையில் காப்பியங்களும் உக்கிரந்தங்களும் இலக்கணநூல்களும் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன. இதரபாஷைகளும் இப்படித்தான் முதல்முதல் ஏற்படுகின்றன. புத்தர் பாமரஜனங்களுக்கு தர்மோபதேசம் செய்வதற்காக அந்த ஜனங்கள் பேசும் உலகவழக்கைத் தான் எடுத்துக்கொண்டார். அதுதான் பிற்காலத்தில் வியாகரண ஸம்ஸ்காரங்களை அடைந்து பாலி என்ற கிருத்திரி

* இக்குறிப்புகளை சில நண்பர்களுடைய அபிப்பிராயத்துக் கிணங்க இவ்விடத்தில் மிகவும் விரித்து அச்சிட்டிருக்கிறது.

ம் பாஷையாய் மாறிவிட்டது. ஒரு பாஷையிலிருந்து மற்றொரு பாஷையில் பிரவேசம்பெறும் சொறகளும் இலக்கண ரூபங்களும் உலக வழக்கிலிருந்துதான் உலகவழக்குக்குப் போகுமென்றும், தமிழுக்கும் ஆரியபாஷைகளுக்கும் உள்ள ஸம்பந்தத்தை நிர்ணயிக்கும்போது ஆரியத்தில் உலகவழக்கத்திலிருந்த பாஷைகளைத்தான் நாம் ஆராயவேண்டுமென்றும் முன்னுலேயே குறிப்பிட்டிருக்கிறது (I § 6)

ஆரியமூலமொழிகள் ஜனங்கள் பேசிவந்த பிராகிருதங்களில் பலவிதமாய்மாறிக்கிடக்கின்றன. ஒருபாஷையில்மாறின மாதிரி மற்றொருபாஷையில் மாறுகிறதில்லை. ஒரேபாஷையில் ஒரு இடத்தில் மாறினமாதிரி மற்றொரு இடத்தில் மாறுகிறதில்லை. படிப்பில்லாத அநேக லட்சம் ஜனங்கள் பேசும் பாஷையில் இப்படித்தான் மொழிகளும் இலக்கண ரூபங்களும் இடத்துக்கு இடம் மாறும்.

வெகுகாலமாய் நமது பூர்வாசிரியர்கள் செந்தமிழ் என்றும் தமிழ் என்றும் கருதிவந்த மூலமொழிகளிலும் இலக்கண ரூபங்களிலும் பெரும்பான்மையும் ஆரியச்சிதைவு என்பது இவ்வியாஸத்தில் வெளியிடும் கொள்கை. இக்கொள்கைக்குபூர்வாசிரியர் நூல்களில் ஒருவிதமான ஆதாரமாவது மேற்கோளாவது கிடைக்க நியாமில்லை. இப்பொழுது ஆரிய மொழிகள் தமிழ்கிராம்யத்திலும் உலகவழக்கிலும் எவ்வளவு சிதைகின்றன வென்பதையும், புராதன பிராகிருத கிரந்தங்களில் எவ்வளவு சிதைந்து கிடக்கின்றன வென்பதையும் ஆராய்ந்து, தமிழ் மொழிகளிலும் இலக்கண ரூபங்களிலும் இச்சிதைவுகளுடன் பொருளிலும் உருவத்திலும் ஒற்றுமை உடையனவற்றை ஆரியச்சிதைவுகளென்றும். இப்படி ஒற்றுமைஉடையமொழிகளும்ரூபங்களும்ஏராளமாய்க்காணப்படும் பட்சத்தில் ஆரியத்துக்கும் தமிழுக்கும் நெருங்கிய ஆதி ஸம்பந்தம் இருக்கவேண்டும் என்றும், உய்த்துணர்தல்தான் இவ்வியாஸத்தில் உபயோகிக்கும் பிரதானமான கருவி. இவ் விஷயத்தில் மிக்க அபிப்பிராயபேதம் உண்டாகும் என்பதற்கு ஐயமில்லை. ஆதலால இந்தவியாஸத்தில் சொல்வியதை ஒரு ஸித்தாந்தமாகக் கொள்ளாமல், தீர ஆராயவேண்டிய விஷயமாக மாத்திரம் கொண்டு ஆராய்தல் ஆன்றோர்கடன்.

[உய்த்துணர்தல் என்றால் என்ன? உய்த்துணர்தல் =ஊஹித்துணர்தல். உய் என்பது ஊஹி என்ற ஆரியமொழியின் சிதைவு.]

3. செந்தமிழ், கொடுந்தமிழ், திசைச்சொல், வஞ்சி:— தொல்காப்பியத்தில் தமிழின் சொல்தொகுதியை இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல், என நான்கு கூறுகப் பிரித்திருக்கிறது [1] இவற்றுள்முதல் மூன்றும் பிராகிருதங்களுக்கு ஏற்பட்ட தத்ஸம, தத்பவ, தேச்ய, என்ற முக்கூறுக்கு ஒப்ப ஏற்பட்டதுபோலும். தேச்யம் என்பதும் திசைச்சொல் என்பதும் ஒரே மொழி. இயற்சொல் என்பது திரியாத செந்தமிழ். செந்தமிழ் என்பது செவ்விய, அதாவது நேரான, அதாவது கோடாத தமிழ்; செங்கோல் என்பது போல். செம் என்னும் அடையும், ஸம்ஸ்கிருதம என்றமொழியில் ஸம் என்னும் உபஸர்க்கமும், ஒரே பொருளனவாய், सम (ஸம) सम्यक् (ஸம்யக்) என்னும் பதங்களோடு ஸம்பந்தப் பட்டன. இது கீழ்குறித்திருக்கும் திருவள்ளுவநாயனர்குறள்களினுல் விசதமாகும்:—

(a) கண்களவு கொள்ளும் சிறு நோக்கம் காமத்திற் செம்பாகமன்று பெரிது

(b) சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கணி

செம்பாகம் என்றது ஸமபாகம்; சமன் என்றது கோடுதல் என்பதற்கு எதிரிடை; செந்தமிழ் கொடுந்தமிழ், செங்கோல் கொடுங்கோல், என்பதுபோல்

இவற்றில் கோடும் என்றது कुटिल (குடில) कौटिल्य (கௌடில்ய) 'வளைந்த' என்னும் ஆரிய மொழிகளோடு ஸம்பந்தப்பட்டது.

இதே மாதிரி செந்தூக்கு, வஞ்சித்தூக்கு, என்பதில் வஞ்சி என்றது वक्र(வக்ர)वंच् (வஞ்ச்)'வளைதல்' என்னும்ஆரிய மொழிகளோடு ஸம்பந்தப்பட்டது. வஞ்சி என்பதற்கு 'இயல் அல்லாத' 'நேர் இல்லாத' என்பது பொருள் போலும்

வடசொல் என்ற நாலாவது கூறு சிதைந்ததும் சிதையாததுமான ஆரியமொழிகளை உள்ளடக்குமாதல் இயற்சொல் என்ற முதற்கூறில் ஆரியச்சிதைவுகள் உளவோ என ஒரு ஸந்தேகம் ஏற்படலாம். பின்வரும் பாராக்களில்உள்ள உதாரணங்களினுல் முதலிரண்டு கூறிலும் அநேக ஆரியச்சிதைவுகள் உளவென நன்ருய் விளங்கும்.

---

1 தொல்காப்பியம் எச்சவியல் 1-6; நன்னூல் பெயரியல் 13-1

4. விருத்தியும் குணமும்:—ஸம்ஸ்கிருதத்தில் இ-கர உ-கர உயிர்களுக்கு எ-கர ஒ-கரங்கள் முறையே குண உயிர்கள் என்றும், ஐ-கார ஔ-காரங்கள் முறையே விருத்தி உயிர்கள் என்றும் சொல்லப்படும். ஐரோப்பிய பாஷா சாஸ்திரிகள் (Philologists) ஸம்ஸ்கிருதத்திலும் அதனோடு ஸம்பந்தப்பட்ட இதர ஆரியன் பாஷைகளிலும் எ-கர ஒ-கரங்கள்தான் யத்தினமில்லாமல் இயல்பாய் உச்சரிக்கப்படும் உயிர்களென்றும், அவைகளைப் படுத்து உச்சரிப்பதினால் அவை இ-கர உ-கரங்களாக மாறுகின்றன என்றும், எடுத்து உச்சரிப்பதினால் ஐ-கார ஔ-காரங்களாக மாறுகின்றனவென்றும் விஸ்தாரம் செய்திருக்கிறார்கள். (Macdonell's Vedic Grammar § 22)

தமிழில் ஒரே மொழியிலுள்ள உயிர்களைப் பொருளுக்குத் தக்கபடி எடுத்தும் படுத்தும் கூறும் வழக்கம் இப்பொழுது சில உயிரீற்று வினைப் பகுதிகளில் மாத்திரம் தான் காணப்படுகிறது. (கீழ்வரும் IV-வது பிரிவை பார்க்க). மற்ற மொழிகளில் எல்லாம் ஸ்வரம் இயல்பாய் ஆரம்பித்து வரவரத் தணிந்துகொண்டே வருகிறது. சாதாரணமாய் ஒவ்வொரு மொழியிலும் முதல் உயிர் மற்றை உயிர்களைக் காட்டிலும் எடுத்து உச்சரிக்கப்படுகிறது; கடை உயிர் மற்றை உயிர்களைக் காட்டிலும் படுத்து உச்சரிக்கப்படுகிறது (Caldwell's Dravidian Grammar p. 85). இது காரணம்பற்றியே போலும் இகழ், இசைவு, இடம், இணக்கம், இதம், இறும், இமைத்தல், இயல், இலை, குகை, குசவன், குடம், குணம், சுமை, சுயம்பு, சுரை, புலம்பு, குவளை முதலிய செந்தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் காணப்படும் மொழிகளிலுள்ள முதல் உயிர்களாகிய இ-கர உ-கரங்கள் எகழ், எசைவு, எடம், எணக்கம், எதம், எறும், எமைத்தல், ஏற்கனவே, எலை, கொகை, கொசவன், கொடம், கொணம், சொமை, சொயம்பு, சொரை, பொலம்பு, கொவளை என எ-கர ஒ-கரங்களாக உலக வழக்கில் உச்சரிக்கப் படுகின்றன.

மேற்கூறிய விதி பெரும் பான்மை பற்றிச் சொன்னது. இதற்கு அநேக விலக்குகள் உண்டு; அவற்றை இங்கே கூறிற் பெருகுமென்று சொல்லவில்லை.

எதிர், ஏதில், ஏதிலார் என்னும தமிழ் மொழிகள் இக்காரணத்தால் इतर (இதர), ऐतरेय (ஐதரேய), முதலிய

ரூபங்களிலிருந்து உண்டானவை என்று ஊகிக்கப்படுகின்றன. அன்னியன் என்னும் பொருள் உடைய इतरः (இதர) என்னும் மொழி பகைவன் என்னும்பொருள் கொடுக்குமோ எனின், அதே பொருளுடைய परः (பர) என்பதும் சத்துருப் பொருண்மையில் ஆரியத்தில் வருகிறது. इतर (இதர) என்பதற்கு ஆரியத்திலேயே எதிர் என்ற பொருளும் உண்டு

5. ஸம்பிரஸாரணம் மேற்கூறிய எ கர-ஒ-கர-உயிர்களுக்கு இயைபு உடைய ய-கர-வ-கர-உயிர்மெய்கள் படுத்து உச்சரிக்கப் படும்போது முறையே இ-கர-உ-கரங்களாக மாறுகின்றன (Macdonell's Vedic Grammar § 23) இம் மாறுபாட்டுக்கு ஆரியத்தில் ஸம்பிரஸாரணம் என்று பெயர். यज् (யஜ்) 'வேள்விசெயல்', वच् (வச்) 'பேசுதல்', वप् (வப்) 'விதைத்தல்,, वस् (வஸ்) 'பிரகாசித்தல்', वस् (வஸ்) 'வசித்தல்'; இவ்வினைப்பகுதிகளிலிருந்து इष्ट (இஷ்ட); उक्त (உக்த); उप्त (உப்த) ; उष्ट (உஷ்ட); उष्ट, उषित (உஷ்ட, உஷித); என்ற இறந்த காலச்செயப்பாட்டுப் பெயரெச்சங்களும்: इष्टिः (இஷ்டி), उक्तिः (உக்தி), उप्तिः (உப்தி), उष्टिः (உஷ்டி), என்ற தொழிற் பெயர்களும் உண்டாகின்றன. லிட் என்னும் ல-காரத்தில் (அதாவது இறந்தகாலத்தில்) ययज् (யயஜ்) (ववच् வவச்) என்றுவரவேண்டிய இடத்தில் படுத்துக் கூறுவதினால் इयज् (இயஜ்) उवच (உவச்) ईज् (ஈஜ்) ऊच ஊச் முதலியரூபங்கள் உண்டாகின்றன.

மேற்காட்டிய त (த), ति (தி), என்ற இறந்தகாலச் செயப் பாட்டுப் பெயரெச்சவிகுதியும் தொழிற் பெயர் விகுதியும் ஸம்ஸ்கிருதத்தில் எடுத்துக் கூறப்படுவதினால் அவை வினைப் பகுதிகளுடன்சேரும்போது இப்பகுதிகளிலுள்ள ய-கர-வ-கரங்கள் ஸம்பிரஸாரணத்தை அடைவது ஸஹஜம். இது மாதிரியே (த்வா) என்னும் இறந்தகால வினையெச்ச விகுதியும் எடுத்து உச்சரிக்கப் படுவதினால் இது சேரும் போதும் வினைப்பகுதிகளிலுள்ள ய-கர-வ-கரங்கள் ஸம்பிரஸாரணத்தை அடையும் (உ-ம்) इष्ट्वा (இஷ்ட்வா) 'வேள்வி செய்து', उक्त्वा (உக்த்வா) (சொல்லி)

உபஸர்க்கத்தோடு கூடின வினைப்பகுதிகளுடன் சேர்க்கப்படும் य, त्य, (ய,த்ய) என்னும் இறந்த கால வினையெச்ச விகுதிகள் எடுத்து உச்சரிக்கப் படுகிறதில்லை.

6. புராதன ஆரியச் சிதைவுகள்.பைசாசீஸம்பந்தம். ஆரியர்கள் ஆதியில் இந்தியாவில் குடியேறிய காலத்தில் பேசிய

பிரதமப் பிராகிருதமென்ற வைதிக பாஷையானது - மத்தியமப் பிராகிருதங்களாக மாறிற்று என்றும், இப்பொழுது தட்சிணத்திலும் வட இந்தியாவிலும் பேசப்படும் ஆரிய பாஷைகள் மத்தியமப பிராகிருதங்களிலிருந்து உற்பத்தியானவை என்றும் ஏற்கனவே குறிப்பிடப் பட்டிருக்கிறது. வைதிகபாஷையிலிருந்த கூட்டெழுத்துக்கள் மத்தியமப் பிராகிருதங்களில பல விதமாய் இரட்டித்த எழுத்துக்களாய் மாறிக் கிடக்கின்றன. அம்மாறு பாடுகளில் சில வருமாறு:—

क्त (க்த), प्त (ப்த) = त्त (த்த); ष्ट (ஷ்ட) = ट्ट (ட்ட); स्त (ஸ்த) = त्त (த்க), त्य (த்ய); र्त (ர்த) = ट्ट (ட்ட) பெரும்பான்மையும்; र्थ (ர்ய) = ट्ठ (ட்ட); र्द (ர்த) = द्द (த³த), ड्ड (ட³ட); (த³த), (ட³ட), (ட³ட), र्ध (ரய) = ड्ढ (ட³ட); र्ण (ர்ண) = ण्ण (ண்ண); र्म (ர்ம) = म्म (ம்ம); र्प (ர்ப) = (ப்ப); ष्प (ஷ்ப) = प्प (ப்ப); क्ष (க்ஷ) = क्ख (க்வ) च्छ (ச்அ).

இப்படி மாறுவதும் அல்லாமல் அக்கூட்டெழுத்துக்களுக்கு முன் உயிர்நெடிலிருந்தால் அந்நெடில் குறுகியுமிருக்கிறது. இப்படி கூட்டெழுத்து மாறிய வைதிகமொழிகள் வட இந்திய பாஷைகளுள் ஏராளமாய் அகப்படுகின்றன. ஆனால் அப்பாஷைகளுள் பொரும்பான்மையிலும், (முக்கியமாய் மேற்கு ஹிந்தீ, குஜராதீ, என்ற இரண்டுபாஷைகளில்,) மேற்கூறிய இரட்டை ஒற்றுக்களில் ஒன்று கெட்டும் முன்னுள்ள குற்றுயிர் நீண்டும் இருக்கிறது. பைசாசிபாஷையிலும் பைசாசி ஸம்பந்தப்பட்ட பஞ்சாபீ, லஹந்தா, ஸிந்தீ, முதலிய வடமேற்கு பாஷைகளிலும் முன்னுயிர் நீளுகிறதேயில்லை; இரட்டை ஒற்றுக்களில் ஒன்று சில பாஷைகளில் கெடுகிறது, சிலவற்றில் அப்படிக் கெடுகிறதுமில்லை. இவ்வாறு உண்டான வேற்றுமை காரணமாக சரியாஸன் என்பவர் (Sir George A. Grierson Linguistic Survey Vol. VIII part i pp. 237 ff) தற்கால ஆரியபாஷைகளை இரண்டு கூறுகப் பிரிக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறா. அவர் உதாரணமாக எடுத்துக் காட்டிய இருபத்தொரு மொழிகளுள் பதினொன்று தமிழிலும் இருக்கின்றன. இப் பதினொன்றும் பைசாசி முறையை அடுத்திருக்கின்றன. அவை வருமாறு:—

ஆதிமொழி		பொருள்.	பஞ்சாபி	ஹிந்தி	மேற்கு ஹிந்தி	தமிழ்
भक्तम्	(பக்தம்)	சமைத்த சோறு	भत्त्	भतु	भात	பத்து, பதம்[1]
उच्चक:	(உச்சகம்)	உயர்ந்த	उच्चा	उचो	ऊंचा	உச்சி
शब्द:	(சப்தம்)	ஒலி	सद्द्	सद	साद्	சத்தம்
चक्रम्	(சக்ரம்)	சக்கிரம்	चक्क	चक्कु	चाक्	சேக்கு
शुष्कक:	(சுஷ்கக)	உலர்ந்த	शुक्खा	सुको	सूखा	சுக்கு
कर्म	(கர்ம)	வேலை	कम्म्	कमु	काम्	கம், கம்மியர்
चर्म	(சர்ம)	தோல்	चम्म्	चमु	चाम्	செம்மான்
कर्ण:	(கர்ணம்)	காது	कन्न्	कनु	कान्	கண்[2]
रक्तक:	(ரக்தகம்)	சிகப்பான (உதிரம்)	रत्त	रतो	राता	இரத்தம்
पृष्ठम्	(ப்ருஷ்டம்)	முதுகு பின் பாகம்	पिट्ठ्	पुठि	पीठ्	பிடறி புறம்
दर्भ:	(தர்ப)	தருப்பைப்பில்	दब्भ्	दभु	डाभ्	துரும்பு

இதுமாதிரி தமிழில் எத்தனையோ உதாரணங்கள் கொடுக்கலாகும்.

ஆதிமொழி	பொருள்	பாலி	தமிழ்
चूर्ण:	பொடி	चुण्णो	சுண்ணாம்பு
व्याख्यानम्	உரை	*वक्खण	வக்கணை
काष्ठम्	கட்டை, வனம்	कट्ठम्	கட்டை, காடு
काष्ठा	முடிவு, எல்லை		கடை
अर्घ्य:	விற்கப்படும் பண்டம்	अग्घो	அகைம் (அகவிலை)
मुक्ता	முத்து	मुत्ता	முத்து
वर्ग:	வகை, இனம்	वग्गो	வகை
कृष्ण:	கிருஷ்ணன்	*कण्हो	கண்ணன்
विज्ञाप-	இழிந்தோன் உயர்ந்தோனுக்குத் தெரிவித்தல்	*विण्णप-	விண்ணப்பம், வினவு, விறை.
विष्टि:	ஊர்க்காருக்கு கூலி இல்லாமல் வேலை செய்வது; அமிஞ்சி		வெட்டி (வேலை), வெட்டியான்

* இவை பாலி அல்ல.

1. பத்துப்பாத்திரம் விளக்குகிறது. சோற்றுப் பதம் பார்க்கிறது.
2. கண், ஏழாம் வேற்றுமை உருபு.

तूणः	கூடு	तुहो	உண(ங்கு), உண(க்கு)
शुक्तिः	முத்துச் சிப்பி	सिप्पी	சிப்பி, இப்பி
उप्त	விதைத்தது	वुत्तम	வித்து, விதை
व्युष्टिः	பொழுது விடியல்		விடி (யல்)

இப்படி உயிர் நீளாமல் இருக்கிற உதாரணங்கள் ஏராளமாய்க் கிடைத்தபோதிலும் உயிர் நீளுகிற ரூபங்களும் காணப்படுகின்றன. இவை பிற்காலத்தில் வந்த பௌத்தர்கள் ஜயினர்கள் கொணர்ந்த மாகதீ, சவுரசேநீ, ரூபங்கள்போலும்.

7. பைசாசீ ஸம்பந்தம் தொடர்ச்சி. ரகரக்கேடு.

காயம், காரம், கறி, வாய், கால்வாய், வாயில், வாயி, ஆலவாய், கை பொய்கை, மாய், சாய், பாய், மாயீ, மாரி, வை, வைக்கோல், கோமாரி.

பைசாசீ பாஷைகளில் தனி ர கரமெய் கெட்டுப்போகிறது உண்டு. (L. S. Vol. VIII Part II p. 245) இதற்குத் தமிழில் சில உதாரணங்கள் கொடுக்கலாகும்; பின்வரும் உதாரணங்களில் ர காரத்துக்குப்பதிலாகக் காணப்படும் ய-கரமெய்யை பிராகிருத உச்சாரணையில் உண்டாகும் य-श्रुति (ய-கர உடம்படுமெய்) ஆகக்கொள்ளவேண்டும்.

(a) वर (வர) 'உறைப்புள்ள', क्षार (க்ஷார) 'உறைப்புள்ள';—இற்றுள் இரண்டாவதின் தத்பவம்-வார என்பது; இது தமிழ்-மலையாளத்தில் காரம் எனவழங்குகிறது. இதுவும் காயம் என மாறி, 'மிளகு' எனவும், 'உள்ளிப்பூண்டு' எனவும் பொருள் பட நிற்கிறது. 'வெங்காயம்', பெருங்காயம் என்பன வேறு உறைப்புள்ள பொருள்கள். வெங்காரம் என்பதில் ர கரம் கெடவில்லை. பழந்தமிழில் கறி என்ற மிளகின் பெயர் வர என்பதினின்று உற்பத்தியானது.

'யவனர் தந்த வினைமாண் கலம்

---

1 கால்ட்வெல் (Bishop Caldwell) மலையாளத்தில் கறப்பு, கறுப்பு, கறுவ, கறுவாப்பட்டை="லவங்கப்பட்டை, லவங்கத்தோல்"; கறுப்புதைலம்="லவங்க எண்ணெய்"; என்பவைகளில் உள்ள கறு-என்னும் அடியை மேற்கூறிய காரம் என்பதினோடு ஸம்பந்தப்பட்டதாகக் கொண்டு இவைகளெல்லாவற்றையும திராவிடமாகக் கொள்வர்(Comp Grm Intro pp 93-4) இம்மொழிகள் ஆரியஸம்பந்த முள்ளவை. Vide Curtius Greek Etymology p-144

பொன்னொடு வந்து கறி யொடு பெயரும்' (அகம். 148)

காயம் 'புண்' இது घात (காத) 'அடிபட்ட, புண்பட்ட' என்னும் வடமொழியின் திரிபு. இதில் மொழியிடை த-கர மெய் கெட்டு-ய-கர உடம்படுமெய் வந்து காயு என்னும் ரூபம் உண்டாயிற்று (Beames I. p. 187)

(b) द्वार (த்வார) 'தொளை,வாயில்':—இவ்வடமொழிக்கு பிராகிருதத்தில் வார [1] என்னும் ரூபமும் உண்டு; இந்த ரூபம் வாய் என மாறியிருக்கிறது (உ-ம்) கொல்லன் உலை வாய், துப்பாக்கிப்பற்று வாய, வாயிலோன், வாயில மறுத்தல்

(c) वार्, वारि, वारम् (வார, வாரி, வாரம்) 'ஜலம், நிறை புனல்' இவை வாய்க்கால், வாய்த்தலை முதலிய தொடர்ச் சொற்களிலுள்ள வாய் [2] என மாறியது

மலையாளத்தில் நதிகளின் பெயர்களை நதிக்கரையி லுள்ள சில ஊர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (உ-ம்) ஆலப்புழ, வாரஹப்புழ. [3] இப்படியே அலப்புழை, பேரி யாறு என்னும் தொடர்ச்சொற்களுக்குப் பர்யாயமான ஆல வாயி என்னும் பெயரை அப்பேரியாற்றங்கரையிலுள்ள ஆல் வாயி என்னும் ஊருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இக் காரணம் பற்றியே மதுரைக்கு ஆலவாய் என்னும் பெயர் வந்தது போலும்; இதைப் பிற்காலத்தார் விஷமுள்ள வாய் எனப்பொருள் கொண்டு ஹாலாஸ்யம் என மாற்றி விட்டார் கள் போலும்

(d) कर (கர), 'கை', पुष्कर (புஷ்கர), 'குளம், ஏரி'; இவை கை எனவும், பொய்கை எனவும் முறையே மாறின.

(e) व्रीहि (வ்ரீஹி) என்பதின் திரிபாகிய वरि (வரி) என் னும் நெற்பயிரின் பெயர் வை எனமாறுகிறது உ-ம் வை க்கோல்

(f) மரி (ம்ரு) 'சா,' சார் (ச்ரி) 'சார்ந்திரு' இவைமுறையே மாய், சாய் என மாறின.

(g) பரவு, பரப்பு என்பவைகளின் பகுதி பாய் என மாறினது போலும் உ-ம் பாய ப்படுக்கை

(1) Chanda Prakrita Lakshanam III-7

(2) இதை வாஹி, வாஹிநீ இன் திரிபாகவும் கொள்ளலாகும்

(3) Gundert Mal-English Dictionary—p—687

(h) மாரி ஆத்தாள். இந்த தேவதையின் பெயர் மகம் மாயீ என சில ஜாதிகளில் வழங்குகிறது.

மாரி என்பது मारिः (மாரி) என்ற வடமொழியின் தத்ஸமம்; मारयति (மாரயதி) "கொல்லுகிறது" என்ற வினையடியாய்ப்பிறந்தது : கோமாரி என்பதிலுள்ள மாரியும் இது தான்.

7. (ii) ர=ல. மயில், அகில், வல்சி, நெல், சீலை, மிளகு.

மாகதி பைசாசி பாஷைகளில் ஸம்ஸ்கிருத ர-காரம் ல-கரமாக மாறுகிறதென்று சொல்லப் பட்டிருக்கிறது (1) *வட இந்தியமொழிகளில் ர கரம் இருக்கிற இடத்தில் சில தமிழ் மொழிகளில் ல-கரம் காணப்படுகிறது. இப்படி லகர, ரகரம், உறழும்மொழிகளில் ர-காரமுள்ளதுதான் பூர்வரூபமென்று கால்ட்வெல்* (Bishop Caldwell) *அபிப்பிராயப் பட்டிருக்கிறார்* (C. D. G. p 56) *அவைகளில்சில வருமாறு:—*

(1) मयूरः (மயூர) மயில்; (2) अगरुः (அகரு) அகில்; (3) व्रीहिः (வ்ரீஹி) வல்சி; (4) नीवारः (நீவார) நெல்; (5) चीरम् (சீர) சீலை; (6) मरीचः, मिर्च् (மரீச, மிர்ச்) மிளகு.

8. *பின்வரும் உதாரணங்களில் ஆரிய மூலமொழிகள் பிராகிருதங்களிலும் தத்கால ஆரியபாஷைகளிலும் எவ்வளவு மாறுபட் டிருக்கின்றன வென்று காட்டப்பட்டிருக்கின்றது. தமிழிலும் இப்படியே மாறுபட்டிருக்கலாம். அல்லது பிராகிருதத்திலிருந்தே இம் மொழிகள் தமிழுக்கு வந்திருக்கலாம்.*

(i) காணம் '*பொன்*':— *ஸம்ஸ்கிருதம்* कार्षापणः (*கார்ஷாபணம்*) '*பொன்நாணயம்*'; *பிராகிருதம்* काहावणो (*காஹாவணோ*) ; *ஹிந்தி* कहान (*கஹான*); *ஓட்ரம்* काहान (*காஹான*) *பெங்காலீ* काहन (*காஹன*) (Beames I. p. 355)

(ii) தாடி, தாள்:—*ஸம்* दंष्ट्रिका (*தம்ஷ்ட்ரிகா*); *பி.* दाढिका (*தாடிகா*); *மஹாராஷ்ட்ரீ* दाढ, दाढी (*தாட, தாடீ*); *ஹி.* दाढ, दाढी (*தாட, தாடீ*) =" *பல், தாடி*" (Beames I p 225 Hoernle, G; G § 91.)

(1) Chanda Prakrita Lakshanam III. 38-9.

(iii) அடி 'பாதம்':—अंघ्रिका (அங்க்ரிகா). ஹி. குஜராதி, एडी (எடீ); பஞ்சாபி एड (எட்); ஸிங்கலீஸ் अडिय (அடிய); ஹி,மகா, एडी (எடீ)'குதிகால்'. (Beames I-p.134. Hoernle G. G.§ 148. Indian Ant XI-p. 201)

(iv) முந்நீர், முந்நீர் 'கடல்நீர்':—समुद्रः (ஸமுத்ர) ஸிங்கலீஸ் हमुदु, मूदु (ஹமுது, மூது) (Ind Ant XI-p. 213)

(v) தென் 'தெற்குதிக்கு':—ஸம் दक्षिण: (தக்ஷிண). பி. दाहिणो (தாஹிணோ);கிழக்கு. ஹி. दखिन (தகின்); காஷ்மீரி दछुन (தசன்) (B. I. p 310. H G. G. § 116) இதில் ச-கரம் ய-கரமாகமாறி தயின் என்பது தமிழில் தென் என மாறியிருக்கிறது.

(vi) புது:—ஸம் पृथक् (ப்ருதக்) 'தனியாயுள்ள' பி. पिधं पुधं (பிதம், புதம்) (Hemachandra I 188.)

'இது ஒன்றிலும் சேராமல் தனி நிலையாயிருக்கிறது' என்றால் புது நிலைமை எனப் பொருள்படும்.

(vii) தாய் 'செவிலி':—ஸம் धात्री (தாத்ரீ) 'தாதி, செவிலித்தாய்'; பி. धत्ती, धाई (தத்தீ, தாஈ) (Hema II-81.)

(viii)ஆய், யாய் 'தாய்':—இது கலித்தொகையில் ஞாயர் என்று கூடக் காணப்படுகிறது. வடமேற்கு பைசாசீ பாஷைகளில் ஜஇ (Jai), ஆய (aya), ஆஇ (ai), யஈ (yai) என்னும் ரூபங்கள் இருக்கின்றன. இவைகளை க்ரியர்ஸன் (Sir. G. A. Grierson) जायते (ஜாயதே) என்னும் ஸம்ஸ்கிருதவினையோடு ஸம்பந்தப்பட்ட தென்கிறார் (Grierson's Paisachi Languaages p. 75). இவ்விடத்தில்

இகர யகரம் இறுதி விரவும் (மொழிமரபு-25.)

என்ற தொல்காப்பிய சூத்திரம் நினைக்கற்பாலது.

(ix) தாதை 'பிதா':—வடமேற்கு பைசாசீ பாஷைகளில் தத (tata), தா (ta), தாதீ (tati) என்ற ரூபங்கள் காணப்படுகின்றன. இவை ஸம்ஸ்கிருத तातः, तत (தாத, தத) ஓடு ஸம்பந்தப்பட்டவை என்று க்ரியர்ஸன் (Sir. G. A. Grierson) சொல்லுகிறார் (G. P. L. p. 70.)

(x) தந்தை, கன்னடம் தந்தே, தெலுங்கு தண்ட்ரி (तण्ड्रि):—இது தாத (तातः) என்பதன் தத்பவம் என்று சிட்

டல் (Kittel's Kanarese English Dictionary) சொல்லு கிறார்.

(xi) பெண்:—ஸம் भगिनी (பகினீ) "(1) ஸ்த்ரீ (2) உடற் பிறந்தாள்". ஹி बहिन (பஹின); பெங் बइन (பஇன); ஸிந்தி भेणु (பெணு); ஸிங்க फेन् (பென்). (Beames I-p. 202 I. A. Vol XI-p. 213) இந்த பாஷைகளில் எல்லாம் இம்மொழி "உடற்பிறந்தாள்" என்னும் பொருளில் உபயோகப்படுகிறது. திராவிடத்தில்-பெண்-என்பது "ஸ்த்ரீ" என்னும் பொருளில் உபயோகப்பட்டு வருகிறது. மலையாளத்தில் மாத்திரம் பெங்ஙள் (=பெண்கள்)=உடற்பிறந்தாள் (Gundert's Dictionary.)

(xii) அண்ணன்:— இது ஆண் என்பதின் குறுக்கத்தால் வந்ததுபோலும். பழ மலையாளத்தில் ஆங்ஙள் (=ஆணுங்கள்)="ஸோதரர்கள், உடற்பிறந்த புருஷர்கள்" (Gundert's Dictionary)

(xiii) கணவன்:— இது गणपः (கணப) "கணத்தலைவன்" என்பதன் திரிபு

(xiv) சேய் 'குழந்தை, இளமை':— ஸம் शिशुः (சிசு) 'குழந்தை' शैशवं (சைசவம்) 'இளமை':— இதுமேல் 4-வது பாராவில் காட்டியபடி முதல் உயிர்-எ-ஆக மாறி வந்தது. இரண்டாவது ச கரம் ய கரமாக மாறியது.

(xv) காலை:—ஸம். कल्यम् (கல்யம்) "விடியற்காலம்". பிரா कल्लम् (கல்லம்); ஹி कल्ह, कल (கல்ஹ, கல); பஞ் कल्ह (கல்ல); ஸிந் काल्ह, कल्ह (கால்ஹ, கல்ஹ); குஜ, மகா, काल (கால); ஓட் कालि (காலி); பெங் कालि, काइल (காலி, காஇல) = "நாளை, நேற்று" (Beames I—p—350.)

(xvi) மாலை என்பது கீழ் xvii ல்காட்டிய மைல்=मलिन "இருட்டான" என்பவைகளின் மூலமான मल (மல) என்பதிலிருந்து உத்பத்தியானது (Beames II-p-175.)

(xvii) மைலக்காளை:— மைல் என்பது ஸம் मलिन (மலின) "இருண்ட, கறுப்பான" என்பதின் திரிபு (Hemachandra II—138)

(xviii) அழன் "பிணம்":— ஆரியத்தில் अस्थन् अस्थि (அஸ்த்யன், அஸ்த்தி) என்ற இரண்டுமொழிகளுக்கும் 'எலும்பு' என்பது பொருள். முதல் ரூபம் வைதீக பாஷையில் காணப் படுகிறது. (T. S. VII—5-12) இரண்டாவது ரூபம் வைதி கத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் காணப்படுகிறது. अस्थि (அஸ்த்தி); பிரா अट्टि (அட்டி); ஹி हड्डी, हाड, (ஹட்டீ, ஹாட்); பஞ் हड्डी (ஹட்டீ); மகா, குஜ, பெங் ஒட், हाड (ஹாட்) (Beames I-317) அஸ்த்யன் என்பதில்-ஸ்த்ய-என்னும் கூட் டெழுத்து ட-காரம் ஆகமாறி, பிறகு-ழ-ஆகமாறி அழன் ஆனது போலும்.

(xix) நிழல்:—ஸம் निस्थल (நிஸ்த்தல)= नि+ स्थल, "கீழ் இடம்". "அஸ்த்யன்" என்பதில் போல-ஸ்த்ய-என்னும் கூட் டெழுத்து-ழ-ஆகமாறி நிழல் என்னும் மொழி உண்டாயிரு க்கலாமென்று ஊகிக்கப்படுகிறது, "மரத்தின் நிழல்" என் றால் மரத்தின் "கீழ் இடம்" எனப்பொருள்படும்.

(xx) எழிலி "மேகம்":— ஸம் तडित् (தடித்) "மின்னல்" ஸம் तडित्वान् (தடித்வான்) "மின்னலை உடையது, மேகம்." தடித் என்பது துளு பாஷையில் தெடில் எனவும் கன்னட த்தில் ஸிடில் எனவும், காணப்படுகிறது. இம்மொழிகளின் முதல் மெய் கெட்டு இடை-ட-கரமெய்-ழ-கரமாக மாறுவ தால் தமிழில் எழிலி என மேகத்துக்கு ஒரு பெயர் உண்டா யிற்று.

நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி தானல் காதாகிவிடின். (குறள்)

(xxi) கூழ்:— ஸம் क्रूरम् (க்ரூரம்) "சமைத்த அரிசிச் சோறு" (Kittel's Diction)

(xxii) வீசம் "மாகாணி, இருபது மூன்றிரி கொண்டது":- ஸம் विंशति: (விம்சதி), ஹி. वीस (வீஸ்); பெங் वीश (வீச்); மகா वीस (வீஸ்); குஜ वीश् (வீச்); பஞ் वीह् (வீஹ்); ஸிந் वीह (வீஹ) (Beames I-p-155.)

(xxiii) பாவை:—ஸம் पार्वती (பார்வதி). பிரா पव्वई (பவ்வஈ) (Beames I 185). இந்தரூபத்தில் ஒரு வ-கர மெய்கெட்டு முதலுயிர் நீண்டால் (மேல் § 6) பாவை என்ற ரூபம் வரும். இதுதான் ஆண்டாள் "திருப்பாவை" யிலும்

திருவாதவூரடிகள் "திருவெம்பாவை" யிலும் பாவை என வருவது. கொல்லிப் பாவை என்பதும் இதுதான். भगवती (பகவதி) என்பதும் பாவை எனத்திரியும்.

(xxiv) எரி, நெருப்பு:—வடமேற்கு பைசாசிபாஷைகளில் நெருப்பு என்னும் பொருளில் நார் என்ற ரூபமிருக்கிறது. இதை க்ரியர்ஸன் (Sir. G. A. Grierson) ஸம் अंगार: (அங்கார) "நெருப்புத்தணல்" என்பதன் திரிபு என்கிறார் (G. P. L. H. 70) எரி என்பது अयस् [1] (அயஸ்) "நெருப்பு" என்னும் வைதிகமொழியின் திரிபு.

(xxv) காவிதி மாக்கள்: (Sinhalese Inscription)— இது गृहपति: (கிருகபதி) "இல்லக்காரர்" (Householder) இன் திரிபு.

(xxvi) காதம், காவுதம்:—இது गव्यूतम् (கவ்யூத) என்பதின் திரிபு.

(xxvii) குடி 'மன்பதை':—இ कृष्टि: [2] (கிருஷ்டி) 'குடியானவன்' இன் திரிபு. இதை 'குடும்பி' என்பதின் திரிபு என முல்லர் (E. Muller) சொல்கிறார். (I. A. Vol. XI-p-213.)

(xxviii) இயம்பு:-ஸம் जल्प (ஜல்ப்)'பேசுதல்.' இது பிராகிருதத்தில் जम्प (ஜம்ப்) எனமாறி (Var: VIII-24) தமிழில் இயம்பு என ஆகிறது.

(xxix) உம்பளிக்கை, உம்பளன் "இறையிலி நிலம்" நேபாள தறையில, படேரா என்ற இடத்திலிருந்த ஒரு அசோக ஸ்தம்ப சாசனத்தில் லும்மினி என்ற கிராமம் ओवलिके (ஓபலிகெ) ஆய் செய்யப்பட்டது என்று கண்டிருக்கிறது. இது अपबलिके (அபபலிகெ) இன் திரிபு என்றும், இதின் பொருள் இறையிலி என்றும், பூலர் Dr. Buhler சொல்லுகிறார். (E I Vol V p 5) இதுதான் உம்பழி. உம்பளிக்கை என்று திராவிட பாஷைகளில் வழங்குவது अव, अप (அவ, அப) என்ற உபஸர்கங்கள் சில இடங்களில் பாளிபாஷையில் ஓ, ஊ, அல்லது உ ஆகக்குறுகுமாம்.

(xxx) செவி:—ஸம் श्रव (ச்ரவ)'காது.' செவி என்பது श्रविक: (ச்ரவிக) என்னும் மொழியின் திரிபு. மலையாளத்தில்

(1) अयाश्चाग्नेऽसि अनभिशस्तीश्च सत्यमित्त्वम् अया असि·

(2) मित्रः कृष्टीः अनिमिषाऽभिचष्टे·

(See Gundert's Dictionary) செவிடு என்ற ரூபமும் காணப்படுகிறது; பூர்வத்தில் श्रवित्र (ச்ரவித்ரம்) என்ற மொழியும் உலகவழக்கிலிருந்த தென்று இதனால் தெரிகிறது.

(xxxi) சும்மை 'ஒலி, ஓசை':—வரருசி (Var-VIII-57) பிராகிருத விதியின்படி श्रु (ச்ரு) 'கேள்' என்னும் வினைப்பகுதிக்கு செயப்பாட்டு வினையில் सुव्वइ (ஸுவ்வஇ) என்ற ரூபமுண்டு; இது சில இடங்களில் सुम्मए (ஸும்மஏ) என மாறினதாகத் தெரியவருகிறது. (Chanda. P. L. p. 39) இந்த ஆதேசம்தான் சும்மைக்கு மூலம்.

(xxxii) கொங்கை:-ஸம் कक्षः (கட்சம்) 'மறைவிடம், பக்கம், கக்ஷம்.' क्ष (க்ஷ) என்னும் கூட்டெழுத்து சில இடங்களில் ங்க (கீழ் § 10) என மாறுவதினாலும், ஹிந்திபாஷையில் சில இடங்களில் இடை அ-காரம் ஒ-[1] ஆகமாறுவதினாலும் கக்ஷ என்பது *கொங்க என்னும் ரூபத்தை அடையும். தெலுங்கில் கௌங்கிலி என்றால் 'புஜாந்தரம்' = 'இரண்டு புஜங்களுக்கு நடுவிலுள்ள பிரதேசம்'. ஆகவே தமிழ் கொங்கை என்பது कक्षक: (கக்ஷக) இன் திரிபு என்பது திண்ணம்.

(xxxiii) மருங்கு, மருங்குல் 'பக்கம்':—ஸம் पार्श्वः (பார்ச்வ) 'பக்கம்' இது தெலுங்கில் प्रक्क (ப்ரக்க) என மாறியிருக்கிறது; இது தான் தமிழில் மருங்கு ஆகமாறியது என ஊகிக்கப்படுகிறது. ட-காரம் ம-காரமாக மாறுவதற்கு கீழ் § 24 வைப் பார்க்க.

(xxxiv) தாய் 'நற்றாய்':—धात्री (தாத்ரீ) இல் இருந்து உத்பத்தியானதாக மேல் vii இல் சொன்ன தாய் என்னும் மொழி செவிலியை உணர்த்தும். நற்றாயை உணர்த்தும் தாய் என்னும் மொழி ஆய், யாய் என்பவை போல் जायते (ஜாயதே) என்னும் வினைக்கு ஸம்பந்தப்பட்ட மொழியிலிருந்து உத்பத்தியாயிருக்கலாம். மொழிமுதல் ஜ-காரமெய் கெடுவதற்கும், தந்தியமாய் மாறுவதற்கும் கீழ் § 25 வைப் பார்க்க.

(xxxv) அன்னை தன்னை 'தாய்'. இவற்றுள் முதல் மொழியை ரூடியாகக்கொண்டு, இரண்டாவதை 'தன் +

---

1. H. G. G. § 57 चंचु (சஞ்சு) 'பட்சிமூக்கு' = चोंच् (சோஞ்ச்)
श्मश्रु: (ச்மச்ரு) 'உடல் ரோமம்' = मोंच् (மோஞ்ச்)
B. I. p. 134 चक्षु: (சக்ஷு) 'கண்' = चोख् (சோக)

அன்னை' என்பதின் குறுக்கம் எனக்கொள்வது வழக்கம் (See Winslow's Diction) இவ்விரண்டையும் जननी (ஜநநீ) 'பெற்றவள்,' என்பதில் ஐ-கரமெய் கெடுவதாலும், தந்தியமாக மாறுவதாலும், உண்டான திரிபுகளாகவும் கொள்ளலாம். இம்மொழிகளின் பூர்வ ரூபங்கள் நமக்குத் தெரியாததால் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

9. தமிழ் மொழிகளில் ஆரிய ஊஷ்மாக்கள் கெடுவதும் மாறுவதும்:—

(*a*) श्र என்னும் கூட்டெழுத்தும் श्रृ என்னும் உயிர் மெய்யும் பெரும்பாலும் கெட்டுப்போயின:—

(1) श्रमण: (ச்ரமண), शमण (சமண), 'பவுத்தபிட்சு'

(2) आश्रितम् (ஆச்ரித), தமிழ்சார் பெழுத்திலொன்று

(3) श्रोणा (ச்ரோணு), நட்சத்திரத்தின் பெயர்

(4) श्रविष्ठा (ச்ரவிஷ்டா), நட்சத்திரத்தின் பெயர்

(5) श्रेणी (ச்ரேணீ) வரிசை

(6) शृंगी (ச்ருங்கி) शृंगबेरम् 'இஞ்சி'

(7) श्रेष्ठी (ச்ரேஷ்டி) 'செட்டி'.

இவை முறையே

(1) அமண, அவுண, (2) ஆய்தம் (3) ஓணம் (4) அவிட்டம் (5) ஏணி (6) இஞ்சி (7) செட்டி, எட்டி ஆயின.

श्रीः (ச்ரீ) என்பது திரு என மருவியது

(*b*) (1) तैषी (தைஷீ) (2) आनुषी (ஆனுஷீ) (3) आषाढी (ஆஷாடீ) श्रावणी (ச்ராவணீ) (4) मार्गशीर्षी, मार्गशिरी (மார்க்கசீர்ஷீ, மார்க்கசிரீ)

என்ற பவுர்ணமிகளின் பெயர்கள் ச கர ஷ கரங்கள் எல்லாம் கெட்டு முறையே

(1) தை (2) ஆனி (3) ஆடி (4) ஆவணி (5) மார்கழி என்ற மாதங்களின் பெயர்களாக மாறின.

(*c*) (1) माघी மாகீ (2) फाल्गुनी பால்குனி (3) वैशाखी வைசாகி (4) प्रौष्ठपदी ப்ரவுஷ்டபதி (5) आश्वयुजी ஆச்வயுஜீ என்னும் பவுர்ணமிகளின் பெயர்கள், ச கர ஷ கரங்கள் கெட்டு வேறு பல விதமாயும் மாறி

(1) மாசி (2) பங்குனி (3) வைகாசி (4) புரட்டாதி, புரட்டாசி (5) ஐப்பசி

என்ற மாதங்களின் பெயர்களாக மாறின.

(d) 1 सीसम् (*சீஸ*) '*ஈயம்*' 2 सिम्हलम् (*ஸிம்மல*) *லங்கைத் தீவின் பெயர்* 3 श्मश्रु (*சமச்ரு*) *மயிர்* 4 श्मशानम् (*சமசான*)'*இடு காடு*' 5 स्नेहः(*ஸ்நேஹ*)'*நெய்,நேயம்*' 6 सहस्रम्(*ஸஹஸ்ர*)*ஆயிரம்* 7 सूची (*ஸூசீ*) '*ஊசி*' 8 सभा (*ஸபா*) '*ஸபை*' 9 सुपर्णः (*ஸுபர்ண*) '*கருடன்*' 10 समयः (*ஸமய*) '*வேலை காலம்*' 11 समरः (*ஸமர*) '*யுத்தம்*' 12 संध्या (*ஸந்த்யா*) '*ஸந்தி வேளை*' 13 शुल्कः (*சுல்க*) '*சுங்கம்*' 14 सल्लापः (*ஸல்லாப*) अल्लाप सल्लाप (*அல்லாப ஸல்லாப*) *அந்யோந்யமான ஸம் பாஷணம்* 15 सर्षपः (*ஸர்ஷப*) *பிராகிருதம்* ஸரிஷப, ஸாஸப '*கடுகு*' 16 आश्लेषा (*ஆச்லேஷா*) '*ஒரு நாட்பெயர்*' 17 संशयः (*ஸம்சய*) '*ஸந்தேஹம்*'

இவை ஊஷ்மாக்களை இழந்து முறையே

(1) ஈயம் (2) ஈழம் (3) மயிர் (4) மயானம் (5) நெய், நேயம் (6) ஆயிரம் (7) ஊசி (8) அவை (9) உவணன் (10) அமயம் (11) அமர் (12) அந்தி (13) உல்கு (14) அளாவு, அளவளாவுதல் (15) அய்யவி - தெலுங்கு ஆவாலு (16) ஆயில்யம் (17) ஐயம் *ஆயின.*

(e) *இதுமாதிரியே.*

(1) शीलम् (*சீல*) '*ஸ்வபாவம், இயற்கை*'

(2) परिशील् (*பரிசீல்*)'*பயிற்சிசெயல், அப்பியாஸம் செயல்*'

(3) क्षेमम् (*க்ஷேம*) '*ஏமம், காப்பு, மகிழ்வு, ஸுகம்*'

(4) शाटकम् (*சாடக*) *மகளிர் ஆடை, வஸ்த்ரம்*

(5) स्वस्रीयः (*ஸ்வஸ்ரீய*) '*மருமான்*' *ஸகோதரி குமாரன்*

(6) सीरः (*ஸீர*) '*ஏர்*'

(7) सैरिभः (*ஸைரிப*) '*எருமை*'

இவை முறையே

(1) இயல் (2) பயில் (3) ஏமம் சேமம் (4) ஆடை (5) அளியன் (6) ஏர் (7) எருமை.

என மாறி இருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது.

(f) சில இடங்களில் स (ஸ) த-கரமாக மாறுகிறது.

1 आसनम् (ஆஸன) 'ஆஸனம்' 2 शासनम (சாஸன) 'ஆக்யாபத்ரம்' 3 मासः (மாஸ) 'மாதம்' 4 मास् (மாஸ்) 'சந்திரன்' 5 वासः (வாஸ) 'வஸித்தல் 6 सेना (ஸேனு) 'ஸேனே' 7 स्वर्गः (ஸ்வர்க்க) 'தேவலோகம்' இவை முறையே.

(1) ஆதனம (2) சாதனம் (3) மாதம் (4) மதி (5) வாதம் (6) தானை, (7) துறக்கம். என மாறின.

सौम्य (ஸவும்ய) 'மூத்தோன் இளையோனை விளிக்கும் மொழி;' இது பாலி பாஷையில் सम्म (ஸம்ம) எனமாறுகிறது.

शिरस् (சிரஸ்) 'தலை':— இது ஐரோனிய பாஷையில் ஸரஹ ஆகிறது. வடமேற்கு பைசாசீ முதலிய பாஷைகளில் 'தலை'க்குப் பெயர் இந்த ஸரஹ ஒடு ஸம்பந்தப்பட்டதாய்க் காண்கிறது.[1]

இந்த (1) ஸம்ம (2) ஸரஹ என்பவவை, (1) தம்ம, தம்மு (2) தரே,[2] தலை-ஆக மாறி இருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது.

(g) மலையாள பாஷையில் ஆரியமொழிகளின் முதல் ஸ-கரம் த-கரமாக மாறுவது மிகவும் ஸாதாரணம்

(1) ஸத்காரம் (2) ஸங்கேதம் (3) ஸங்கிரஹ (4) ஸஞ்சி (5) ஸம்பன்னம் (6) ஸம்பந்தம் (7) ஸாமூதிரி

முதலியன முறையே (1) தக்காரம் (2) தங்கேயம் (3) தங்கரி (4) தஞ்சி (5) தம்மன்னம் (6) தம்மந்தம் (8) தாமூதிரி ஆயின.

10. क्ष (க்ஷ) வின் மாறுபாடுகள்.

क्ष (என்னும்) கூட்டெழுத்து क (க), ष (ஷ), என்ற மெய்கள் சேர்ந்து உண்டானது இதைத்தமிழில் ட்ச என்று அதன் ஒலியை மாற்றி எழுதுவது வழக்கம். பிராகிருதங்களில் பெரும்பாலும இது क्ख, च्छ (க்வ, ச்ஃ) என மாறுகிறது. தமிழில் இரண்டாவது வர்க்க எழுத்து இல்லா

1. Grierson's Paisachi Lauguages p 73.

2. துளு பஷையில் தரே என்றால் "தலை"

மையால் பிராகிருதத்திலிருந்துவந்த தமிழ்மொழிகளில் இக் கூட்டெழுத்து-க்ஷ-ச்ச-எனக் காணப்படுகிறது. சில இடங் களில் இது ங்க என்வும் வருகிறது. பின்வரும் உதாரணங் களில் முதலில் ஆரியமொழிகளைக் காட்டி, அவற்றிலிருந்து உத்பத்தியான தமிழ் மொழிகளை அவைகளுக்கு எதிரே எழுதி இருக்கிறது:—

क्षण: (க்ஷண) 'காலநுணுக்கம்':—கணம்

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தலரிது"

अक्षि (அட்சி) 'கண்':—வேதத்தில் अक्षण्वतेस्वाहा अनक्षि-कायस्वाहा (T. S. 7-5-12) என்று பிரயோகம் இருக்கிறபடி யால் இதற்கு अक्षण् (அட்சண்) என்னும் ஒரு ரூபமும் உண்டு. இந்த ரூபத்துக்கு இரண்டாவது உயிரின் மேல் எடுத்த உச்சரிப்பு (accent.) இது அதர்வவேதத்தில் चक्षण् (चक्षणि) (சக்ஷண்) என்று கூடக்காணப்படுகிறது. பிராகிருதத்தில் அக்ஷண் என்பது அக்வண் என மாறுமாகையால் கண் என்னும் தமிழ்-உறுப்புப் பெயர் - இம்மொழியிலிருந்து மொழிமுதல் கெட்டு உத்பத்தியாயிருக்கலாம்

क्षम, क्षमा (க்ஷமா) 'பொறுமை':— சுமத்தல், சுமை

"செறுநரைக்காணிற் சுமக்க இறுவரை
காணிற் கிழக்காந்தலை."

अक्ष: (அட்ச) 'அச்சு'.— அச்சு, அக்கு

क्षार: (க்ஷார) 'காரம், சாறு':— காரம், சாறு

क्षेम: (க்ஷேம) 'காப்பு, மங்களம்':— சேமம், ஏமம், செம்மாத்தல், ஏமார்தல்

पक्ष: (பட்ச) 'பக்கம்':— பக்கம், பங்கு, பச்சம், பாங்கன்

कक्ष: (கட்ச) 'மறைவிடம், பக்கம், &c':—கஞ்கம், கங்கு, கச்சம் கச்சை, கச்சு, கட்சி, சோங்கை, (மேல் § 8-xxxii)

तक्ष: (தட்ச) 'தச்சன்':— தச்சன், தச்சு.

भिक्षा (பிட்சா) 'ஐயம்':— பிச்சை, பிக்குணி.

क्षुर: (க்ஷுர) 'கத்தி':— கூர், கூர்மை, சூரி, சுறுக்கு

ऋक्ष: (ர்ட்ச) 'கரடி':— எண்கு

क्षल् (க்ஷல்) கழுவு':— கழுவுதல்

क्षारम् (க்ஷார) 'உப்பு':— அளம், கரிப்பு, *குப்பு, உப்பு.

दक्षिण: § 8 (v); क्षुद्र: § 17; क्षुद्रा § 17; என்பவை முறையே தயிண, தென்; குளளன், சுள், சூல்; சூளை; என மாறலாமென்று இந்தப்பிரிவில் வேறு இடங்களில் காட்டப் பட்டிருக்கிறது.

क्ष என்னும் கூட்டெழுத்து ஆரியத்தில் வெகு ஸாதாரணமானது. அது-க்க- அல்லது-ச்ச- ஆகமாறின மொழிகளில் சிலவற்றை மாத்திரம் தான்மேலே காட்டியிருப்பது.

பின்வரும வட சொற்களிலுள்ள क्ष (க்ஷ) என்னும் கூட்டெழுத்து நடுவில் உயிர் பெற்று இரண்டு எழுத்துக்களாகப் பிரிந்து க, ழ, அல்லது க, ட, என ஆகிறது

(a) பகழி:— पक्षिन् (பக்ஷின்), पक्षी (பக்ஷீ), 'பட்சம் உடையதி, இரகு இடையது' அதாவது அடப.

(b) கிழான்:— क्षि (க்ஷி) 'ஆளுகிறது.' இந்த வினைப்பகுதி महीक्षित् (மஹீக்ஷித்) "பூமி ஆளுபவன்,' ऋभुक्षिन् (ருபுக்ஷின்) ऋभुक्षा: (ருபுக்ஷா:) "ருபுக்களை ஆளுபவன் அதாவது இந்திரன்"; என்னும் தொடர்ச் சொற்களில் காணப்படுகிறது.

அம்பர் கிழான், நாடு கிழவோன், மனைக் கிழத்தி, கிழமை என்னும் மொழிகள் இப்பகுதியிலிருந்து வந்தன.

(c) கழறுதல்:— आक्षारणा [1] (ஆக்ஷாரணு), क्षारणा (க்ஷாரணு), 'கூடா ஒழுக்க விஷயமாய் நிந்தித்தல'. இம்மொழிகளின் வினைப்பகுதியாகிய क्षर् (க்ஷர்) என்பதிலிருந்து கழறு என்பது வந்தது. (அகப்பொருள்—p-43)

(d) குழந்தை:- [2] उक्षतक: (உக்ஷந்தக:) 'வளர்கிறது அதாவது சேய்'. இதிலிருந்தும் இதின் பகுதியாகிய उक्ष् (உக்ஷ) 'வளர்தல்.' என்பதிலிருந்தும் குழந்தை, கொழுந்து, கொழுந்தன் (தலைவனுக்கிளையோன்), குழவி; தெலுங்கு कोडुकु (கொடுகு) குமாரன்', कोडलु (கோடலு) 'நாட்டுப்பெண்'; என்பன வந்தன.

(e) கழி:—क्षि (க்ஷி) 'காலம் முதலியன கழிதல்,' கழித்தல்

(f) கழனி क्षोणि: (க்ஷோணி) 'பூமி':—கழனி, காணி, காணி யாச்சி

(1) तत्वाक्षारणा यस्स्यात् आक्रोशोमैथुनम्प्रति॥ Amara Kosa

(2) मानोमहांतमुतमानो अर्भकम्मान उक्षंतमुतमान उक्षितम्। मानोवधीः पितरंमोतमातरं प्रियामानस्तनुवोरुद्ररीरिषः॥ Tait Samh:4; 5;I0

இம்மொழியை कर्पणीय (கர்ஷணீய) என்பதின் திரிபாகவும் கொள்ளலாம்.

(g) கழல்:—क्षर् (க்ஷர்) தொடி, வளை முதலியனகழலுதல்,

(h) கிடா:—उक्षन् (உக்ஷந், उक्षा உக்ஷா)'எருது, காளை:'— கிடா, சடா

(i) குழம்பு:— क्षुभ् (க்ஷுப்) கடல், ஏரி, மனம், சித்தம் முதலியவை குழம்புதல், குழப்புதல

(j) களர்:—क्षार (க்ஷார). களர் நிலம், களர் பூமி

11. र्त (ர்த) र्य (ர்ய) வின் மாறுபாடுகள்.

திட்டு, தீட்டு வாழ், வழுத்து, ஊளாமை, வெட்டு, வாள், வாளி, வடி, உளி, வண்மை, வள்ளல், வாள், ஒளி, வளர்,

(A) र्त (ர்த) என்னும் கூட்டெழுத்து ட்ட, ட எனப்பிராகிருதத்திலேயே மாறி விட்டது:—

(1) अर्थवर्णः (அர்த்தவர்ண). 'பொருளடக்கம்

(2) तीर्थ (தீர்த்த). (a) ஜலம், (b) நதி தாண்டும் இடம், (c) மகளிர் மலம்

(3) नंद्यावर्तः (நந்தியாவர்த்த)

(4) आलावर्तम् (ஆலாவர்த்தம்)

(5) प्रति (ப்ரதி)

(6) प्रतिमा (ப்ரதிமா) 'உருவம்' இவை முறையே

(1) அட்டவணை, (2) (a) தூத்தம், (b) துருத்தி, திட்டு,

(c) தீட்டு, (3)நந்தியாவட்டை, (4)ஆலவட்டம், (5) படி, (6) படிமம் ஆயின. இவ்வித மாறுபாட்டுக்கு நிகண்டுகளில் ஏராளமாய் உதாரணங்கள் கிடைக்குமாதலால் அவற்றை இங்கே விவரிப்பது அநாவசியகம்

(B) वृत् (வ்ருத்) என்னும் வினைப்பகுதி (1) 'இருத்தல்,' [1] (2) 'நடந்து கொள்ளுதல், ஒழுகுதல்,' [2] (3) 'பேசுதல்,' முதலிய பொருள்களில் வருவதுடன், அநேக உபஸர்க்கங்களுடன் சேர்ந்து ஏராளமாய் வைதிக பாஷையில் பிரயோகப்

---

(1) ध्येयस्सदा सवितृमण्डल मध्यवर्ती.

(2) ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनः युक्ता आयुक्ताः अलूक्षाधर्मकामा स्युः तेयथातत्रवर्तेरन् तथा तत्र वर्तेथाः ॥

பட்டிருக்கிறது. இது நிகழ் காலப்படர்க்கை ஒருமையில் वत्तते (வர்த்ததே) என்னும் ருபத்தை அடைந்து பிராகிருதங்களில் वट्टइ (வட்டஇ) என மாறுகிறது; தத்காலத்தில் பெங்காளீயில் वटे என்றும், ஓட்ரத்தில் अटे, மராட்டியில் वाटे என்றும் காணப்படுகிறது.

वृधु (வ்ர்ய்) என்னும் வினைப்பகுதி (1) செழித்தல், (2) வாழ்தல், வழுத்தல்,(3)வளர்தல்(4)பகுத்தித்தல்,(5)அறுத்தல், (6) பிரகாசித்தல், முதலிய பொருள்களில் வரும். இது நிகழ் காலப்படர்க்கை ஒருமையில் वर्धते (வர்யதே) என்னும் ருபத்தை அடைநது பிராகிருதங்களில் वड्ढइ (வஃஃ இ) என மாறுகின்றது.

இந்தப் பிராகிருதங்களின் பகுதிகளாகிய वट्ट(வட்ட்) वड्ढ (வஃஃ) என்பவை ஒரு மெய்யிழந்து, உயிர் நீண்டும் நீளாமலும், வட், வாட், வஃ, வாஃ என்னும் ருபங்களையும் அடையும் (முன் § 6 பாராவைபபார்க்க)

i கிணறு வாழ் தவளை, கோடு வாழ் விலங்கு

என்பவற்றில் 'இருத்தல், வஸித்தல்,' பொருண்மையில் வாட் என்பது வாழ் என ஈற்று மெய் மாறி வந்தது.

ii "வையத்து வாழ் வாங்கு வாழ் பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

என்னும் திருக்குறளில் வாழ் ஒழுகுதற்பொருண்மையில் வந்தது.

iii வாளா கிடந்தாள், வாளாமை,

என்பவற்றில் வாட் என்பதின் ஈற்று மெய்-ள-கரமாக மாறி 'பேசுதல்' பொருண்மையில் வந்தது.

iv a "ஊடியிருநதே மாத்தும்மினர் யாம் தம்மை
நீடு வாழ் கென்பாக்கறிந்து"

b "வழுத்தினள் தும்மினேனாக அழித்தழுதாள்
யாருள்ளித்தும்மினீரென்று"

c வாழியர் நலனே, வாழி தோழீ, வேந்தன் வாழிய.

என்பவற்றில் வஃ, வாஃ என்பவை தன்வினையடி யாகவும் பிற வினையடியாகவும் ஈற்றுமெய் ழ-கரமாக மாறின.

v ஆரியத்தில் वर्धकि: (வர்யகி) என்பதும், தெலுங்கில் वड्रंगि (வட்ரங்கி) என்பதும், வாள் கொண்டறுக்கும் தச்சன் பெயர். தெலுங்கில் वाँडिमि (வாடிமி) என்பது கூர்மை

a "தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்"

வாள், 'கத்தி;' வாளி 'அம்பு':—

என்பவற்றில் வாஜ் என்பது ஈற்றுமெய்திரிந்து வாள் எனமாறியது

b வெட்டு என்பதில் வஜ் என்பது ஈற்று மெய்கெடாமலும் உயிர் நீளாமலும் கடையில் குற்றுகரம் பெற்றது போலும்.

c வடிவேல், வடித்தல் 'கூர்மை செயல்':—என்பதற்றில் வடி என்பது இந்த-வஜ்-அடியாகப் பிறந்தது போலும்

d உளி:—தச்சன் ஆயுதமாகிய உளியும் இந்த வடி என்னும் மொழியின் வகரம் ஸம்பிரஸாரணம் அடைவதினால் உண்டாயிருக்கலாம்.

vi தெலுங்கில் वड्डेन (வட்டென) वड्डिंचडमु (வட்டிஞ்சடமு) என்பவை "சமைத்தசோற்றைப்பகுத்தீத்தல்" அதாவது "பரிமாறுதல்" என்னும் பொருளில் வருகின்றன. பாலிபாஷையில் वड्ढेति [1] (வட்டேதி) என்னும் வினைப்பகுதிக்கு இதே பொருள்.

"புத்திரன் பிறந்த ஸந்தோஷத்தினால் அவன் எல்லாருக்கும் சர்க்கரை வழங்கினான்" என்பதில் இந்த வினைப்பகுதியே க-விகுதிபெற்று வழங்கு எனவந்தது

வண்மை, வள்ளல், வளளன்மை என்னும் மொழிகளும் இந்தப் பிராகிருத வினைப்பகுதியடியாகப் பிறந்தன வென்று ஊகிக்கப்படுகிறது.

vii வாள்நுதல், ஒளி வீசும் படை:—

என்பதற்றில் வாள, ஒளி, என்பவற்றிற்கும் இப்பிராகிருத வினைப்பகுதியே மூலம்

(1) अथ नम् अमरादेविया माता दिस्वाव आसनं दत्वा "यागुं वड्ढेमि सामी" ति आह Mahaummaggajataka

viii a. "பனியரும்பிப் பைதல் கொண்மாலை துனி
யரும்பித் துன்பம் வளர வரும்"

b வளரும் பிராயம், வளர் பிறை

என்பவற்றிலும் வல் என்பது ஈற்று மெய்-ள-கரமாய் மாறி வளர் என்பதற்கு மூலம் ஆனது போலும்

ix ஸம்ஸ்கிருத நிகண்டுகளில் பேசுதல், பிரகாசித்தல், கொடுத்தல், முதலிய பொருள்களில் वल्ह् (வல்ஹ்) என்ற ஒரு வினைப்பகுதி காணப்படுகிறது. இது वर्ह् (வர்ய்), वह् (வஹ்), என்பவைகளின் திரிபினால் உண்டான வினைப்பகுதியோ என்று ஸந்தேகிக்க இடமுண்டு. அப்படி இல்லாமல் वल्ह् (வல்ஹ்) என்பது புராதன ரூபமாய் இருக்கும் பட்சத்தில் மேற் காட்டிய வாளாமை, வள்ளன்மை, வாள், ஒளி முதலிய மொழிகளை இந்தப் பகுதியிலிருந்து உண்டானதாகவும் கொள்ளலாம்.

12. வட்டம், வட்டு, வட்டில், வாட்டி, வழக்கம், வாடிக்கை, உருட்டு, **உருள்**, **ஊழ்**, **ஊழி**, உறழ், வட்டை, வழி, வட்டி, உளது, உண்மை, உண்டு.

a. वृत् என்பதற்கு "திரும்பல், மாறுதல், உருளுதல்" என்னும் பொருள்களும் உண்டு. சக்கிரவர்த்தி என்றால் "சக்கிரத்தை உருட்டுவோன்" என்பது பொருள். சிலப்பதிகாரத்தில்.

'செருமிகு சினவேற்செம்பியன்
'ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே' (மங்கலவாழ்த்து)
எனவர்திருத்தல் காண்க

இப்பகுதியிலிருந்துவந்த वृत्तम् (வ்ருத்தம்) "உருண்டை வடிவானது", आवृत्तिः (ஆவ்ருத்தி) "ஒன்றையே திரும்பித் திரும்பி செயல்", என்பவை தமிழில் வட்டம் எனவும், வாட்டி (=ஆவட்டி) எனவும் மாறின.

வாட்டி என்பது "தடவை, முறை"; கிராம்யபாஷையில் "பத்து வாட்டி வந்தான், போன வாட்டியும் இப்படியேசெய்தான்" எனப்பயின்று வருகிறது. தெலுங்கில் இது மாட்டி எனமாறி மாட்டிக் மாடடிகின் "தடவைக்குத் தடவை" என்ற பொருளில்வருகிறது.

முதலாவது வட்டம் என்பது, சோற்று வட்டில், வட்டாடல, என்னும் பிர யோகங்களில் வருகிறது,

"எனக்கு அது வழக்கம் இல்லை", "அது ஒரு கெட்ட வாழ்க்கை" என்று வரும் வழக்கம், வாழ்க்கை என்ற மொழிகளுக்கு वृत् என்னும் வைதிக மொழியே மூலம்.

b ஒரு காரியத்தை அடிக்கடி செய்தல் என்னும் பொருளைத்தர ஆரியவிலே பகுதிகள் இரட்டித்து உபயோகப்படுகின்றன. இப்பொருண்மையில் वृत என்னும் பகுதி वर्वृत् (=அடிக்கடிசுழல்) என ஆகும்[1]; ववृत् என்ற ரூபமும் உண்டு. अभिनः आववृत्स्व= "எங்களை நோக்கி உருண்டுவா",[2] இப்படி இரட்டித்த பகுதிகளிலிருந்து வரக்கூடிய பிராகிருத ரூபங்கள் ஆகிய वर्वट् (வாவட்) ववट् (வவட்) என்பவை 'வ'-கரம் ஸம்பிரஸாரணத்தை அடைவதினால் உருட்டு, ஊட்டு எனமாறி (மேல் 6வது பாராவைப் பார்க்க), தமிழில் உருள், ஊழ், என்ற மொழிகள் ஆகமாறலாம். ஊழ் என்றால் "முறை, தடவை." இரண்டாம் பரிபாடலில்

"பசும் பொன்னுலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழிஊழ்முழ் செல்ல"

என்றதற்கு "விசும்பு கெட்ட ஊழிகள் முறை முறையாகக் கழிந்தனவாக" என்று உரை எழுதப்பட்டிருக்கிறது. இதில் ஊழி என்னும யுகத்தின் பர்யாயபதம் இரட்டித்த பகுதியாகிய वृत् (வவ்ர்த்) என்பதிலிருந்து வந்த वृत्तिः (வவ்ர்த்தி) என்னும் தொழிற் பெயரி லிருந்தாவது, அல்லது ஊழ் என்பதிலிருந்தாவது உற்பத்தியாயிருக்கலாம். திரும்பித் திரும்பி வருவதினால் 'யுக' ங்களுக்கு ஊழி என்ற பெயர் வந்தது போலும்.

மலையாள பாஷையில் ஊழம் என்ற மொழி (1) வாடிக்கை, (2) தடவை, (3) முறை, என்கிற பொருள்களில் வருகிறது.[3] வட்டம் என்பதும் அப்பாஷையில் வாடிக்கைப் பொருண்மையில் வருகிறது.[4]

---

1. A. A. Macdonell's Vedic Grammar p. 545. 2 (a)
2. उषः प्रतीची भुवनानि विश्वा ऊर्ध्वा तिष्ठस्यमृतस्य केतुः ।
समानमर्थं चरणीयमाना चक्रमिवनव्यसि आववृत्स्व (R. V.)
सखेसखायमभ्याववृत्स्वाशुंन चक्रम् (R. V-IV-I-I)
3. Gunderts Dictionary (1872 Edn.) p. 153
4. Ibid. p. 902.

(c) வட்டை 'வண்டிச்சக்கரம், வழி'; வட்டி, வழி, 'மார்க்கம்'; உறழ் 'மாறுதல்'. இந்நான்கு மொழிகளும் இவைபோல்வன வேறுசிலவும் இந்த वृत् (வ்ர்த்) என்ற வைதிகவினைப்பகுதி மூலமாக உற்பத்தியானவை.

(d) 'உரனசைஇ உள்ளந்துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னும் உளேன்'

என்ற திருக்குறளில் உளேன் என்ற குறிப்பு வினைக்குப் பகுதியாகிய உள் என்னும் குறைவினைக்கும், உண்மை, உண்டு, முதலியவற்றிற்கும் இந்த வ்ருத் என்பதே மூலம் போலும்.

§ 13. வேறு, வேற்று, வறு, வறுமை, மாற்றம், மாறுதல், கைம்மாறு, பரிமாறு, விற்றல், வீழ், விழு, முற்றுதல், ஊழ்த்தல்.

र्त (ர்த) என்னும் கூட்டெழுத்து எல்லா மொழிகளிலும் -ட, ட்ட,— ஆக மாறுகிறதில்லை. அப்படி மாறாதமொழிகளில் பெரும்பாலும்—கீர்த்தி, மார்த்தாண்டம், கீர்த்தனம், ஆர்த்தவம், பிரார்த்தனை, வர்த்தனை—என தத்ஸமம் ஆகவே காணப்படுகிறது. சிறுபான்மை-வத்தி (वर्ति:), சத்தி (छर्दि:) என த்த ஆக மாறிக் காணப்படுகிறது; சில மொழிகளில் வல்லின-ற-கரமாகத் திரிகிறது.

(i) ஸம் वार्तम् (வார்த்தம்)' சூந்யம், பயனில்லாதது, பதர்' ஸம் वृथा (வ்ர்தா) 'பயனில்லாமல்'. இவ்விரண்டு மொழிகளும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்பட்டவை. தெலுங்கில் वट्टि (வட்டி), उत्त (உத்த), என்ற இரண்டு மொழிகள் அதே பொருண்மையில் உபயோகப்பட்டு வருகின்றன. இவற்றுள் முதலாவதில்-ர்த-என்பது-ட்ட - ஆகமாறியது; இரண்டாவதில்-ர்த-என்பது-த்த - ஆகத்திரிந்து-வ-கரம் ஸம்-பிரஸாரணத்தை அடைந்திருக்கிறது. தமிழில் அதேபொருண்மையில் வரும் வேறு, வேற்று, வறு, வறுமை, என்னும் மொழிகளில்-ர்த-வல்லின-ற- கரமாய்த் திரிந்ததென ஊகிக்கப்படுகிறது. கன்னடத்தில்-பறி-என்ற ரூபம் இருக்கிறது.

(ii) वार्ता (வார்த்தா) 'வார்த்தை, சொல்'. இது பிராகிருதத்தில் वत्ता (வத்தா), எனவும்; ஹிந்தீயில் बात् (பாத்) எனவும்; குஜ, பஞ்சாபீ, மஹாரா-பாஷைகளில் वात् (வாத்) எனவும், காணப்படுகிறது. இதுதான் தமிழில் மாற்றம் என்ற

மொழிக்கு மூலம் என ஊகிக்கப்படுகிறது; இது கன்னடத்தில் ಮಾತು (மாது), தெலுங்கில் మాట (மாட), என்ற ரூபங்களுடன் காணப்படுகிறது.

மொழிமுதல் வ-கரமெய்-ம- ஆக மாறுவதற்குக்கீழ் வரும் § 24 வைப்பார்க்க.

(iii) वृत् (வ்ர்த்) என்னும் பகுதியிலிருந்து வந்த வர்த்தகம் என்பது 'பண்டம் மாற்று'ப் பொருளில் வருகிறது. இதிலும் முதல் வ கரமெய்-ம-ஆகமாறி, மாறு என்ற மொழி உத்பத்தியானது என்று ஊகிக்க இடமுண்டு. கைம்மாறு பரிமாறு என்பவைகளில்வரும் மாறு என்பதும் இதுதான்

(iv) वृत् (வ்ர்த்) वृध् (வ்ர்ய்) என்பவைகளின் திரிபுகளையும், ऋ என்னும் உயிர் குணம் அடைவதினால் உண்டாகும் वर्त् (வர்த்) वर्ध् (வர்ய்) என்பவைகளின் திரிபுகளையும் முன்னிரண்டு (11 and 12) பாராக்களில் ஆராய்ந்தோம். இவ்வுயிர் குணம் அடையாமல் इर् (இர்) என்று கூட கிராம்ய வழக்கில் ஸாதாரணமாக மாறுமாம். அப்பொழுது இவைகளின் ரூபங்கள் वित् (விர்த்) विर्ध् (விர்ய்) என ஆகும். (Beames I. p. 166)

இவற்றுள் முதலாவதிலிருந்து தமிழ் வில் (=விற்ற்) 'பண்டம் மாறு' என்ற வினைப்பகுதியும், இரண்டாவதின் இறந்தகாலப் பெயரெச்சமாகிய विड्ढ (விர்ஜ) 'பெருத்த, மேலான' என்பதிலிருந்து விழு, வீழ் (=விஜ, வீஜ) என்னும் உரிச்சொற்களும் உண்டாயினவென்று ஊகிக்கலாகும்.

(v) இந்த இறந்தகாலப் பெயரெச்சம் 'முதிர்ந்த, வயது சென்ற, பழைய' என்ற பொருள்களில் बुड्ढो (பு்ஜோ) बूढो (பூஜோ) எனச்சில வட ஆரியபாஷைகளில் (B. I. p. 163) காணப்படுகிறது. இந்த ரூபங்களுக்கு மூலமிராகிருத ரூபங்கள் वुड्ढो, वूढो(வுஜோ, வூஜோ) என்றிருந்திருக்கவேண்டும். இவற்றிலிருந்து ஊழ்த்தல் 'பக்குவமடைதல், அழுகுதல்' என்ற தமிழ்வினை உற்பத்தியானதென்று ஊகிக்கலாகும்.

(vi) முற்றுதல் 'பூர்த்தியாதல்', முற்றிலும் 'பூர்த்தியாக', என்ற தமிழ் மொழிகளுக்கு ஸம்பந்தப்பட்ட மொழிகள் கன்னடத்தில் அகப்படவில்லை. தெலுங்கில் ఓత్తిగా (ஒத்திமன்) 'பூர்த்தியாக' என்று ஒருமொழி இருக்

கிறது. இது ஸம் पूर्ति: (பூர்த்தி) 'ஸம்பூர்ணம்' என்பதி லிருந்து உற்பத்தியானது போலும். தமிழ் முற்று என்பதும் ஸம். * பூர்த்த என்பதின் ப-கரமெய்-ம-ஆகமாறி-ர்த்த்- என்னும் கூட்டெழுத்து-ற்ற் ஆகமாறி உற்பத்தி ஆயிற்று என்று சொல்ல இடம் உண்டு. (கீழ் § 24)

§ **14**. (i) விண்ணப்பம், வினவுதல்; (ii) உசாவுதல் (iii) ஊடல் (iv) ஓழிதல் (v) ஒளிதல் (vi) உயர்தல் (vii) வாத்தியார், ஓச்சர், (தேலுங்கு ஒஜ்ஜ) (viii) பொழிதல் (ix) ஓவியம் (x) போதி, புதை (xi) வீதல் போதல் (xii) போர்த்தல்.

உபஸர்க்கத்தோடு கூடிய அநேகம் ஆரிய மொழிகள் உபஸர்க்கம் இருக்கிறதென்று அறியக்கூடாத விதமாய்த் தமிழில் மாறிவிட்டன. अव (அவ), अप (அப) என்ற உப ஸர்க்கங்கள் பாலி பாஷையில் ஓ, ஊ, அல்லது உ ஆக மாறுமென்று முன்னமேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (§ 8 -xxix) அவை வேறுவிதமாயும் மாறுகின்றன.

(i) ஸம் विज्ञाप्- (விஜ்ஞாப்-), பிரா विन्नव्- (வின்னவ்-) இது ஸம். विज्ञा (விஜ்ஞா) 'அறிதல்' என்ற பகுதியின் பிற வினைப்பகுதி.

(ii) ஸம்.उपश्राव्[1] (உபச்ராவ்-)இது उपश्रु (உபச்ரு),"காது கொடுத்துக் கேட்டல்" என்பதின் பிறவினைப்பகுதி.

(iii) ஸம். अपावर्त् (அபாவர்த்-). 'பராங்முகமாய் விலகி இருந்து ஸம்பாஷணம் மறுத்தல்; ஸமாதானம் மறுத்தல்" பிரணயகலஹம் என்றபடி.

(iv) ஸம் अवशिष् (அவசிஷ்) 'மிகுதியிருத்தல், பாக்கி இருத்தல்'

(v) ஸம். अवली (அவலீ) 'ஒட்டிக்கொள்ளுதல், ஒளி தல்.' ली (லீ)என்னும் பகுதிக்கே ஒளிதல் என்னும் பொருள் ஆரியத்தில் உண்டு

(vi) ஸம் उच्छ्रि [2] (உச்ச்ரி) உயர்ந்து ஓங்குதல்

---

1. उच्छ्राव्- (உச்ச்ராவ்) 'கூவிச்சொல்லுதல்'

'உசாவு' என்பது இதிலிருந்தும் உத்பத்தியாயிருக்கலாம்

2. उच्छ्र्यस्व वनस्पते वर्ष्मन् पृथिव्या अधि (R. V. VIII-1-8)

(vii) ஸம் उपाध्याय: (உபாத்தியாய) 'குரு'

(viii) ஸம் प्रवर्ष: (பிரவர்ஷ) 'கனத்தமழை':—(ப்ரவர்ஷி =பவஷி=பொழி)

(ix) ஸம் उपमा (உபமா) 'உவமை':—இதிலிருந்து உத்பத்தியான (तद्धितम्) (தத்திதம்) औपम्यम् (ஔபம்யம்) 'ஒத்திருப்பு'.

(x) ஸம் अपिधा (அபிதா) 'மூடு, மறை, ஒளி, மண்ணில் புதை':—இதுமுதல் अ (அ) கெட்டு, पिधा (பிதா) எனவும் வழங்குகிறது; செயப்பாட்டு வினையில் இது पिधी (பிதீ-)என மாறுகிறது,

ஸம் उपधा (உபதா) என்பதற்கும் 'மூடு, ஒளி,' என்ற பொருள் உண்டு.

(xi) ஸம் वी=वि+इ (வீ) 'போதல்'[1]

" தீயவைசெய்தார் கெடுதனிழறன்னை
வீயாதடி யுறைந்தற்று "

(xii) ஸம் प्रावृ (ப்ராவ்ர்), 'போர்த்தல்':— இவ்வினைப் பகுதி வைதிக பாஷையில் प्रोर्[2] (ப்ரோர்) எனக் காணப்படுகிறது.

இந்தப்பாராவின் தலைப்பில் காட்டிய தமிழ் மொழிகள் முறையே மேற்கூறிய ஆரிய மொழிகளிலிருந்து உற்பத்தியாயின.

§ 15. ழ-காரமெய்:—மேல் பாராக்களில் எடுத்துக்காட்டிய உதாரணங்களில் பலவற்றில் ழ கரமெய் வேறு மெய்களுக்கு மாறாக ஆரியச் சிதைவுகளில் வந்திருக்கிறது. கீழேவரைந்துள்ள உதாரணங்களிலுள்ள ழ-கரமெய்யும் குறிப்பிடற்பாலது :—

(i) तुलसी (துலஸீ) (ii) दलम् (தளம்) (iii) फलम् (பலம்) (iv) विषम: (விஷம) 'இடர்' (v) अमृतम् (அமிர்தம்) (vi) विषुवम (விஷுவம்) 'இரவும் பகலும் ஸமமானதினம்' (vii) पेटक:

---

1. अपेत वीत विचसर्पतातः
येऽत्रस्थ पुराणाः येचनूतनाः (T. S. IV-2-4)

2. सा मा प्रोर्णोतु तेजसा यशसा ब्रह्मवर्चसेनेति

(பேடக) 'பெட்டி' (viii) स्थाली (ஸ்தாலீ) 'தாழி' (ix) कटकम् (கடக) 'வீடு' (x) धृष् (தர்ஷ்) 'அவமதித்தல்' (xi) बह्वृच (பஹ்வ்ர்ச) 'ருக்வேதஸம்பந்தமான' (xii) वकुलः (பகுல) 'மகிழ' (xiii) मुकुलम् (முகுள) 'மொட்டு' (xiv) कृष् (க்ர்ஷ்) '(கோடு) கிழித்தல்' (xv) म्लक्ष (ம்லக்ஷ்) 'மழபடுதல்' இவைகளிலிருந்து முறையே

(i) துழாய் (ii) தழை (iii) பழம் (iv) விழுமம் (v) அமிழ்து (vi) விழு (vii) பேழை (viii) தாழி (ix) கழகம் (x) தெழி (xi) பௌழிகம், பவிழியம் (xii) மகிழ (மரம்) (xiii) முகிழ் (தல்) (xiv) கிழித்தல் (xv) மழலை, மழமழப்பு—உண்டாயின.

(xvi) மழை:—இது वर्षः (வர்ஷ) என்னும் ஆரியபதத்திலிருந்து உத்பத்தியானது என்று ஊகிக்கப்படுகிறது. मृष् (ம்ர்ஷ்) 'துளித்தல்' என்னும் ஒருவினைப்பகுதியும் ஆரியத்திலுண்டு.

(xvii) மொழி 'வார்த்தை, பாஷை':—இது ஹிந்தீ பாஷையில் வழங்கும் बोली (போலீ) என்பதின் திரிபு.

மேலிரண்டு மொழிகளில் ழ-கரம் வருவதுடன் மொழி முதல் மெய்யும் ம-கரமாக மாறியது. இம்மொழிகளுக்கு ஸம்பந்தப்பட்ட மொழிகள் தமிழில் இல்லாததினால் இவை வேறு பாஷையிலிருந்து வந்தவையென்று நிச்சயமாய்ச் சொல்ல இடமுண்டு.

(xviii) முழி, மிழி, 'கண், கண்கொட்டுதல்':— இவை 'கண்கொட்டுதல்' என்னும்பொருளுள்ள मिष् (மிஷ்) என்னும் வைதிக வினைப்பகுதியிலிருந்து உத்பத்தியாயின போலும்.[1] நிமிஷம் என்பது இதிலிருந்து உத்பத்தியானது. निमिषः (நிமிஷ) निमेषः (நிமேஷ) 'கண்ணிமைப் பொழுது.'

(xix) பிழி, பீழி, பீழை — இவை पीड् (பீட்) 'துன்பம் செயல், நசுக்கல்', पीडा (பீடா) 'துன்பம்', என்பவைகளிலிருந்து உத்பத்தியாயின.

"அறிவிலார் தாம் தம்மைப்பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தலரிது"

---

1. आत्मा वा इदमग्र आसीत् नान्यत्किं च न मिषत् (Ait. Aranyaka I-1)

(xx) கொழுநன்:—இது கோள் என்னும் வினையடியாகப் பிறந்த கொளுநன் என்பதன் திரிபு; கொண்டான் என்பதற் கும் அதேபொருள். கொழுந்தன் என்பது வேறு (§ 10 d)

"தற்காத்துத்தற் கொண்டாற் பேணித்தகை சான்ற
சொற்காத்துச் சோர் விலாள் பெண்"

(xxi) கலுழன், கலுழம் ≡ गरुड: (கருடன்), कलुषम् (கலுஷம்) "மலம்"

(xxii) சோழி:— ஸம். कपर्दिक: (கபர்திக) 'சோழி'; ஹிந்தி. कौडी (கௌடீ); மஹாராஷ்டிரீ முதலிய பாஷைகளில் कवडी (கவடீ). (Beames-I-200) இதில் ட-கரமெய் ழ-கா மாவதுடன் கவ≡கோ≡சோ

(xxiii) ஊழ் 'வெயில்', என்றாழ் 'சூரியவெயில்'. இது उष् (உஷ்), उष्ण (உஷ்ண), என்பவைகளோடு ஸம்பந்தப்பட்டது

(xxiv) ஒழுங்கு 'வரிசை':— ஸம். आवलि: (ஆவலி) 'வரிசை'≡பிரா ओलि (ஒலி)

(xxv) சூழ்தல் "ஆராய்தல், யோசித்தல்" 'சூழாது சுரக்கும் நன்னன்'. இது ஸம்- शोध्- (சோய்-), மகா-सूड (ஸூட) 'ஆராய்தல்' என்பவைகளோடு ஸம்பந்தப்பட்டது (Molesworth's Marathi-English Dictionary)

(xxvi) தாழ்தல், தழைதல்:—ஸம் तलः (தல) 'கீழ்பாகம், அடி'

இதுமாதிரியே நாழி, ஆழாக்கு, உழக்கு முதலிய முகத் தல் அளவைப் பெயர்களும், நாழி, நாழிகை முதலிய காலப் பெயர்களும், ஆழ், ஆழி, சூழ், சுழல், சுழி, குழை, குழல், கூழை முதலிய ஸாதாரணமான மொழிகள் அநேகம் ஆரிய மூலமென்று தெரியவருகிறது. இவைகளை எல்லாம் இவ்வி யாசத்தில் அடக்குவது ஸாத்தியமில்லை

ழ-காரத்தை தமிழுக்கே உரிய ஒரு சிறப்பெழுத்து என்று சிலர் கொண்டாடுவது உண்டு. இது தவறு. முற் காலத்தில் இவ்வெழுத்து தெலுங்கு-கன்னட பாஷைகளில் கூட இருந்தது. தமிழில் பெரும்பாலும் இது ஆரியச் சிதை வுகளிலேயே காணப்படுகிறபடியால் ழ-கரம் உள்ள மொழி யைக்கண்ட உடனே அம்மொழி ஆரியச்சிதைவோ என ஸந்தேகிக்க இடம் உண்டு.

§ **16.** நாஞ்சில், நாமம் நோக்கு, நெற்றி, நீலி, நங்கூரம், நாடு, நோய்

சிலமொழிகளில் ஆரிய ல-காரம், ந-காரம் ஆகத்திரிந்து தமிழில் காணப்படுகிறது:—

(i) लांगलम् (லாங்கல) "ஏர்"; (ii) ललाटम् (லலாட) "நெற்றி";[1] (iii) ललाम (லலாம) "நாமம், குறி;" (iv) लोकनम् (லோகனம்) "பார்த்தல்;" (v) लीलिनी (லீலினீ) "விளையாட்டுக்காரி" இவைமுறையே

(i) நாஞ்சில், (ii) நெற்றி, (iii) நாமம், (iv) நோக்கு, (v) நீலி, "பாசாங்கு செய்பவள்," என மாறின. இவற்றுள், முதலிரண்டிலும் பிராகிருதத்திலேயே ல-காரம் ந-காரம் ஆக மாறிவிட்டது.

(vi) லங்கர் என்ற அந்நியதேசத்து மொழி-நங்கூரம்-எனமாறியது.

(vii) राष्ट्रम् (ராஷ்ட்ரம்) "நாடு, தேசம்"(viii) रोगः (ரோக) "நோய்":— இவ்விரண்டு மொழிகளும் சிலபிராகிருதங்களில், ர-காரம் ல-காரம் ஆக மாறப்பெற்று लट्ठु (லட்டு), लोयु (லோயு), என்ற ரூபங்களை அடையும். பிறகு இவை தமிழில் ல-காரம் ந-காரம் ஆகமாறி, நாடு, நோய், என்ற ரூபங்களை அடைந்தன போலும்.

§ **17.** அல்லம், அல்ல, குள்ளன், சுள், சூல், சூளை தல்லி, தள்ளை, பிள்ளை, பீள், வெள்ளை,

சில ஆரிய மொழிகளில் द्र, (த்ர) என்னும் கூட்டெழுத்து ल्ल (ல்ல) எனமாறி இருக்கின்றது:—

(i) आर्द्रकः (ஆர்த்ரக), "பச்சைஇஞ்சி" = அல்லம்

(ii) आर्द्र (ஆர்த்ர) "ஈரமான" = அல்ல, अल्ल[2]

---

1. ललाभू, रास, முதலியவை எப்படிलेम, रेम, என மாறினவோ அப்படியேललाट என்பது लेट எனமாறி "நெற்றி"க்குமூலமாய் இருக்கலாம்.

2. कदासत्ताहसम्मेघे ओवद्दे अल्लचीवरो पिण्डकाय चरिस्सामि (Mahajanakajataka)

(iii) क्षुद्रक: (க்ஷூத்ர) "அல்ப, சிறிய"=க்ஷூல்லக, क्षुल्लक 3 இக்தமாறுபாடு வேதத்திலேயே காணப்படுகிறது

(iv) भद्र (பத்ர), "க்ஷேமகரமான"=भल्ल, भला (ஃல்ல,ஃலா) (H. G. G. § 77)

இதுமாதிரியே

(v) क्षुद्र: (க்ஷூத்ர) "அல்ப சிறிய"

(vi) क्षुद्रा (க்ஷூத்ரா) "வேசி, பொதுமகள்"

(vii) धात्री (தாத்ரீ) "செவிலித்தாய்'

(viii) पुत्र: (புத்ர) "குமாரன், பிள்ளை"

இவை முறையே

(v) குள்ளன் ; சுள் 'சிறிய', சூல் 'சிலை'; (vi) சூளை (சுள்ளா) 'வேசி'; (vii) தல்லி, தள்ளை, 'தாய்;' (viii) பிள்ளை ஆயின் வென்று ஊகிக்கப்படுகிறது.

पुत्र: (புத்ர) என்பது சவுரஸேனீ பாஷையிலேயே पुडो (புடோ), पुड्डो (புட்டோ), என மாறிவிட்டது. (Var. xii:—5). தமிழ் பீள் "சிலை, இளங்கதிர்," என்பதற்கு இதே மூலம்

இதுமாதிரி (ix)श्वित्रक (ச்வித்ரக) "வெளுத்த," என்பது தமிழில் வெள்ளை, வெளுப்பு, வெண்மை முதலிய மொழிகளுக்கு மூலம் ஆயிற்று என்று ஊகிக்கலாகும்.

§ 18. வேங்கை, வேழம், வேலை, வெங்கன், வெட்டி, வீழ், வீண், வியாழம், ஏலை, செழு, பெறட்டு, புறள்.

(a) व्या (வ்யா), व्य (வ்ய):— இக் கூட்டெழுத்துக்களுக் கிடையில் இ-கர உயிர் வருவித்து தமிழில் உபயோகப் படுத்துவது வழக்கம். (உ-ம்) வியாச்சியம், வியாஸம், வியஸனம்

சில மொழிகளில் ய-கர, யா-காரங்கள், எ-கர, ஏ-காரங்களாகவும் மாறுகின்றன. (உ-ம்)

(i) व्याघ्र: (வ்யாக்ர) 'புலி,' (ii) व्याल: (வ்யால) 'துஷ்ட மிருகம்,'(iii) व्यापार: (வ்யாபார) 'பண்டம் மாற்றுத்தொழில்,' (iv) व्यंग: (வ்யங்க) "அங்கஹீனன், குறைபட்டவன்." இவை முறையே

3. नमो महद्भ्यः क्षुल्लकेभ्यश्च (T. S. 4-5-4)

(1) வேங்கை, (2) வேழம் "யானை," (3) வேபாரம், வேரம் (4) வெங்கன் என மாறின.

"வ்யாபாரம்" என்ற மொழி இப்பொழுது 'பண்டம் மாற்று'த்தொழிலே உணர்த்தியபோதிலும் பூர்வத்தில் அரசனால் ஏற்படுத்தப்பட்ட சில வேலைகளை உணர்த்தியதென்று புராதன பல்லவ சாஸனங்களால் தெரியவருகிறது. [1] व्यापार: (வ்யாபார) என்பது பேர எனத்திரிந்த மாதிரி வேலை என்றும் ஆனது போலும். பேர என்பதே வேல, வேலை எனத் திரிந்திருக்கலாம்.

ஒன்று மில்லாதவனை வெங்கப்பய்யன் என்று பரிஹாஸமாய்ச் சொல்வது வ்யங்க என்பதிலிருந்து உத்பத்தியானது.

व्यर्थ: (வ்யர்த்த) "பயனற்ற, பாழ்போன." இம்மொழி பிராகிருதத்தில் वेट्ट (வெட்டு) என்னும் உச்சாரணத்தை அடையும். இதிலிருந்து தமிழ் வெட்டி, வீழ், வீண் "பயனற்ற, பாழ்போன," என்றமொழிகள் உண்டாயின.

> " வீழ் நாள் படாமை நன்றாற்றின் அஃதொருவன்
> வாழ் நாள் வழியடைக்கும் கல் "

(b) குருவாரத்தின் பெயராகிய வியாழம் என்ற தமிழ் மொழி தெலுங்கில்-பேஸ-என்றும், கன்னட க்ராமயத்தில் [2] ब्याल (ப்யால) என்றும் காணப்படுகிறது; இவ்விரண்டு மொழிகளுக்கும் "வெள்ளி நாணயம்" என்பது பொருள். ஆகவே, குரு, சுக்கிரன் என்ற இரண்டு கிரகங்களும் வானமீன்கள் எல்லாவற்றிலும் மிக்க பிரகாச முள்ளவைகளானபடியால் இவ்விரண்டிற்கும் ஒரே பொருளுள்ள பெயர்கள் இடப்பட்டன போலும். வ்யாழ என்பது திராவிட கிராம்யங்களில் வேழ, வேள, பேஸ, பேல, ப்யால என்ற ரூபங்களுடன் உறழும். வெள்ளி என்பதற்கும், வியாழம் என்பதற்கும் ஒரே மூலம்.

(c) சிலமொழிகளில் ய-கரத்தின் ஸாமீப்பியத்தால் முன்னிருக்கும் அ-கரம் எ-கரமாக மாறுகிறது. இதற்கு பிராகிருதங்களில் உதாரணங்கள் Pischel P. G. 176 ல் காண்க. தமிழில்.

---

1. सिवखंदवम्मो धंनकडे वापतं आनपयति (E. I. vol. vi-p 86) वापतं=व्यापृतं
2. L. S. of India Vol-iv-p-388.

(i) अन्यः (அந்ய) 'இதர':—இது ஏன எனமாறியது.

(ii) शस्यम् (சஸ்யம்), सस्यम् (ஸஸ்யம்), (a) "மேலான புகழத்தக்க," (b) "தாந்யவர்க்கம், பயிர்." இவ்விரண்டு மொழிகளும் செழு என மாறின போலும்.

(உ-ம்) செழு நகர், செழுங்கிளை, செழித்த தேசம்='தாந்ய ஸமிருத்தி உள்ளதேசம்.'

(iii) पर्यस् (பர்யஸ்) 'மேலது கீழாகப்பிறட்டுதல்':—இதிலிருந்து உண்டான இறந்தகாலப் பெயரெச்சம் पर्यस्त (பர்யஸ்த) என்பது; இதுசில பிராகிருதங்களில் पलट्, पलठ् (பலட்) எனமாறி ஒரு புதிய வினைப் பகுதியாக உபயோகப் பட்டு வந்தது (H. G. G. §§ 143,) இதுதான் தமிழ் பெறட்டு, பெறளு பிறழ் என்பவைகளின் மூலம்.

இது மாதிரி இறந்தகாலப் பெயரெச்சங்களிலிருந்து உண்டான புதுவினைப்பகுதிகள் ஹிந்தி பாஷையில் அநேகம் உண்டு. पिष्ट (பிஷ்ட) 'அடிபட்ட'; कृष्ट (க்ருஷ்ட) (கஷ்ட) 'இழு பட்ட'; उपविष्ट (உபவிஷ்ட) 'உட்கார்ந்த'; என்பவைகளிலி ருந்து पीट् (பீட்) 'அடித்தல்' काढ् (கா஢) 'இழுத்தல்', बैठ् (பை஠்) 'உட்கார்தல் முதலிய புதுவினைப்பகுதிகள் உண்டா யின. (H. G. G. §§ 352, 173)

(d) பின்வரும் மொழிகளிலுள்ள ஈற்று ய-கர, யா-கா ரங்கள் ஸம்பிரஸாரணத்தை அடைந்து இ-காரம் ஆயின.

(1) कन्या (கந்யா); (2) संध्या (ஸந்த்யா); (3) वंध्या (வந்த்யா); (4) पाण्ड्यः (பாண்ட்ய); (5) हत्या (ஹத்யா); (6) वेश्या (வேச்யா); (7) अहल्या (அஹல்யா). இவை முறையே

(1) கன்னி (2) அந்தி (3) வந்தி (4)பாண்டி (5) ஹத்தி (6) வேசி (7) அஹலி என மாறின.

§ 19. (a) பயிர், பயில், பெயா, போ:—प्रच्छ् 'கேள், வினவு', என்னும் வினைப்பகுதி पूच् (பூச்) என சில வடபாஷைகளில் மாறி கூப்பிடு, பெயர், என்னும் பொருள்களில் உபயோகப் பட்டுவருகிறது. ஒட்ரபாஷையில் प्रच्छ् (ப்ரச்ச்) என்பதிலி ருந்து உத்பத்தியான தொழிற்பெயரின் ரூபம் पचारिबा (பசாரிபா) எனக் காணப்படுகிறது. (Beames Vol. I p. 273.

ஆகவே இப்பகுதி பசர் என்னும் ரூபத்தையும் அடையும் போலும். தமிழில் இடைச் ச-கரத்துக்கு ய-கரம் போலியாக வந்து, வேறு சில அல்பமாறுபாடுகளும் உண்டாய் பயிர், பயில் என 'விளித்தல்' பொருளும், பெயர், பேர் என 'அபிதான'ப் பொருளும் உடையமொழிகள் உண்டாயின.

(b) வியங்கோள் இது கன்னடத்தில் "பெஸஸம் கோள்" என்று காணப்படுகிறது. கிட்டல் (Kittels Kan-English Dictionary) என்பவர் பெஸ என்பதை विधा (வியா) 'ஆக்கினை, உத்திரவு' என்றவடமொழியின்-தத்பவம் என்று சொல்லுகிறார். 'பெஸமெய்,' 'பெஸபேழ்,' 'பெஸ கொள்' என்றால் கன்னடத்தில் முறையே 'உத்திரவுப்படி செய்,' 'ஆக்கியாபனம செய்,' 'வேண்டிக்கொள்,' என்பது பொருள்.

(c) பகுதி, விகுதி=प्रकृति: (ப்ரகிருதி), विकृति:(விகிருதி). ப்ரகிருதி என்றால் 'ஸ்வபாவமாய் உள்ளது, மாறுதல் அடையாதது'; விகிருதி என்றால் 'மாறுதலை உண்டு பண்ணுவது'. பகுதி=பகு+தி எனப்பிரித்தாலும் அது ஆரியமே.

(d) எழுத்து, எழில், நீட்டு, நெட்டெழுத்து, நெடுங்கணக்கு.

வைதிக பாஷையில் எழுத்துக்கு वर्ण: (வர்ண)என்று பெயர். இப்பெயர் ஆதியில் எழுத்துக்கள் வர்ணம பூசப் பெற்றன என்பதைக் குறிப்பிடுகிறது. लिप् (லிப்) 'பூசுதல்', என்ற வேற்றுருவினைப்பகுதியிலிருந்து लिप्त:(லிப்த)'பூசப்பட்டது'என்ற ரூபம் உண்டாகிறது. இது பாலி பாஷையில் लित्त[1] (லித்தெ) எனவும் அபப்ரம்ச பிராகிருதத்தில் लित्तु (லித்து) எனவும் மாறுகிறது. இதிலிருந்து தான் தமிழ் எழுத்து உண்டானதாக ஊகிக்கப்படுகிறது.' லித்த் என்பதில் ஒரு மெய் கெட்டு மற்றொரு மெய் ழ-கரமாக மாறினால் எழில் 'வண்ணம், அழகு' என்றமொழி உண்டாகும் (முன் II § 5, III § 6, வது பாராக்களைப் பார்க்க)

மலையாளத்தில் நீட்டு என்னும் மொழி "அரசனது எழுத்து மூலமான ஆணை" என்னும் பொருளில் உபயோகப்பட்டு வருகிறது. இதுதான்

---

1. कदाहम् कुटागारे लित्ते चन्दनफोसिते
पहायपब्बजिस्सामि तं कदास्सु भविस्सति (Mahajanaka jataka)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்லமரங்கள்-சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவனன் மரம்.

என்னும் செய்யுளில் வரும் நீட்டு என்னும் மொழி போலும். இம்மொழி "நன்றாய் வர்ணம் போடுதல்" என்னும் பொருள் உள்ள निपिश् (நிபிச்) என்னும் ஆரியவினையடியாகப் பிறந்தது; இவ்வினை ஸமஸ்கிருதத்தில் இப்பொருளில் பிரயோகப் பட்டுவந்ததாகத் தெரியவில்லை. பேர்ஷியனில் அடிக்கடி பிரயோகம் காணப்படுகிறது. இவ்வினையிலிருந்து உண்டான இறந்தகாலப் பெயரெச்சம் निपिष्ट (நிபிஷ்ட) என்பது. பல்லவீ (Pehlavi) பாஷையில் எழுதிய ஒரு புராதனக் கையெழுத்துப் பிரதியில் पापक् कर्द् निपिष्ट् என்று எழுதப்பட்டிருக்கிறது.[1] இதற்கு உச்சாரணமும் பொருளும் வருமாறு:—पापक् कर्द् नवष्ट् (பாபக் - கர்த் - நவஷ்ட்) "பாபக்" என்னும் அரசன் "நவஷ்ட் செய்தான்", அதாவது "எழுதினான்"

தத்கால உர்து (Urdu) பாஷையில் நவிஷ்ட் என்றால் "எழுத்து". தாலூகா கச்சேரிகளில் ஜவாப் நவீஜ்[2] "ஜவாப் எழுதுகிறவர்" என்ற பெயருள்ள ஒரு கிளர்க்கு இருப்பது எல்லாருக்கும் தெரியும்; இந்த நவீஜ் என்பது நிபிச் என்ற ஆரியவினைப்பகுதியின் திரிபு.

மேற்காட்டிய நிபிஷ்ட் என்பதிலிருந்து தான் தமிழ் நீட்டு உத்பத்தியாயிருக்கவேண்டும்

நெட்டு என்னும் மொழி நீட்டு என்பதின் உயிர் குறுகிய ரூபம்போலும்; ஒவ்வொரு சாஸனத்திலும் அலங்கரித்து எழுதின பத்திரபாகத்துக்கு நெட்டெழுத்து என்று பெயர். நெட்டு என்பதில் ஒரு மெய்கெட்டு நெடு என்ற ரூபம் வந்திருக்கிறது (III § 6). இவைகளுக்கு ஆதியில் இருந்த "வர்ணம் போட்டது" என்றபொருள் பிற்காலத்தில் "எழுதியது" என மாறியதுபோலும். நெடுங்கணக்கு என்பதும் வர்ண ஸமாம்நாயம என்பதும் ஒரே பொருளுள்ளன.

---

1. M. Haug's Essays on the Parsis p. 90.

2. இப்படி ஜ-காத்துக்கு அடியில் கோடு இருந்தால் அதைத் தந்த்யமாய் உச்சரிக்க வேண்டும், இங்கிலீஷ்-Z-மாதிரி.

(e) பால்:—ஸம் भक्त (ஃக்தம்) "கூறு, பாகம்." இது அப-பரம்ச பிராகிருதத்தில் भत्त (ஹத்து) என மாறி, வட இந்திய பாஷைகளில் भात् (ஹாத்) என மாறலாம். இதுதான் தமிழ் பால் என்பதற்கு மூலம் என ஊகிக்கப்படுகிறது. (உ-ம்) வள்ளுவர் முப்பால், ஐம் பால், நாற்பால் குலம். விதி, ஊழ் என்னும் பொருளுள்ள பால், என்பதும் இதுதான்.

(f) திணை, இனம், கணம்:—

ஸம் गण: (மண) 'கூட்டம் தொகுதி':— இதுதான், தமிழில் "வன்கணம்", "மென்கணம்", என்பவைகளில் உள்ள கணம் என்பது

ஸம் जनुस् (ஜநுஸ்) "சாதி, வகை"; ஸம ஜன: (ஜந) 'ஜநம்'. இவ்விரண்டு மொழிகளும் ஓரே ஆரியப் பகுதியி லிருந்து உத்பத்தியானவை. இரண்டாவதற்கு வழக்கில் உச்சாரணம் ஜேநம். இவைகளில் ஜ-கர மெய் கெடுவதி னாலும், த-கர மாக மாறுவதினாலும். இனம், திணை, என இரண்டு மொழிகள் உண்டாயின என்று ஊகிக்கப்படுகிறது.

ஜகரம் தந்தியமாய் மாறுவது பெர்ஷியன் பாஷையி லும், ஸிங்களீஸிலும், தாளவ்யத்தை தந்தியமாய் உச்சரிக் கும் வேறு பாஷைகளிலும் ஸாதாரணம். (§ 25)

जन् (ஜந) என்னும் பகுதியின் உயிர் ஆதியில் எ-கரமாக இருந்தது என்று ஐரோப்பிய பாஷா சாஸ்திரி களின் கொள்கை. (1) ஸம் जनुस् (ஜநுஸ்) (2) ஸம் ஜன: (ஜந) (3) லத்தின் (Latin - *Genus*) ஜேநஸ் 'ஜாதி, வகை' (4) இங்கிலீஷ்(English-*Gender*) ஜெண்டர் 'பால்'; இவை நான்கும் ஒன்றுக்கொன்று மிக்க ஸம்பந்தமுடையன.

திணை என்னும் மொழிக்கு உயர்திணை, அஃறிணை என்னும் தொடர்ச் சொற்களில் காணுகிறபடி "வகை, இனம்" என்பதே முதலில் பொருள். பிறகு முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், என்று ஐந்தாய் பிரிக் கப்பட்ட நிலக்கூறுகளைக் குறித்தபடியால் "பூமி, நிலம்" என்ற பொருளும் திணைக்கு வந்திருக்கிறது. திணை, இனம், கணம், பால், வகை என்பவை ஒரு பொருட் பலசொல். இவை ஐந்தும் ஆரியச் சிதைவுகள்.

§ **20. ஜவளி, சகலன், இருனை, செவிலி, தோழன், தோழி, ஓடு, உடன், தொழுதல்.**

இவை யெல்லாம் கீழே குறிப்பிட்ட ஆரியமொழிகளின் சிதைவென்று ஊகிக்கப்படுகிறது.

यमलः, यमली (யமலம், யமலீ) "ஜோடி, இரட்டை".

यमलौ (யமலௌ), "இரட்டைப்பிள்ளை".

यमल (யமல) "ஜோடியில் ஒன்று".

यमली (யமலீ) "ஒரு ஜோடி வேஷ்டி".

ஆரிய-ய-கரம் பிராகிருதங்களில் ஜ-கரமாக மாறும். மொழியிடை வ-கரம் உ-கரமாக மாறி முன்னிருக்கும் அ-காரத்துடன் சேர்ந்து ஓ-காரமாகும் (உ-ம்) யவந "அங்யதேசத்தாரின் பெயர்"; இது ஜோன எனப் பிராகிருதங்களில் மாறியது. இதுதான் தமிழில் சோனகன் என்பது.

பிராகிருதத்திலும் திராவிடத்திலும், மொழியிடை ம-கரம் வ-கரமாகவும், மொழியிடை வ-கரம் சில இடங்களில் க-கர, ம-கரங்களாகவும் மாறுவதுண்டு.[1]

இம்மாறுபாடுகளினால் மேற்கூறிய ஆரியமொழிகள் जवळ (ஜவள), जवळी (ஜவளீ) जोळ (ஜோள), जोळि (ஜோளி) जगळ (ஜமள) यगळ (யமள) எனமாறும்.

யமள என்பதில் மொழி முதல் ய-கரமெய் கெட்டு ள-கரம் டகரமாக மாறி, अमडलु (அமடலு) "இரட்டைப் பிள்ளை" என்ற மொழி இப்பொழுது தெலுங்கில் உபயோகப்பட்டு வருகிறது.

(i) ஜவளி 'வஸ்திரம்' எனக் கன்னடத்திலும், ஜவளிக் கடை, ஜவளிவியாபாரம் எனத்தமிழிலும், வழங்கும் ஜவளி என்னும் மொழி, यमली (யமலீ) என்பதின் திரிபு.

(ii) जगिलेँडु (ஜமிலெँடு) "மனைவியின் உடற்பிறந்தாள் புருஷன்" எனத்தெலுங்கிலும், அதே பொருளில் சகலன் எனத்தமிலும், வரும் மொழிகள் மேற்கூறிய *जगळ (ஜமள) என்பதின் திரிபுகள்.

1. தமிழில் சமரி, அமணன் (சமணன்) என்பவை சவுரி, அவுணன் என மாறின; செவிடு, தெவிட்டுகிறது என்பவை செகுடு, தெகுட்டுகிறது, என உலகவழக்கில் மாறின.

தெலுங்கில் ஹிமம் (குளிர்), ஸமம் (சரிபாதி) என்ற ஆரியமொழிகள் இவமு, இமமு, ஸவமு, ஸமமு என மாறின.

கன்னடத்தில் யமுனை என்ற நதியின்பெயர் ஜமுனே என மாறியது.

(iii) தமிழில்-இகுளை 'தோழி'-என்பது, यगल (யகள) என்பதின் திரிபு; ய-கரத்துக்கு மொழி முதலில் ஸம் பிரஸாரணம் பூர்வகாலத்திலேயே வந்திருக்கிறது; இது ஒரு புராதன மொழி.

(iv) சேவிலி. இது ஜவலியின் திரிபு.

"என்னப்பனெனக்காயிகுளா யென்னைப்பெற்றவளாய்" என்ற திருவாய் மொழிக்கு (vi —3—8) பின்வருமாறு அடி யுரை காணப்படுகிறது:—

"இகுள்—இகுளை என்பதின் கடைக்குறை, தோழி என்று பொருள். செவிலித்தாய் என்று அருளிச் செய்வர். செவிலித்தாய்-தாய்க்குத்தோழி"

(v) ஜவ ள, ஜவளி, ஜோள, ஜோளி என்னும் மொழி களும், ஜ-கரம் தந்தியமாய் மாறுவதினால் உண்டாகும் தோடு என்னும் மொழியும், கன்னடத்தில் "இரட்டை, ஒப்பு" என் னும் பொருள்களில் உபயோகப்படுகின்றன.

தெலுங்கில் தோடு என்றால் "உடற்பிறப்பு," தோடி கோடலு என்றால் "ஓாப்பிடி, ஓரத்தாள்"

இந்த இரண்டு பாஷைகளில் வரும் தோடு என்பதும், தமிழில் தோழன், தோழி, என்னும் மொழிகளும், மேற்கூறிய ஜோள (यमल) என்பதிலிருந்து மொழி முதல் ஜ-கரம் தந்தி யமாய் மாறுவதினால் உத்பத்தியானவை என்று ஊகிக்கப் படுகிறது. கீழ் § 25.

(vi) ஓடு என்பது மொழிமுதல ஜ-கரமெய் கெட்டு வந்தது; உடன்என்பது மொழி முதல் படுத்து உச்சரிப் பதினால் வநததுபோலும். தற்கால மராட்டீ பாஷையில் ஜவள என்பதற்கு "உடன், ஓடு, கூட," என்பது பொருள்.

(vii) தொழல, கைதொழல்:—ஸ்ரீவைஷ்ணவப்பிரபந்தங் களில் அடிக்கடி பிரயோகமாகும் இம்மொழிகளுக்கு "கை கூப்பல்", "இருகைகளையும் சேர்த்து தெய்வத்தை வணங் குதல்", என்பது பொருள்.

பிற்காலத்தில் தொழுதல் என்பது "கைகூப்பி வணங் கல்" என்ற பொருளிலே அல்லாமல் பொதுவாய் "வணங் குதல், ஸேவித்தல்" என்ற பொருளிலும் வருகிறது போலும்:—

"உள்ளம் குழைந்திட வெள்ளமெனக் கண்ணீர் கரை புரள-இருகை தொழுதார் அவர் மெய் தொழுதார்— கீழே புரண்டழுதார்" என்பது நந்தனார் சரித்திர கீர்த்தனை இல் நோண்டிச்சிந்து.

தெலுங்கு நிகண்டில் ஜோடாலு என்பதற்கு ஒரு வித மான வந்தனம் என்று பொருள் எழுதி இருக்கிறது. தெலுங்கு கிராம்யம் ஒன்றில் "வேண்டிக்கொண்டான்" "பிரார்த்தித்தான்" என்ற பொருளில் கைகளை ஜோடித்தான் அதாவது "கைகளை ஒன்று சேர்த்தான்" என்ற பிரயோகம் காணப்படுகிறது.[1]

ஆகவே தொழு என்பது ஜோடு ஜவள என்பவைகளி லிருந்து உத்பத்தியான தென்று ஊகிக்கலாகும்.

§ 21. புத்தேள், கடவுள், பொருள்.

(a) புத்தேள், புத்தேளிர். "தேவர்கள்":—இம்மொழிகள் தெலுங்கு, கன்னட, மலையாளபாஷைகளில் இல்லை. வடஆரியபாஷைகளில் சிலவற்றில் श्रमणेर, शामणेर (சமணேர) என்ற மொழி காணப்படுகிறது. இது एर(ஏர)அல்லது ईर (ஈர) என்னும் பிரத்தியயத்தை-शामण (சமண)'பௌத்தஸந்நியாஸி'- என்னும் மொழியுடன் சேர்ப்பதினால் உண்டாகிறது. இந்தப்பிரத்தியயங்கள் एल (ஏல), एड (ஏட) ईल (ஈல) என்னும் ரூபங்களுடனும் காணப்படுகின்றன. இவைகளைப்பற்றி H. G. G. §§ 209, 249 ல் விஸ்தரித்து சொல்லப் பட்டிருக்கிறது; இவைகளைச் சேர்ப்பதினால் பெரும்பாலும் மொழிகளின் பொருள் மாறுவதில்லை. ஆதியில் இவைகளுக்கு "ஒத்த, ஸதிருசமான' என்பது பெருளாம்.(உ-ம்) सपेल, मुरेल, etc. (ஸ்பேல, மூரேல etc.) = பாம்பு, மயில் etc.

இந்தப் பிரத்தியங்களை बुद्ध - என்பதினோடு சேர்ப்பதினால் உண்டாகும் बुद्देल, बुद्देड என்ற மொழிகள் பூர்வத்தில் வழக்கத்தி லிருந்திருக்கவேண்டு மென்றும், அவைகளிலிருந்து தமிழ் புத்தேள வந்திருக்கவேண்டு மென்றும், ஊகிக்கலாகும். முதலில் புத்தேள் என்னும் மொழிக்கு "புத்தன்" அல்லது "புத்தனுக்கு ஸமானமானவன்" எனபதுபொருள் போலும். புத்தேளிர் உலகு= "ஸம்போதி அடைந்தவர்கள் போகு முலகு" = "தேவலோகம்" என்றபடி போலும்.

1. சேதலு ஜோடிஸ்ய (L S of India Vol IV-p-610).

ஆகவே புத்தேள் என்பது புத்தசமய ஸம்பந்தமான மொழி இது பிற்காலத்தில் இந்த வாஸனையை முற்றிலும் இழந்து "தேவ தேவன்" என்ற பொருளில் இந்து சமய கிரந்தங்களில் கூட உபயோகப்படுகிறது.

"கன்னவிலும் தோளான் கவியஞெலிவல்லார்
பொன்னுலகில் வானவர்க்குப் புத்தேளிர் ஆகுவரே"

என்பது பெரியதிருமொழி. (vi—8—10). இதற்கு "புத்தேளிர்=தைவங்கள்" என்பது அடியுரை.

(b) கடவுள்:—இம்மொழி மலேயாளத்திலும் தெலுங்கிலுமில்லே. கன்னடத்தில் கடவள்-என ஒரு ரூபம் காணப்படுகிறது; பிரயோகம் விசேஷமாய் இல்லே போலும்(Kittels-Diction)

இதை - கட+உள் - எனப்பிரித்து "எல்லாவற்றையும் கடந்திருப்பது" எனப்பொருளுரைப்பர்; அதாவது "எல்லாவற்றிற்கும் எல்லேயாய் உள்ளது" (Winslow's Tam-Engl: Diction). ஆதலால் இதை काष्ठावर्तम (காஷ்டாவர்த்தம்) என்பதின் திரிபாகக் கொள்ளலாம்; काष्ठ (காஷ்டா) 'எல்லே,' என்பது கட என்றும்; वर्त (வர்த்த) என்பது வள் அல்லது உள் எனவும் திரியு மென்று முன்னேயே காட்டியிருக்கிறது (§§ 6, 11, 12)

कर्ता (கர்த்தா) 'படைத்தவர்' என்ற பொருளுள்ள कृतवान् (கிருதவான்) என்பதும்-கட வுள்-எனச் சிதைந்திருக்கலாம். कृत (கிருத) என்பது-கட எனவும் वान् (=वन्त्, வந்த்) என்னும் பிரத்தியயம் சிறு பான்மை-உல்ல-எனவும் மாறும் (Var: iv-25; xi-15)

(c) பொருள்:—இதற்கு சில அர்த்தங்களில்-பொருட்டு எனவும் ரூபம் உண்டு. (உ-ம்):—

(i) அவன் என்னே ஒரு பொருட்டாக மதிக்கிறதில்லே.

(ii) "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு."

"ஆவல் மிகுத்தொரு சீதை பொருட்டினில் வீரமும் வெற்றியும் முககோடி
ஆயுசும் மட்டிடொணுத அரக்கரும் ஆடலும் ஒக்கவிடுத்தேபின்
யாவரும் மிக்கதை ஆரமுதொப்பெனவே இனபுத்தர்கறறோத
இராம சரத்தினில் மாமலேயொத்த இராவணனிப்படி பட்டானே."

என்பது இராமநாடகம்.

இம்மொழிகள் தெலுங்கில் இல்லை; கன்னடத்தில்-புருள் -என்ற ஒரு ரூபம் இருக்கிறது. பொருள் என்பதற்குத் தமிழில் அநேகம்பொருள்கள் உண்டு. அவற்றுள் முக்கிய மானவை:—

(i) पदार्थः (பதார்த்த), 'மொழிகளின் அர்த்தம்'

(ii) पदार्थः (பதார்த்த), 'மொழிகளின் அர்த்தத்தால் குறிக்கப்படும் வஸ்துக்கள்':—மரம், வீடு, செடி, முதலியன.

(iii) पृक्थम्, पृक्थम् (ப்ருக்தம்), 'திரவியம், உடைமை.' புருஷார்த்தங்களில் இரண்டாவது:—

'கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.'

(iv) पुरुषार्थः (புருஷார்த்த):—அறம், பொருள், இன்பம், வீடு, என நான்கு கூறாகவும்; அறம், பொருள், இன்பம், என மூன்று கூறாகவும்; சில ஸமயங்களில் அகம், புறம், என இரண்டு கூறாகவும் பிரிக்கப்படும் 'புருஷார்த்தம்.'

'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனையிரண்டும் ஒருங்கு'

எனத் திருவள்ளுவநாயனார் அறம், பொருள், இன்பம், என்ற மூன்று புருஷார்த்தங்களைப் பொருள் எனவே குறிப்பிட்டார்.

(v) पुरुषः (புருஷ) எல்லாவற்றையும் கடந்து அவைகளுக்கு எல்லையாக நிற்பதென்று வேதங்களில்[1] சொல்லப்படும் பூரார்த்தம், 'உண்மைப் பொருள்.'

'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே'

எனத் திருவாதவூரடிகள் பரம புருஷனைப் பொருள் எனவே குறிப்பிட்டார்.

மேற்கூறியவற்றில் पुरुष (புருஷ) என்பது புருழ்,(=புருஷ்), புருள் எனத் திராவிடத்தில் மாறும்; पुरुषार्थ (புருஷார்த்த) என்பது அபப்ரம்ச பிராகிதருத்தில் புருட்டு (=புருஷ்டு)

1. सहस्रशीर्षा पुरुषः सहस्राक्षः सहस्रपात् ।
स भूमिं विश्वतो वृत्वा अत्यतिष्ठद्दशांगुलम् ॥

என மாறும்; पृक्थ (ப்ருக்த) என்பது 'ப்ருத்து' எனத் திரிந்து ர-கர ஒலியின் ஸாமீப்பியத்தால் - த்த் - என்னும் கூட்டெழுத்து-ட்ட்-ஆக மாறுவதினால் உண்டாகும் புருட்டு என்ற ரூபத்தை அடையும். முதல் உயிராகிய உ-கரம் ஒ-கரமாக மாறுவதற்கும், ட-கரம் ள-கரம் ஆக மாறுவதிற்கும் மேல் III § 4, II § 6. பாராக்களைப்பார்க்க.

இக்காலத்து ஸம்ஸ்கிருதத்தில் மேலே குறிப்பிட்ட ஆரியமொழிகள் எல்லாம் அவைகளுக்கு எதிரே காட்டிய பொருள்களில் பிரயோகப்பட்டு வருகின்றன. முற்காலத்திலும் அவைகள் இப்படியேபிரயோகப்பட்டிருந்தனவென்றும், அவைகளின் பிராகிருதச் சிதைவாகிய புருட்டு, புருஷ், என்பவை திராவிடவழக்கில் பிரவேசம் பெற்றன வென்றும், இவை தமிழில் பொருட்டு, பொருள் எனமாறின வென்றும் ஊகிக்கப்படுகிறது.

பிறகு காலக்கிரமத்தில் பொருள் என்பது பதார்த்தம் என்பதற்கு உரிய (i), (ii) பொருளிலும் வந்திருக்கலாம். அல்லது பதார்த்த என்பதே பதட்டு, பரள் என மாறி இருக்கலாம்[1]

§ 22. அநுஸ்வார ம-கரங்களின் மாறுபாடுகள் :—

விசும்பு, தாம்பு, தும்பு, சுண்ணும்பு, வீம்பு, தூம்பு, கொம்பு, துடிபு, பாம்பு, வேய், சீயம், தாள், கூஸ ஃமூசு, சுங்கம், மூங்கை, திங்கள், மூங்கில், செவ்வை, செவ்வி

A. பைசாசீ பாஷையில் ஸம்ஸ்கிருத உவம உருபாகிய इव (இவ) என்பதற்கு பதிலாக पिव (பிவ) உபயோகப்படுகிற தென்று வரருசியின்-பிராகிருத பிரகாசையில்-சொல்லப்பட்டிருக்கிறது. (Var:—X-4)

(உ-ம்) कमलम् इवमुखम् (கமலம்இவ முவம்) "கமலம் போன்ற முகம்" என்பதற்கு பதிலாக कमलम् पिवमुखम् (கமலம் பிவமுவம்) என்று பிரயோகம்.

இதற்கு காரணம் ம-கர ஈற்று மொழிகளை சில பாஷைகளில் — ம்ப் - அல்லது—ம்பு - ஈறு மாதிரி உச்சரிப்பது

---

1. பிராகிருதக்களில் மொழியிடை द (த) சிறுபான்மை ல-கர-ர-கரங்களாக மாறும் (Beames I p 243)

தான். தெலுங்கில் - வனம், தேசம், பிரகாசம் — முதலிய எல்லா ம-கர ஈற்று மொழிகளையும் — வனம்பு, தேசம்பு, பிரகாசம்பு &c — என ஒரு - பு - சேர்த்து உச்சரிக்கிற ஒரு வழக்கம் உண்டென்பது பிரவித்தம்.

பூர்வத்தில் இவ்வழக்கம் இருந்தகாரணம் பற்றியே போலும் தமிழிலும் ம-காரஈற்று மொழிகள் சில-ம்பு- ஈறாக மாறிவிட்டன. (உ-ம்)

(i) व्योम (வ்யோம) "ஆகாயம்" ; (ii) दाम (தாம) "கயி று" ; (iii) उपदाम (உபதாம) "சிறு கயிறு"; (iv) चूर्णम् (சூர் ணம்) "பொடி" ; (v) वीर्य (வீர்யம்,) वीर (வீரம்) "போட்டி சபதம்" ; என்பவை முறையே

(i) விசும்பு (ii) தாம்பு (iii) தும்பு (iv) சுண்ணும்பு (v) வீம்பு — என மாறின.

தெலுங்கில் -மு-வில் முடிகிற அநேக மொழிகள் தமி ழில்-ம்பு- ஈறாகக்காணப்படுகின்றன. (உ-ம)

(vi) தூமு "தூவாரம் ; ஒரு முகத்தல் அளவு"; (vii) கொம்மு "கிளை ; சிருங்கம்"; (viii) பாமு "பாம்பு"; (ix) தும்மு "தூளி, தூசி" என்பவை முறையே

(vi) தூம்பு (vii) கொம்பு; (viii) பாம்பு, (ix) தும்பு; எனத் தமிழில் வழங்குகின்றன.

B. தமிழில் வழங்கும் சில ஆரியச்சிதைவுகள் அநுஸ் வாரத்தை இழந்து விட்டன. (உ-ம்)

(1) अंघ्रिका (அங்க்ரிகா) (§ 8-iii), दंष्ट्रिका (தம்ஷ்ட்ரிகா) (§8-ii), विंशः (விம்ச) (§8-xxii), (4) संशयः (ஸம்சய) (§ 9-d)

இவை முறையே (i) அடி (ii) தாடி(iii) வீசம்(iv) ஐயம் என மாறிவிட்டன என்று முன்னுலேயே காட்டப்பட்டிருக் கிறது. இது மாதிரியே (v) वंशः (வம்ச) "மூங்கில்" ; (vi) सिंह (ஸிம்ஹ) "சிங்கம்"; (vii) दण्डः (தண்ட) "தடி, தாள்"; (viii) குஞ்சு; (ix) பிஞ்சு; என்பவை முறையே

(v) வேய் (vi) சீயம் (vii) தாள் (viii) கூழை (ix) பூசு என மாறின.

C. ஆரியத்தில் ம-கரமாவது அநுஸ்வாரமாவது இல் லாத சில மொழிகள் தமிழில் மெலெழுத்துடன் வழங்கு கின்றன. (உ-ம)

(i) फल्गुनी (பல்குனீ); (ii) शुल्कम् (சுல்க); (iii) ओबलिके (ஒபலிகெ) § (8-xxix); (iv) मूकः (மூக) "ஊமை"; (v) पक्षः (பக்ஷ) § 10); (vi) कक्ष. (கக்ஷ) (§ 10); (vii) व्याघ्र. (வ்யாக்ர) (§ 18); (viii) ऋक्षः (§ 10); (ix) पोखः (§ 23 A); (x) मेघः; (xi) जल्पु (§ 8 viii); என்பவை முறையே

(i) பங்குனி; (ii) சுங்கம்; (iii) உம்பளிக்கை; (iv) மூங்கை; (v) பங்கு; (vi) கங்கு; (vii) வேங்கை (viii) எண்கு (ix) பொங்கல் (x) மங்குல் (xi) இயம்பு என மாறின.

D. பெங்காளீ பாஷையில் அநுஸ்வாரத்தை-ங்ச்-மாதிரி உச்சரிக்கிற வழக்கம் உண்டு. इदं निवेदनं (இதம் நிவேதனம்) என்பதை-இதங்க் நிவேதனங்க்-என்பது போல் உச்சரிக்கிற ஒரு வழக்கம் இருக்கிறதாம் (Beames I-p-275.)

இவ்வழக்கம் தமிழில் கூட இரண்டொரு மொழிகளில் காணப்படுகிறது.

(i) सिंह (ஸிம்ஹ) என்பது ஸிங்க்ஹ, சிங்க என்று உச்சரிக்கப்படுகிறது.

(ii) "சூரியவம்சம்" என்பது சூரியவங்கிஷம் என்று சில இடங்களில் உச்ச்ரிக்கப்படுகிறது.

(iii) வம்ச த்தினுல் அதாவது மூங்கில் குழலினுல் செய்த வாத்தியத்திற்கு வங்கியம் என்று பெயர்.

(iv) இவ்வழக்கப்படி त्रिंश: (த்ரிம்ச) "மூப்பது" என்பது திங்கஷ் என உச்சரிக்கப்பட்டு - தமிழ் திங்கள் "மாதம், சந்திரன்" என்னும் மொழிக்கு மூலமாயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது.

(v) வங்கிஷ் (=வம்ச) என்பதில் வ-கரம் ம-கரம் ஆகமாறி தமிழ் மூங்கில் உத்பத்தியானதோ என ஸந்தேகிக்க இடமுண்டு.

E இரண்டொரு மொழிகளில் ஆரிய ம-கரம் தமிழில் வ-கரமாய்க்காணப்படுகிறது. (உ-ம)

सम्यक् (ஸம்யக்), பிரா. सम्म (ஸம்ம), என்பது செவ்வை எனவும்; ஸம் समय: (ஸமய), என்பது செவ்வி எனவும்; மாறியபோலும்.

§ **23.** **ஸ்வரபேதம் முதலியவற்றால் உண்டாகும் மாறு பாடுகள்:—**

எதிர், ஏதில், ஓவியம், சேய், கோடும், கோம்மை, பேய், ஏர், செம்பியன், போகீ, பொங்கல், கொடிய, சோழியன், சேலை, எறும்பு, இறும்பு, உறும்பு, ஈட்டி, சட்டன், மட்டு, மட்டம், சாற்று, சாறு, டசி, பட்டினி, பாடு.

மேல் 2, 4, 5 வது பாராக்களில் உலகவழக்கிலும் கிராம்யங்களிலும் ஒரே மொழி பல இடங்களில் பலவிதமாய் மாறுமென்றும், ஸ்வரபேதத்தினால் மொழிகளின் ஒலியிலும் அளவிலும் மாறு பாடுகள் உண்டாகும் என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்களை இப்பிரிவில் சொல்லியிருக்கிற ஆரியச்சிதைவுகளிலிருந்து உதாரணங்கள் எடுத்துக்காட்டி விவரிப்பது அவசியம்.

(A) *படுத்து உச்சரிப்பதினால் வரும்-இ-உ-க்களையும் எடுத்து உச்சரிப்பதினால் உண்டாகும் ஐ-கார ஔ- காரங்களையும் முதல் உயிர்களாக உடைய மொழிகள் ஆரியத்தில் அநேகம் உண்டு. இம்மொழிகள் சிதைந்து தமிழில் வரும்போது தமிழ்வழக்கில் முதல் உயிர் எடுத்தலும் படுத்தலும் இல்லாமல் ஸ்வபாவமாய் உச்சரிக்கப்படுவதினால் அம்முதல் உயிர்-எ-ஒ-ஆக மாறு மென்று மேல் 4\வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது.—(உ-ம்)*

(i)	எதிர், ஏதில்	ஸம்-இதர	"அந்ய"	ஐதரேயம்
(ii)	ஓவியம்	ஸம்-உபமா	"உவமை"	ஔபம்யம்
(iii)	சேய்	ஸம்-சிசு	"குழந்தை"	சைசவம்
(iv)	கொடும்	ஸம்.குடில	"வளைந்த"	கௌடில்யம்
(v)	கோம்மை	ஸம்-குமார	"வாலிபன்"	கௌமாரம்
(vi)	பேய்	ஸம்-பிசாச	"கழுது"	பைசாசிக
(vii)	செம்பியன் சைப்ய	ஸம்-சிபி	"ஒருஅரசன் பெயர்"	
(viii)	போகீ ஒருபண்டிகை	ஸம்-புஷ்ய	"ஒருநாட் பெயர்"	பௌஷீ பவுர்ணமியின் பெயர்
	போஷ, "பொங்கல் ஒரு பண்டிகை"	ஷை	ஷை "மாதத்தின் பெயர்"	பௌஷ
(xi)	கொடிய	ஸம்-க்ரூர	"கொடிய"	க்ரௌர்யம்
(x)	ஏர்	ஸம்-ஸீர	"ஏர்"	ஸைரிக

(xi) *சோழியன்* ஸம்-சூடா "*தலைமுடி*" *சவுடம்*
(xii) சேலை ஸம்-சீர "*துணி*" சைலம்

(B) சில விணைப்பகுதிகள் நீங்கலாக தமிழ்மொழிகள் எல்லாவற்றிலும் ஸ்வரம் இயல்பாக ஆரம்பித்து வரவரத்தணிந்து கொண்டேவருகிற தென்றும், ஆதலால் மொழிகளின் முதல் உயிர்கள் மற்றை உயிர்களைக் காட்டிலும் எடுத்து உச்சரிக்கப்படுகின்றன என்றும் 4-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. இது காரணம் பற்றி அநேக மொழிகளின் பிற்பாதி சுருங்கியும், சில இடங்களில் அழிந்தும் போயிற்று. சில மொழிகளில் முதல் உயிரும் கடை உயிரும் தவிர மற்றை உயிர்கள்போய்விட்டன. இவ்விதமான மாறுபாடுகளுக்கு, இப்பிரிவில் காட்டியிருக்கும் ஆரியச்சிதைவுகளிலிருந்து ஏராளமான திருஷ்டாந்தங்கள் கொடுக்கலாகும்.

(i) *கார்ஷாபணம்* (§ 8-i), *ஸமுத்ரம்* (§8-iv) *மார்க்கசீர்ஷீ*(§ 9-b), *அவசிஷ்* (§ 14-iv), *பரிசீல்* (§ 9-c) *அபாவர்த்* (§ 14-iii), *உபாத்தியாய* (§ 14-vii), *புருஷார்த்த* (§ 21-c), *வ்யாபார* (§ 18-a), *சீவர* (§ 26-iv) *வ்ரீஹி* (26-iii) இவை

காணம்; முத ; மார்கழி ; ஓழி ; பயில் ; ஊடு ; வாத்தி, ஓச்சன் ; பொருள் ; பேர, வேலை ; நெல் ; வரி, வை ; *எனக் குறுகிக்கிடக்கின்றன.*

(ii) *தீ, அடி, தாள், பேய், சேய், வாய், பாய், மாய், பால், செவிலி, இகுளை, ஆய், ஐயவி, தாழி, வாள், உளி*— *முதலியவை மூலமொழிகளின் ஸ்வரூபம் இன்ன தென்று எளிதில் தெரியக்கூடாத விதமாய் மாறிக்கிடக்கின்றன.*

(iii) *எறும்பின் பெயர்—தமிழில்* எறும்பு, உழுவ, *என வும் ; மலையாளத்தில்* எறும்பு, இறும்பு, உறும்பு, *எனவும் ; கன்னடத்தில்* - இறுவே, இற்வே, இருவே, இறும்பே, இறும்பு, இறுவு, இறுஹெ, இர்வு, இர்வெ, *எனவும் ; ஒவ்வொரு பாஷையிலும் பல இடங்களில் பல விதமாய் மாறிக் கிடக்கிறது.*

(iv) ऋक्षः, ऋष्टिः, ऋषभः, ऋषिः, ऋतुः இவை எண்கு, எட்டி, இடபம், இருடி, இருது, *என மாறின. ஆகவே* ऋ *என்ற ஆரிய உயிர்* எ, ஈ, இ இரு, *எனப்பலமொழிகளில் பல விதமாய் மாறி இருக்கிறது.*

(v) छात्रः (*ச்சாத்ர*) "*மாணாக்கன்*":—சட்டன்

मात्र (*மாத்ர*) "*அளவு, கொஞ்சம்*":—மாத்ரம், மட்டம், மட்டு,

पुत्र: (புத்ர) "குமாரன்":—பிள்ளை
शास्त्रम् (சாஸ்த்ரம்) "விதி, ஆணை":—சாற்று.

"வாய்ப்பறையாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக்கேண்மின்"

यात्रा / जात्रा } (ஜாத்ரா) "உத்ஸவம் திரு விழா"- தகரே் யாத்திரை — சாறு, சாற்றுப்படி

இவ்வுதாரணங்களில் त्र (த்ர) என்னும் கூட்டெழுத்து மாறுதல் இல்லாமலும், ட்ட, ள்ள, ற்ற, எனமாறியும் தமிழ் மொழிகளில் காணப்படுகிறது. மேல் 11, 12, 13, பாராக்களில் காட்டிய र्त, र्ध, (ர்த, ர்ய) என்னும் கூட்டெழுத்துக்களின் மாறுபாடுகள் இங்கு நினைக்கற் பாலன.

(vi) இவைகளை எல்லாம் ஒருங்கு சேர்த்துப் பார்த்தால் படிப்பில்லாத அநேக லட்சம் ஜனங்கள் பேசும் பாஷை ஒரு விதியிலும் அடங்காமல் பலஇடங்களில் பலவிதமாய் மாறும் என்பது விசதமாகும். இப்படி பூர்வரூபம் அறியமுடியாத படி கிராம்யவழக்கில் சிதைந்துபோன எண்ணிறந்த ஆரிய மொழிகள் செந்தமிழில் அடங்கி இருக்கின்றன.

(C) படித்து உச்சரிப்பதினால் ய-கர வ-காரங்கள் ஸம்பிரஸாரணத்தை அடையுமென்று 5-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் உயிர் எடுத்து உச்சரிக்கப்படுவதினால் தமிழில் மொழி முதல் ய-கரவ-காரங்கள் ஸம்பிரஸாரணத்தை அடையா; எ, ஏ, ஒ, ஓ, ஆகவே மாறும். ய-கரயா-காரங்கள் மொழி முதலில் எ, ஏ, ஆகமாறியதற்கும், மொழி இறுதியில் இ-கரமாக மாறியதற்கும் சில உதாரணங்கள் 18-வது பாராவில் காட்டப்பட்டிருக்கின்றன.

ஊழ், ஊழி, ஊடல், முதலிய மொழிகளில் மொழி முதலில் காணப்படும் வ-கரத்தின் ஸம்பிரஸாரணம் இம்மொழிகள் தமிழ் வழக்கில் பிரவேசம் பெறுவதற்கு முன்னாலேயே உண்டாயிறறு என்று ஊகிக்கவேண்டியது.

(i) क्वम् (க்வம்) "கொதி":—கோதி
(ii) श्वानकः (ச்வானக) "நாய்".— சோணங்கி
(iii) द्वारः (த்வார) "தொளை":—தொளை
(iv) ध्वनिः (த்வனி) "ஓசை":—தொனி
(v) ज्वरः (ஜ்வர) "காய்ச்சல்":—ஜோரம்

என மொழிமுதல் கூட்டெழுத்திலுள்ள வ - கர வா - காரங்கள் ஸம்பிரஸாரணம அடையாமல் ஒ - கர ஓ - காரங்களாக மாறின. இது மாதிரியே, ஜ்வலி, ஸ்வஸ்யம், ஸ்வரஸம், என்பன முறையே

(vi) ஜோலி (vii) ஸோஸ்யம் (viii) ஸோரஸம் என மாறின.

த்வா, ய, யா, என்று மொழி யீற்றில் வரும் ஆரியஇறந்த கால வினையெச்சவிகுதிகள், தமிழிலும, தமிழ் போன்ற பிராகிருதங்களிலும் ஸம்பிரஸாரணத்தினல் து, இ, என மாறும். இது VII-வது பிரிவில் விசதமாய்க் காட்டப்படும்.

(D) மொழிமுதலில் குற்றுயிர் உள்ள சில ஆரிய மொழிகள் அவ்வுயிர் இல்லாமல் தமிழில் காணப்படுகின்றன:—

(i) अपिधी उपधी-(அபீதீ, உபதீ) 'மறைக்கப்படு" :—, புதை, பொதி (§ 14—X)

(ii) अंगार: (அங்கார) "தணல்":—கார், நெருப்பு, (§ 8—xxiv)

(iii) अरघट्ट: (அரகட்ட) "கிணற்றுருளை" :—ராட்டணம். (Beames) I—p-179)

(iv) उपाध्याय: (உபாத்தியாய) "குரு"—வாத்தி (§ 14-vii)

இவை தமிழில் பிரவேசம் பெறுவதற்கு முன்னுலேயே முதல் உயிரை இழந்திருக்கவேண்டும். இது மாதிரி

(v) अक्षण् (அக்ஷண்) "கண்"—என்னும் வைதிக மொழி இரண்டாவது உயிர் எடுத்து உச்சரிக்கப்படுவதால் முதல் உயிரை இழந்து கண் எனத் தமிழில் வந்ததென மேல் § 10-ல் ஊகிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே.

(vi) उपवस् (உபவஸ்) "பட்டினி இரு"

(vii) उपवसथ: (உபவஸத) "பட்டினியிருத்தல், பட்டினி இருக்கும் தினம்"

(viii) उपवस्तं (உபவஸ்தம்) "பட்டினி"

இவை பிராகிருதங்களில் உபாஸ், உபொஸதோ [1] பொஸஹ, [2] முதலிய ரூபங்களை அடையும். இவைகளின்

1. Pali Dictionary
2. P. G. G. § 141

ருந்து தான் முதல் உயிர் கெட்டு பசி, பாடு என்ற தமிழ் மொழிகள் வந்தன என்று ஊகிக்கப்படுகிறது.

தெலுங்கில் பஸி "பசி", பஸ்து "உபவாஸம்", பஸ் தில்லி "உபவாஸம்" என்ற மூன்று ரூபங்கள் காணப்படு கின்றன. பஸ்தில்லி என்பது = பஸ்து + இல்லி, போலும் ; இல்லி என்பதற்கும் தெலுங்கில் "உபவாஸம்" என்பது பொருள்.

ஸ்ய-என்னும் கூட்டெழுத்து - ஸ்த - என்று மாறு வதல்லாமல் பிராகிருதத்தில் - ட்ட [1]- என்று கூடமாறு மாகையால் தெலுங்கில் பஸ்து என்று மாறினது தமிழில் * பட்டு, பாடு என்று கூடமாறி இருக்கலாம். சிலப்பதி காரத்தில்.

"பாசண்டச்சாத்தற்குப பாடுகிடந்தாளுக்கு" (IX—15)

என்பதில் "பாடு கிடந்தாளுக்கு" என்பதற்கு "வரம் கிடந்த வளுக்கு" என அடியார்க்கு நல்லார் உரை எழுதி இருக் கின்றனர் "வரம் கிடத்தலில்" உபவாஸம் - முக்கிய மாத லால் "பாடுகிடத்தல்" என்பது "பட்டினி கிடத்தலே" போலும்.

இது தவிர மலையாளபாஷையில் "பாடிரிக்க" [2] என் பது கடன் கொடுக்க வேண்டியவன் வீட்டுவாசலில் பட்டினி கிடந்து கடனைத்தண்டல்

ஆகவே பாடு என்பதற்கு தமிழ் - மலையாளத்தில் "பட் டினி இருத்தல்" என்ற பொருளும் முற்காலத்தில் உண்டு. இம்மொழி பட்டு என்பதின் உயிர் நீண்டு ஒரு மெய் கெட்ட ரூபம் (§ 6)

தெலுங்கு மொழிகள் பஸி பஸ்து, பஸ்தில்லி என் பவைகளுக்கு நேராக தமிழில் பசி பாடு, பட்டினி என்ற மொழிகள் காணப்படுகின்றன மலையாளத்தில் பஷ்ணி என்ற ரூபம் கூடக்காணப்படுகிறது. பூர்வத்தில் உபவஸதி நீ "உபாஸதி"—என்ற மொழி கூட ஆரியத்தில் இருந் திருக்கலாம்.

---

1. ப்ரஸ்யாநம் = பட்டணம்
2. Gundert's Dictionary.

§ **24.** ஓஷ்டிய-ம-கரங்களின் உறழ்ச்சி.

சில மொழிகளில் வ-கர ப - கரங்கள் ம - கரத் தோடு உறழ்கின்றன. இவ்வுறழ்ச்சி சிற்சில மொழிகளில் தமிழிலேயே காணப்படுகிறது. வேறு சிலமொழிகளில் தமிழில் ஒரு ரூபமும் இதர பாஷைகளில் வேறு ரூபமும் காணப்படு கின்றன. (உ ம்)

(i) *தமிழ்.* வானம், மானம் "*ஆகாயம், மழை*"; தெலு ங்கு வான; *கன்னடம்.* பான்.

(ii) *தமிழ்.* விண், "*ஆகாயம்*"; தெலுங்கு, மின்னு.

(iii) *தமிழ்* வாட்டி, "*தடவை*"; தெலுங்கு, மாட்டி மாறு. (§ § 12, 13)

(iv) *தமிழ்* முழி, மிழி, விழி, "*கண்*" (§ 15)

(v) *தமிழ்* வெருள், மெருள், "*பயமடைகிறது*"

(vi) *தமிழ்* விழுங்கு, மிழுங்கு

(vii) *தமிழ்* வஸூரி, "*அம்மை*"; *ஸம்ஸ்கிருதம்* मसूरिका (*மஸூரிகா*)

(viii) *பிராகிருதம்,* வதல, பதல (§15) *தமிழ்,* மகிழ்.

(ix) *தமிழ்* வண்ணான்; *மலையாளம்* வண்ணான், மண்ணான்.

மேல் உதாரணங்களில் எல்லாம் ஒரே மூலமுள்ள மொழிகளில் உச்சாரணபேதத்தினால் உறழ்ச்சி ஏற்பட்டிருக் கிறது என்பதுக்கு ஐயம் இல்லை. இதே மாதிரி,

(x) *ஸம்.* वृषः (*வாஷ*) "*மழை*"; *தமிழ்,* மழை (§ 15)

(xi) *ஹிந்தீ,* போலீ "*வார்த்தை, பாஷை*"; *தமிழ்.* மொழி (§ 15)

(xii) *ஸம்:* वार्ता (*வார்த்தா*) "*வார்த்தை, மொழி*"; *தமிழ்* மாற்றம்; *கன்னடம்,* மாது; தெலுங்கு, மாட (§ 13)

(xiii) *ஸம்:* वर्तकः (*வர்த்த*) "*பண்டம் மாற்று*"; *தமிழ்* மாற்று, மாறு (§ 13). *கன்னடம்* பாழு (Kittel's Kanarese English Dictionary.)

(xiv) *ஸம்.* पूर्तिः, *पूर्त (*பூர்த்தி, பூர்த்த*) "*ஸம்பூரணம்*"; *மிழ்* முற்று (§13)

என்ற ஐந்திலும் உச்சாரண பேதத்தினால் உறழ்ச்சி உண்டானதென்று மேலே சொல்லியிருக்கிறது. தமிழில் மழை, மொழி என்பவற்றிற்கு ஸம்பந்தப்பட்ட மொழிகள் வேறு இல்லாததினால் அவை இதர பாஷைகளிலிருந்து வந்தனவென்று நிச்சயமாய்ச் சொல்ல இடம் உண்டு.

(xv) ஸம்: वृन्दम् (வ்ருந்த) "கூட்டம், தொகுதி"; பிரா- व्रन्द (வ்ரந்த), वन्द (வந்த) (Var: iv-27); தமிழ், மந்தை

(xvi) ஸம்: भगिनी (பகினீ) "உடன்பிறந்தாள்"; பஹிநீ, बहिनी (பஹிநீ); பெங்காலீ, बहिन् (பஹின்) (§. 8—xi); தமிழ், மன்னி "மூத்தோன் மனைவி."

இந்த—பஹின்—என்பது மைன், மேன் எனத்தெலுங்கில் மாறி மேனரிகமு, மேனமாம, மேனத்த, மேனல்லுடு, மேனகோடலு என்ற முறைப்பெயர்கள் உற்பத்தியாயின போலும்.

(xvii) ஸம். वंश: (வம்ச, வங்கிஷ) "மூங்கில்"; தமிழ் மூங்கில் (§ 22-D).

§ 25 தாலவ்ய தந்தியங்களின் உறழ்ச்சி

(A) ஸம்ஸ்கிருதத்தில் ஹ-கர ஜ-காரங்களுள்ள சில இந்து-ஐரேநிய (Indo-Iranian) மொழிகளில் ஐரேநிய (Iranian) பாஷையில் ஜ-காரமும், பிற்காலத்து பொஷியன் (Persian) பாஷையில் த-காரமும், காணப்படுகின்றன. (உ-ம்)

ஸம்ஸ்கிருதம்	பொருள்	ஐரேநியன்	பெர்ஷியன்	Brugmann
अहम् (அஹம்)	"நான்"	அஜெம்	அசம்	III § 439
हस्त: (ஹஸ்த)	"கை"	ஜஸ்த	தஸ்த	III § 262
गूहति (கூஹதி)	"ஒளிக்கிறது"	கஓஜய்தி	கௌசய (ஏவல்வினை)	I § 405
ज्रय: (ஜ்ரய)	"பரப்பு" "கடல், ஏரி"	ஜ்ரயஸ்	த்ரய	I § 40
व्रीहि: (வ்ரீஹி)	"நெல்"	1 வ்ரிஜ்ஜெய் வ்ரிஜெய் 2 ஒரிஜ	பிரிஞ்ச் *பிரிந்த 2 ஒரீந்த	கீழ் § 27 ஐப் பார்க்க

1. இது புஷ்டோ பாஷையில் உள்ள ரூபம்
2. இது கிர்த பாஷையில் உள்ள ரூபம்

(B) ஸம்ஸ்கிருதத்திலேயே दम्पती (தம்பதி) "மனைவனும் மனைவியும்":—என்னும் மொழியை जम्पती (ஜம்பதீ) இன் திரிபு என்பர

ஸம். जामाता (ஜாமாதா) "மாப்பிள்ளை" :—என்னும் மொழி दामाता (தாமாதா) என சில வட இந்திய பாஷைகளில் மாறி இருக்கிறது.

ஸம்ஸ்கிருத ஜ-கரம் த-கரமாக மாறுவது அர்த்தமாகதி, ஸிங்கலீஸ், பாஷைகளில் ஸாதாரணமாக இருக்கிறது. (உ-ம்)

(1) जुगुप्सा (ஜுகுப்ஸா), (2) ज्योत्स्ना (ஜ்யோத்ஸ்நா), (3) राजन् (ராஜந்), (4) तेजस (தேஜஸ்), (5) मज्जा (மஜ்ஜா), முதலியன முறையே.

(1) துகுச்சா (2) ஜோஷிகா (3) ரத (4) தேத (5) மத; என மாறிக் கிடக்கின்றன. இதற்கு ஏராளமான உதாரணங்கள் I-A Vol. XI-pp. 216-7 இல் காணலாகும்.

இம்மாறுபாட்டுக்குக் காரணம் தாலவ்யங்களை தந்த்யமாய் உச்சரிப்பதுதான். தெலுங்கில் இப்பொழுதுகூட—அ-ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ—என்ற ஏழு உயிர்களோடுகூடிய ச-கர, ஜ-காரங்களை தந்தியமாய் உச்சரிக்கிறார்கள்.

(C) திராவிட பாஷைகளில் மொழி முதலில் உள்ள சகர ஜ-கர மெய்கள் த-கர, த-காரங்களோடு உறழ்ந்தும், கெட்டும், காணபபடுகின்றன.

(i) கன்னடம், ஜேன், தேன்: தமிழ், தேன், இனிப்பு.

(ii) ஸம்ஸ்கிருதம், ஜல "பசுகர்ப்பம்"; கன்னடம், ஜனே, தனே, தேனே; ஸேனே "முட்டை உள்ளிருக்கும் மாம்ஸம"; தமிழ், சினை "சூல்"; (Kittels Kan-English Dictionary)

(iii) ஹிந்தீ, चेन, चीन (சேன, சீன); தமிழ், தினை, ஏனல் (Watts Commercial products-p. 988)

(iv) கன்னடம். ஜவன, தவன, "மருக் கொழுந்து" தமிழ், தமனகம்.

(v) கன்னடம், யவஸ, தவஸ, தவஸ, "தானியம்" தமிழ், தவசம், "தானியம்".

(Note-ய-கரம் ஜ-காரமாக மாறியே பிற்பாடு ஃ-கர த-கரமாக மாறி இருக்கவேண்டும்)

(vi) கன்னடம், ஜினிஸு, ஜீநிஸு; (இதை அரபி தேசத்துமொழி என்பா.)

மேற் கூறியவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு.

(vii) ஸம். जायते (ஜாயதே) "பிறக்கிறது" என்ற வினையின் பகுதி; தமிழ் யாய், ஆய், ஞாய், தாய் (§ 8—viii)

(viii) ஸம் जनि: (ஜனி) "ஸ்திரீ"; जननी (ஜநநீ) "தாய், பெற்றவள்". தமிழ் என்னை, அன்னை, தன்னை (§ 8—xxxv)

(ix) ஸம்: जनुस (ஜநுஸ்) "ஜாதி, வகை"; जन: (ஜந) "ஜநம்". Latin—Genus (ஜெநுஸ்); English—gender (ஜென்டர்); தமிழ். திணை, இனம் (§ 19—$)

(x) ஸம்: यमलौ (யமலௌ) "இரட்டை"; பிராகிருதம் ஜவள, ஜோள; தமிழ் தோழன், ஓடு, உடன், தோழு (§ 20)

இந்த நாலு ஆரியமொழிகளிலிருந்து அவைகளுக்கு எதிரே காட்டிய தமிழ் மொழிகள் ஜ-கரமெய் கெடுவதாலும், தந்தியமாய் மாறுவதாலும், உத்பத்தி ஆயிருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டிருக்கிறது. இவ்வூகைக்கு வேண்டிய இதா ஆதாரங்களும் அவ்வவ்விடங்களிலே காட்டபட்டிருக்கின்றன.

இந்த ஊகைக்கு ஒரு ஆட்சேபனை உண்டு. பெர்ஷிய கிரீக்கனீஸ், பாஷைகளில் ஜ-கரம் ஃ கரமாக மாறியிருக்கிறது. தமிழில் ஃ-கரம இல்லாததினால் ஜ-கரம் த-கரமாக மாறுவதுஸஹஜம்; கன்னட, தெலுங்கு பாஷைகளின் கெடுங்கணக்கில் ஸ்வர உச்சாரணமுள்ள ஃ-கரம் இருக்கிறபடியால் இப்பாஷைகளில் ஜ-கரம் ஃ-கரமாய் மாறவேண்டுமே ஒழிய த கரமாய் மாறக்காரணமில்லை என்று சொல்லலாம்.

மேல் 10-வது பக்கத்தின் அடிக்குறிப்பில் கன்னட, தெலுங்கு, பாஷைகள் தமிழ்போல் ஒரு காலத்தில் ஸ்வர ஒலிகள் இல்லாதிருந்தனவென்று ஊகிக்க சிலகாரணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த பாராவிலும், மேல் § 24 பாராவிலும் சொல்லிய உறழ்ச்சிகள் இன்னும் தீர ஆராயவேண்டிய விஷயங்கள்.

§ 26. தமிழர்களின் ஆதிகால சீர்திருத்தம்

व्रीहि: (வ்ரீஹி):—வரி, வீ, வை, வயல் ; வல்சி, அரிசி, அரி, அக்கி, இக்கி

नीवार: (நீவார):—நவர, நவிர, * நெறு, நேல்லு, நேல்

(1) ஆரியர்கள் தென்னிந்தியாவுக்கு வருவதற்கு முன்னலேயே தமிழர்கள் சீர்திருத்தமடைந்து கைத்தொழில் வியவஸாயங்களில் பயின்று மேலைத்தேயத்தவரோடு வியாபாரம் செய்து வந்தனர் என்றும், இதற்கு க்ரீக்கு (Greek) முதலிய ஐரோப்பிய (European) பாஷைகளில் ஆதிகாலம் தொட்டு பிரவேசம் பெற்றிருக்கும் தமிழ்மொழிகளே சான்று எனவும், கால்ட்வெல் (Bishop Caldwell) வாதித்தார் [1] இதை அநுவதிப்பவர்களில் சிலர் கால்ட்வெல (Bishop Caldwell) சான்ருக எடுத்துக்காட்டிய மொழிகளுடன் வேறு சில மொழிகளையும் உதஹரித்து திராவிடர்கள் மேலான நாகரிகத்தையும் கல்விப்பயிற்சியையும் அடைந்தவர்களென்று வாதிப்பது உண்டு. இது விஷயம் இங்கே விசாரிக்கவேண்டியது அவசியமானபடியால் இவ்விஷயமாய் உதஹரிக்கப்பட்ட மொழிகளின் உத்பத்தியைப்பற்றி கொஞ்சம் ஆராய்ச்சி செய்வோம்

அரிசி:—க்ரீக்கு (Greek) பாஷையில் நெற்பயிருக்கு ஓரீஜ என்ற ஒரு பெயர் இருக்கிறது. தமிழ் அரிசி தான் ஓரீ ஜ (Oryza) எனமாறிக் காணப்படுகிறது என்று கால்ட்வெல் (Bishop Caldwell) சாதித்தார். இந்த சாதனம் ஒப்புக்கொள்ளத் தகுந்ததல்லவென்று கர்ஷியஸ் (Curtius), பாட் (Pott), பென்பீ (Benley) முதலிய பாஷாசாஸ்திரிகளும் (Philologist), ஸ்கீட் (Skeat) என்ற நிகண்டு காரரும் (Lexicographer), லயல் (Sir. C. I. Lyall) முதலிய வித்வான்களும் முறையிட்டிருந்தபோதிலும், [2] அவர்களுடைய அபிப்பிராயத்தை அறியாமலோ அறிந்தும் கவனியாமலோ கால்ட்வெல் (Bishop Caldwell) சொன்னதையே அநேகர் இப்பொழுது அநுவதிப்பதுமல்லாமல், ஆரிய व्रीहि: (வ்ரீஹி) என்பதே தமிழ் மொழியான அரிசியிலிருந்து உத்பத்தியானது என்று இரண்டு ஒருவர் [3] ஸாஹஸம் செய்வதும் உண்டு.

---

1. Caldwell's Dravidian Grammar Introduction p. p. 61-ff
2. The Age of the Mantras; p. 8.

இதுவிஷயமாய் எழுதப்பட்ட எல்லாவற்றையும் இவ்விடத்தில் அநுவதிக்க ஸாத்தியம் இல்லை. காரணம் காட்டி வாதித்த வித்வான்களுடைய அபிப்பிராயத்தை அறியவிரும்புபவர்கள் கீழ்குறிப்பிட்ட கிரந்தங்களிலிருந்து அதைத் தெரிந்து கொள்ளலாம். அவர்களுடைய அபிப்பிராயத்தையும் வேறுசில காரணங்களையும் இங்கே சுருக்கமாய் எழுதுகிறேன்.

(II) கி-பி- முதல்நூற்றுண்டில் எகிப்து (Egypt) தேசத்தில் வசித்திருந்த ஒரு க்ரீக் (Greek) வியாபாரியால் க்ரீக் (Greek) பாஷையில் எழுதப்பட்ட பெரிப்லுஸ் (Periplus of the Erythraean Sea) என்ற ஒரு கிரந்தம் இருக்கிறது. இந்த கிரந்தத்தில் எகிப்து (Egypt) க்கும் கிழக்கு இந்திய (The East Indies) தேசங்களுக்கும் உள்ள வியாபாரப் போக்குவரத்தை விஸ்தாரமாய் எழுதுவதுடன், ஒவ்வொரு துறைமுகத்திலும் ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகள் இன்னின்னவை என்றும், அவை இன்னின்ன தேசங்களுக்குப் போகின்றன என்றும், இன்னின்ன தேசங்களிலிருந்து வருகின்றன என்றும், விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கிரந்தம் எழுதினவர் தானே நேராகப்போய் ஒவ்வொரு துறைமுகத்திலும் கண்டதை எழுதினதாகத் தெரிகிறபடியால் ஆதிகால விஷயமாய்ச் சர்ச்சை செய்பவர்கள் அனைவரும் இதை ஒரு பிரமாண கிரந்தமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் (Indian Antiquary Vol. VIII, pp. 107—151.)

(a) இந்த கிரந்தத்தில் நர்மதாநதியின் முகத்வாரத்திலுள்ள பருகச்ச (Broach, Barugaza) என்னும் துறையிலிருந்து ஆரிய நாடுகளில் விளைந்த அரிசி ஏற்றுமதி யானதாகத் தெரிகிறதே ஒழிய தென்னிந்திய துறைமுகங்கள் ஒன்றிலிருந்தாவது அரிசி மேற்கு தேசங்களுக்கு ஏற்றுமதியானதாகச் சொல்லப்படவில்லை.[2]

---

1. (a) Watt's Dictionary of the Economic Products of India, *Oryza Sativa*

   (b) Watt's Commercial Products of India (1908) p. 825.

   (c) Curtuis's Greek Etymology 5th Edn., (1879) p. 579.

   (d) Skeat's Etymological English Dictionary. *Rice*.

2. I. A. Vol. VIII, p. 115.

மணிமேகலை துறவு

முதல் அங்கம்.

முதற் காட்சி

இடம்:—பூம்புகாரில் சித்திராபதி வீட்டுமாடம்.

காலம்:—நள்ளிரவு.

அரங்கநிலை:—குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது; ஊஞ்சலின்மேல் **மாதவி** தன் நினைவில் ஆழ்ந்து சாய்ந்து கொண்டிருக்கிறாள்.

மாதவி:—(பெருமூச் செறிந்து—தனிமொழி)

'இன்று, நாளை,' என்று ஏங்கும் என் இதயம்;
சென்றன பலமதி, திரும்பில இம்மையில்;
பொன்று ஆவி புழுங்கி நையுறும்.
அந்தோ, அறிவிலி, அறிவிலி! அன்னை தான்
சந்ததம் 'பணம், பணம்' என்றே சளப்ப,
வேசைக் குறும்பு தூண்டிட, மேதை நான்,
ஆசைக் கனலை வளர்த்திட அவாவிப்
புலவிமென் சிவிறியால் பொறிசெயப் புகுந்தவள்,
அலமருகின்றேன் அனைத்தையும் அவித்தே!
என்று வருவரோ, ஏதும் அறிகிலேன்;
அன்றி, மீள்கிலரோ, அதுவும் அறிகிலேன்.
என்று அவர்முகம் இனி இம்மையில் காண்பேனோ!

[குழல் யாழ் மத்தளம குடமுழா முதலிய வாத்தியங்களைச் சில பணியாளர் கொணர்ந்துவைத்துச் செல்கின்றனர்; அவருள் கண்ணன் மட்டும் மாதவியை நோக்கி நிற்கிறான்.]

முடிந்ததோ கூத்து?

கண்ணன்:— முடிந்தது தாயே.

[சித்திராபதியும் வசந்தமாலையும் வந்து சுவர் ஓரமாய்ப் பாயின்மேல் உட்காருகின்றனர்].

சித்திராபதி:—செய்தி அறிதியோ மாதவி! சின்னவள்
எய்திய இசை ஒலி எட்டியதோ செவி!
கெடுக உன் நோன்புதான்! கேள்வனே கோவலன்?
கடிமணப் பந்தரில் தாலி கட்டினனே!
குலமகளோ நீ? சொல்வோர் சொளவரம்
விலைமகள் பெற்றவள் வேசையோ வேறோ?

மாதவி:—அவள் எங்கே?

வசந்தமாலை:— 'உடை அணிகளை மாற்றி
இவண் வருவேன்' என, ஏகினள் மேல் நிலை.
எய்த்தனள், பாவம்! இளையளே இன்னும்.

சித்தி:—நர்த்தனம் கண்டோர், இன்று அவள் நிகழ்த்திய
அவிநய அருங்கலை அமர்ந்து அநுபவித்தோர்,
எவரே அவளை இளையோள் என்பர்?
யானும் கண்டுளேன் எண்ணில் கூத்துகள்;
வானும் மண்ணும் மகிழ்ந்த இம் மாதவி
தலை அரங் கேற்றம் தானுமே, சின்னவள்
குலவிய கூத்தில் குறைப்பட்டது காண்!
குழல் யாழ் மத்தளம குடமுழா இசைந்து
தழுவுற, இடக்கையின் அமைத்த சமர்த்தோ;
தமிழ் இருவாரமும், தங்கிய பாடலும்,
அமிழ்தினும் இனிக்கப் பாடிய அழகோ;
மாண்கருத்து அமைந்த அவிநய வளமோ;
காண்குநர் கண்களைக் கவர்ந்திடு கவினே;
மகிழா, வியவா மயலுறு மன்றம்
நெகிழா நெஞ்சின் நிலைபெயர்ந்து அயர,
விருது கொள் சின்னவள் அரங்கு ஏறிய வினை,
அரிது, அரிது, அம்ம! எவர்க்கும் அரிதே!
அரசனும் அவையும் மெச்சினர் அடிக்கடி;
பரிசு எனப், பொன் அலரது, ஆரமும் பதக்கமும்
எடுத்து, இவை [பரிசுகளை மாதவி கையில் கொடுக்கிறாள்]
ஈந்தனன் இறைவன்; நீதான்
கொடுத்து வைத்திலை; அது குளிர்ந்து கண் காண.

மற்றும் ஓர் இந்திர விழாவும் வந்தது,
சற்றும் உன் துயரமோ தணிந்தபாடில்லை.

மாதவி:—அவர் இலரே இது கண்டு அகமகிழ!
அவளே உயிர் நிலை அவருக்கு.

வசந்த:— அவட்கும்
அவர் தான் உயிர் நிலை ; அடிக்கடி நினைத்தாள்.

சித்தி:—ஆயின் ஏன் நீங்கினன்? 'அவர், அவர்' என்றே
ஓயாது இப்படி உளறுதல் ஒழிமின்.
என்னே இம்மதி!

வசந்த:— ஏன், அடி அத்தே!
கன்னியின் மாலை விலை நீ கழறிலை?
எனைப் பலர் வினவினர்.

கண்ணன்:— என்னையும் கேட்டார்.

வசந்த:—எட்டி குமார், 'ஈராயிரம் பொன்
திட்டமாய்த் தருகிறேன்; செப்பு', என வேண்டினர்.

சித்தி:—போதுமே நமக்குச் செட்டிகள் புணர்ப்பு!
மாதவி கதி அவள் மகட்கும் வேண்டுமோ?

மாதவி:—தெய்வம் காக்க!

சித்தி:— தெய்வம் என் செய்யும்?
செய்வது காம், பழி சேர்வது தெய்வம்.
யானைதன் தலைமேல் மண் இடல் போல, நீ
தானே, என் மதி அனைத்தையும் தள்ளி,
விலைமகள் குலமக ளாகி விளங்கி
நிலையா இளமையை நீத்ததும் அன்றி,
உனை அவன் துறந்தது நன்கு என உகவாது,
இனும் அவற்கு ஏங்கி, மற்று எவரையும் வெறுத்து,
தேடிய சிறிதையும் தெய்வம் வேண்டுதல்,
நாடிடத் தூதரை நால் திசை ஏவுதல்,
சோதிடம், ஆரிடம், என்றே தொலைக்கிறாய்
மாதவி! நினைக்கின் வயிறு எரிகின்றது.

மாதவி:—என்கோ அறிந்தும் இரங்காது, இவ்வாறு,
அன்னாய் ! என்னை வதைத்திடல் அறமோ ?
'பேயும் இரங்கும் பெண் எனின்' என்பர் ;
தாய் நீ, இரங்குதல் தகாதோ ?

வசந்த:— அத்தே !
சதுக்கப் பூதச் சந்நிதி கடந்த பின்,
ஒதுக்கத்து எவனோ ஓடிவந்து. ஒளிவாய்,
உன்னுடன் தனிமையில் உரையா டினனே ?

சித்தி:—சின்னவள் அதிர்ஷ்டம் சீக்கிரம் தெரியும்:
கண் இலை உனக்கு, வசந்தா ! கண்டேன்
அண்ணல் இளங்கோ நோக்கம் அரங்கினே.
சீயம் தேட்டுறு தீஞ்சுவை ஊனை
நாயின் ஊட்டுதல் நலம் அன்று ; அதுதான்
மீண்டனன் மாலை விலைபகராது, வீடு ;
ஈண்டு இது ரகசியம் ; தனிமையில் எய்தினேன்
அரசிளங் குமரா அனுப்பிய ஆளை:
அரசு அவை என்றே அரிது அடக்கினராம் ;
திட்டி விடம் எனப் பற்றியதாம் மயல்.

வசந்த:—பரிசம் என் பகர்ந்தனை ?

சித்தி:— பரிசம் பகர்வெனோ ?
அரசின் உரிமையே இனி நமது அன்றோ ?
கணிகை ஒருத்தி, காந்த மன்னற்கு, முன்
அணைவில் பயந்த ககந்தன் ஆண்டதனால்
காகந்திப் பெயர் கதுவியது இந்நகர்;
ஆகவே,—

மாதவி:— குட்டி செய்தி அறிவளோ ?

சித்தி:—அறியாள் இன்னும்.

வசந்த:— நான் அறியேனே

மாதவி:—அறிந்து, அவள் இசையின். ஆகுக; அன்றேல்;

சித்தி:—அன்றேல், இன்றேல் ! அதிக ப்ரசங்கி !
என்றும் இப்படியே ; இன்னும் மதி இலை.

மன்னவற்கு ஒரு மகன்; மன்மத சொரூபி,
சின்னவள் வலையில் சிக்கிவிட்டான்; இது:—

[மணிமேகலை வந்து மாதவியின் பக்கத்தில் ஊஞ்சலின்மேல் உட்காருகிறாள்.]

மாதவி:—அம்மா சாய்ந்து கொள்; அதிகமோ எய்ப்பு?

மணிமேகலை:—சும்மைபோல் உடம்பு கனத்துச் சோர்குது;
பாதம் நோகுவ.

மாதவி:— உடல் ஒரு பாரமே!

சித்தி:—போதும், மாதவி! நிறுத்து உன் போதனை;
இங்குவா, குட்டி! எடுக்கிறேன் தலை அணி;
அங்கம் நோவாது அமரப் பிடிக்கிறேன்.

மணிமே:—வேண்டாம் ஆயா! ஈண்டே இருக்கிறேன்.
அக்கா! தலை அணி சிக்காது அவிழ்த்திடு.

சித்தி:—அப்புறம் உறங்குபோ; அலுப்புத் தீர்ந்திடும்.

மணிமே:—இப்பொழுது உறங்கேன்.

சித்தி:— வசந்தா! எழுந்து போய்க்
கவிழ்த்திடச் சட்டி, கடுகு சிறங்கை,
உப்பு, மிளகாய்ப் பழம் உடன் கொண்டுவா;
கண்ணு! முத்தெருச் சந்தியைக் கடுகி,
மண் ஒரு பிடி, வாய் பேசாது, எடுத்துவா;
விழித்திருக் கையிலே கழிப்புக் கழிக்கிறேன்.

மணிமே:—வேண்டாம், ஆயா! வீடெலாம் கமறும்;
தீண்டாது என்னை ஒருவர் திட்டியும்;
இதற்கு நான் இணங்கேன்.

சித்தி:— எதற்கும் எதிர் மொழி!
தாய்போல் பிள்ளை, நூல் போல் சீலை;
ஆயின், என் மகள் மட்டும், அறவே
தாயின் வேறாச் சனித்தது வியப்பே!
நான் போகின்றேன் உறங்கிட.

வசந்த:— அத்தே!
நானும் வருகிறேன்; கண் சுழல்கின்றது.

மாதவி:—வாங்கி இவற்றைப் பெட்டியில் வைத்திடு,
தூங்கப்போமுன். [சித்ராபதி கையில் பரிசுகளையும் தலைக்
கோலத்தையும் கொடுக்கிறாள்.]

சித்தி:— தொழுவக் கதவை
அடைத்திடு, கண்ணா!

கண்ணன்:—ஆட்டும், ஆயா! [சித்திராபதியும் வசந்தமாலை
யும் போகின்றனர்.]

மாதவி:—படுபோ நீயும், கண்ணா! படுபோ.
ஒரு திரி ஒழிய விளக்கை அவித்திடு;
சரிதான்; உறங்குபோ

கண்ணன்:— சங்கதி ஒன்று.

மாதவி:—என்ன? சொல்!

கண்ணன்:— எனக்கும் சொன்னான் அந்த ஆள்:
சின்னவள் மேலே சின்ன ரா—,

மாதவி:— தெரிந்தது;
நாளைக் கேட்கிறேன்; நடுநிசி கடந்த
வேளை, இப்பொழுது வேண்டாம்; படுபோ.
[கண்ணன் போகிறான்.]

மணிமே:—என்ன சொல்கிறான்?

மாதவி:— ஏதோ பிதற்றல். [மணிமேகலையின்
அடிகளை வருடிக் கொண்டு]

சின்னஞ் சிறு பதம்? நோவாது என் செயும்!
அம்மை அரங்கேற்று ஆயிற்று ஒருபடி!
வேத்தவைக் கூத்தின் விமரிசை கேட்டேன்;
பார்த்திபர் அளித்த பரிசுகள் பார்த்தேன்;
'தாயினும் மிக்க சேய்' எனத் தலைக்கோல்
கொண்டு, பெரும்புகழ் கொண்டதும் கேட்டேன்;
புங்கவன் அருளில் உன் ஆயுள் பொங்குக!

மணிமே:—கண்டிட வந்திலை; காண்கிலர் அவரும்;
ஐயா இலாமை ஆறாத் துயரமே.

மாதவி:—வெய்ய என் விதி அது ; வேறு என் சொல்வது ?
வேதியன் கோசிக மாணி மீண்டபின்,
'ஏது, இனிவரார்' என்று, ஏங்கும் என் இதயம் ;
'இல்லை மீள்வர்' என்று, ஒரு பொழுது உவக்கும் ;
அல்லும் பகலும் இவ் ஊசல் ஆட்டமே.
இப்படி இருப்பவள் எப்படி வருவேன் ?
என் துயர்க்கு ஒழிவு இலை.—என்ன பாடினை
இன்று நீ ?

மணிமே:—ஏதோ பாடினேன், ஆடினேன் !

மாதவி :—அவை அஞ்சிலையோ ஆதியில் ?

மணிமே :— அஞ்சிலேன்
சுவை அறியும் சிலர், தூரத்த குணத்தினர்,
கூத்தின் இடைஇடைக் கூர்த்து எனை நோக்கி,
யாத்துப் பிடித்து விழுங்கிடுவார் போல்,
விழித்தனர் வெறித்து, மெல் நகை பூத்திட ;
பழிப்புறு சைக்கினை பலவும் செய்தனர் ;
அப்பொழுது, என் மனத்து அச்சமும் நாணமும்
கைபபுறு வெறுப்பும் கதித்துக், கலங்கினேன்.

மாதவி:— அம்மை அரசிளங் கோவை அறிவையோ?
சும்மா இருப்பது என் ?

மணிமே:— சொல்கிறேன் நிகழ்ந்ததை :
அரசர் அரிஅணை அருகு, அவர் இருந்தார் ;
ஒரு கால் ஆங்கு நான் ஆடி உற்ற போது,
இருவர் கண்களும் இயைந்திட நோக்கினேம் :
வெட்கமும் தீது இல் அச்சமும் மேவிடக்,
கட்குடி வெறியரில் உவகை கைமிக,
உடல் எலாம் சிலிர்க்க, ஒரு நொடி மயங்கினேன் ;
இடறி வீழ்வாரில் தத்தளித்தேன் இறை ;
பண்டு பழகிப் பிரிந்த பரிவினில்,
பள்ளம் பாய் புனல் போல, என் உள்ளம்,
கண்ட அக் கணமே கடுகியது அவர் பால் ;

எவ்விதம் மீண்டனன், செல்வி அறிகிலேன்.
பின்பு அருகு அடைந்திலேன், பெயர்த்தும் நோக்கி
என்பயம் தடுத்தது. [லேன்,—

மாதவி :— உறங்குவா, எழுந்திரு :
மூன்றாம் யாமக் கோழி முழக்கு அது.
ஈன்ற பொழுதினும் உவந்தேன் இன்றே!

மணிமே :—ஐயா இல்லையே!

மாதவி :— ஐயோ பாவம்!
எனக்கு என இரங்கி அருளிலது என்னினும்,
உனக்கு உளம் இரங்கி, அருளுக தெய்வம்!
[இருவரும் எழுந்து போகின்றனர்].

முதல் அங்கம் முதற்காட்சி முற்றிற்று.

இரண்டாம் காட்சி

இடம்:—பூம்புகாரில் விழாக்கோலத்தோடு விளங்கும் வீதி.

காலம்:—மாலைப்பொழுது.

அரங்கிலே:—நகரவாசிகளும் பிறரும் அவரவர் பணிகளில் காணப்படுகின்றனர். வீதியின் அலங்காரத்தைப் பார்த்துச்சிலர் நிற்கின்றனர்; கௌசிகனும் காயசண்டிகையும் எதிர்ப்படுகின்றனர்.

கௌசிகன்:—ஸ்வஸ்தி, காந்தர்வ ஸ்திரீ! ஸௌக்கியமா?
வஸ்திரம் ஏது புதிது? வாங்கினதோ
தானமோ?

காயசண்டிகை :—தானம் இலை, வெகுமானமே ;
சாதுவன் பத்தினி, ஆதிரை உத்தமி,
தந்தது இச்சிலை.

கௌசி :— எந்தச் சாதுவன்?
பூஸ்திதி ஸ்ரீதன ஆஸ்திகள் எல்லாம்
கூத்தியும் சூதுமாய் நாஸ்தியாக்கினபின்,
ஆர்ணவ தாணம் செய்து கெட்டு அலைந்து,
ஆரார் தலையெலாம் தடவியோ, அர்த்தம்,

அபார ஐசுவர்ய குபேரனாய், அன்று
சந்திர தத்தன் வங்கம் வந்திறங்கிய
பூர்ண யோக்ய ஆஷாட பூதியா?

காயச :—நல்லவரே அவர்; நாகர்கள் நாயகன்
குரு தக்ஷிணையாக் கொடுத்ததே அப்பொருள்.

கௌசி :—நல்லவர் பொக்திலே! நாகர்கள் சிஷ்யரா!
குருவுக்கு ஏற்ற சிஷ்ய கோஷ்டிதான்!
அது கிடக்கட்டும்; அத்தி புஷ்பம் போல்
இருக்கே தரிசனம்; ஊரில் இல்லையா?
அதவா, வியாதியின் உபாதி அதிகமா?

காயச:—[தன் பிக்ஷாபாத்திரத்தைக் காட்டி]
இதுவே விசாரம்; என்பாடு அறிவீரே.

கௌசி :—உனக்கு ஏன் விசாரம்? ஊரெல்லாம் அம(ர்)க்களம்;
தத்க்ஷணம் பிக்ஷா பாத்திரம் அக்ஷயம்;
ஜனநெருக்கு அமோகம்; இந்த ஜன்மாவிலே
எத்தனையோ இந்த் ரோத்ஸவம் பார்த்தாச்சு:
இத்தனை விமரிசை, இத்தனை சம்ப்ரமம்,
இதுவரை இல்லை,

காயச :— நானும் இதுவரை
பதினொரு திருவிழாப் பார்த்து வருகிறேன்;
இதுபோல் தோரணை இதுகா றில்லை;
ஆயினும், அன்னம் இடுவார் அருமையே;...
காயும் நாட்டைக் கடும் கரு.

கௌசி :— கலியுகம்!
நதியிலே ப்ரவாகம், பதியிலே க்ஷாமம்!
அத்யாச் சர்யமே! இந்த ஆண்டிலே
கந்தர்வன் உனைக் காண வந்தானோ?

காயச :—வந்திடும் நாள் இதே; என்னை வதைத்திடும்
ஆனைத் தீயும் சாபமும் அகன்று,
வான கமன மந்திரம் மறந்ததை

மீண்டும் நான் உணர்ந்து, எம் நீள்பதி மேவலாம்
ஆண்டும் ஈதே;

கௌசி :— ஹாஸ்யம் இதைப்பார்.

[உறியில் வைத்த குண்டிகையும் பொடிப்பிரம்பும் கொண்டு திகம்பர சைனமுனி ஒருவன் தெருவில் வருகிறான்; கட்குடியன் கையில் கள் மொந்தையுடன் பாடிக்கொண்டு வருகிறான்.]

கட்குடியன் :—[பாடுகிறான்]

நான்மட்டும் குடிகாரன் அல்லடி பெண்ணே,
நாலு தலைமுறையா வருதடி கண்ணே!
தேன்மட்டும் தித்திக்கும் என்கிறாய், வம்பே!
தென்னங்கள் போல் இல்லை ஒன்றுமே தம்பீ!

[சைனமுனியைக் கண்ணுற்று]

அடிகளே தண்டம்! அடிகளே தண்டம்!
அடியேன் ஒரு விண்ணப்பம் அடிகளே:
குளியா மேனி புழுதிக் காடாய்
கஞ்சி இல்லாமலே கா(ய்)ஞ்சு தே(ய்)ஞ்சுபோய்
அழுக்குப் பிடித்துப் புழுத்த கூட்டிலே;
அடிகள் ஆவி அடைபட்டு அழுகுது.
அடியேன் அறிவேன் அதற்கு ஒரு மருந்து:
எங்கள் குருக்கள் சொன்னது எங்களுக்கு;
இப்பவும் எப்பவும் இன்பமே தரும் அது;
அடிகளே! தென்னம் பாளையை அறுத்து
வடியும் கள்ளிலே பாவம் வருமா?
உண்டீர் ஆயின் இவ் ஒரு மொந்தைகள்
'கொண்டுவா இன்னும் குடம் கள்' என்பீர்;
குடித்துப் பாரும்! பிடித்திடும் மொந்தையை!

காயச:—ஐயோ பாவம்! ஓடுகிறார் அவர்.

[கட்குடியன் தொடரச் சைனமுனி ஓடுகிறான் கண்ணன் கையில் கோலுடன் வருகிறான்.]

கண்ணன்:—ஐயரா! அடியேன் கண்ணன் தண்டம்!

கௌசி:—அடியும் தண்டமு மாக, இந்நாளிலே
பிராமணன் பாடு பிராண சங்கடமே!

தடி ஏன், கண்ணு ? பயம் ஜனிக்கிறதே !
'அடியேன்' என்ற பின் தான் ஆஸ்வாஸம்.

கண்ணன்:—பசு வரக்காணேன்; பார்க்கப் போகிறேன்.
அசுபம், ஐயர் எதிரே வந்தீர்.
இந்த அம்மாள் யார் ?

காயச:— எனை அறியாயோ!

கௌ:—காந்தர்வ ஸ்திரீ ; காய சண்டிகை.

கண்ணன்:—என்னது ? யாரு ? பயமாய் இருக்கே.

காயச:—சொன்னால், அவற்கு விளங்கச் சொல்லிடும் :
நான் ஒரு விஞ்சை மகள் ; வடநாடு ;
கணவனும் நானும், பலவளம் கண்டு,
தென்திசைப் பொதியச் சாரலில் திரிகையில்,
பன்னீராண்டுக்கு ஒரு பழம் பழுததே
உண்டு நோற்கும் ஓர் விரதி, அக்கனியை
நதிக்கரை வைத்து ஸ்நானம் செய்யச்
சென்றதை அறியேன், தீவினை தூண்டிட,
நடக்கையில் காலால் நசுக்கினேன் கனியை ;
பசிபொறு விரதி பார்த்து, எனைச் சபித்தான்,—
அது முதல் ஆறு ஈராண்டு, அவன் மீண்டும்
ஒரு கனி உட்கொண்டு, உறு பசி ஒழி வரை,
ஆனைத் தீப்பசி வயிற்றை அரித்திட,
பறக்கு மந்திரமும் மறக்கென பாவியேன்,
அதுமுதல் ஆறுப் பசியோடு அலைகிறேன் ;
இந்திர விழாத்தொறும் வந்து, எனைக்கண்டு
செல்வன் என் கணவன் ; இது என் செய்தி.

கண்ணன்:—ஒரு கலம் அரிசிச் சோறு உண்டாலோ ?

காயச:—இருகலம் எனினும் தீராது என் பசி.

கண்ணன்:—உனக்கு ஒரு கும்பிடு, நீ ஒரு தெய்வமே !
ஆத்தாடி ! இது என்ன பிளைப்பு !
ஆத்திலே குளத்திலே விளுந்து செத்திடலாம்.

கௌசி:—ததாஸ்து ! நான் போகிறேன்.

கண்ணன்:— ஐயரே ! தாயி
வரச்சொன்னாள் உம்மை; மருதையில் இருந்து
திருவிளாப் பா(ர்)க்க வருகிற ஆள்களே;—

[வீதியின் இருபுறமும் நோக்கிக்கொண்டே வரும்
சோக்கன் இவர்கள் மேல்வந்து விழுகிறான்.]

கௌசி:—இருகண்ணும் சூக்பமா ? என்ன, ஓய் ! பகலில்
இப்படி நடக்கிறீர் ? எந்தக் குக்ராமம் ?

சோக்கன்.—தப்பிதம் பொறுப்பீர் : தமிழக மதுரையேன்,
இப்பொழுதே நும் எழிற்பதி எய்துவேன்,
விழவு அணி காண்பதில் பிழையிது செய்தனன்.

கண்ணன்:—ஆத்தாடி ! தமிள் என்ன அளுத்தம் !

சோக்:—சாத்தனார் அறிவீரோ ?

கௌசி:— எந்த ஊர் சாஸ்தா ?

சோக்:—மதுரை அம் பதியினர்; மரபில் வாணிகர்;
முதுமை முறை வழி ஓதி முதிர்ந்து
தமிழ்க்கடல் தாண்டிச் சங்கத்து இருப்பவர் ;
அமிழ்தினும் இனிய அருங்கவிப் புலவர்;
அன்புருக் கொண்ட அறவோன் அடிகளே
வன்பவக் கடலை மக்கள் கடத்தற்கு
ஏற்ற புணையெனப் போற்றி வாழ்பவர் ;
அவர் என் ஆசான் ;—

கௌசி:— அப்படியா ? என்
குருசிகா மணியைக் கூறுவேன்,—

கண்ணன் :— ஐயரே !
மருதை என்றாரே, மருமகன் சங்கதி
கேட்டால் தெரியுமோ என்னமோ.

கௌசி :— கேட்போம்.

சோக் :—தேட்டம் என்!

கௌசி :— இந்த ஊர்க் கோவலன் செட்டியார்,
தர்ம பத்நீஸ்க, போன ஸம்'வத்ஸரம்,
கர்ம வசத்தினால், கால்நடை யாகவே,

சட்டெனக் கிளம்பி விட்டனர் தக்ஷிணம் ;
நான் போய் மார்க்க விசாரம் நடத்தினேன்;
'தான் போம் லக்ஷியம் தக்ஷிண மதுரைதான்,
வியாபா ரார்த்தமே, வேறிலை,' என்று,
நியாயமும் கூறினர். நீர் அகஸ் மாத்தாய்
ஸந்தித் திரா ! வந்து சேர்ந் தாரா ?
என்ன, ஸ்தம்பிதம் ?

சோக் :— இனமோ, நட்போ ?

கௌசி :நன்றாய் இருந்தது ! நான் ஒரு செட்டியா ?
ப்ரும்ம தேஜஸே சூந்யமா பிறவியில் ?
கர்மம் ! கர்மம் !

சோக் :— கடியீர் என்னை,—

கௌசி :— சுவானமா கடிக்க ?

சோக் :—சொற் புரட்டோ ? நீர் சினப்படல் ஒழிவீர்
என்றே செப்பினேன்.

கண்ணன் :— மருதை ஊரிலே ஆண் மனிசாளும்
சினைப்படு வார்களோ ? [சிரிக்கிறான்.]

சோக் :— தெரியீர், அஃது இலை ;
கோபம் வேண்டாம் என்றே கூறினேன்.

கண்ணன் :—அப்படிச் சொல்லுமேன் தமிளிலே.

கௌசி :— ஐயா
தெரிந்ததோ என்னை ?

சோக் ;— தெரிவேன் உம்மை:
தாம் மறைக் குலமே, தமிழே கரியாம்,—

கண்ணன் ;—ஆம் ஆம், ஐயர் மறவர்தான், அறிவேன்.
தமிளுமா கறுப்பு ! உம்மதா வெள்ளை !
[அதிகம் சிரிக்கிறான்.]

சோக் :—பாமரர் போலும் ?

கண்ணன் :— பாய் மரமா நான் ?
நீர்தான் பனைமரம் போல நீண்டிருக்கிறீர்.
செட்டியார் சங்கதி தெரிந்தால் சொல்லும்.

சோக்:—இவரையே அயிர்த்தேன்; இவர் இனம் இல்லையே?

கௌசி:—காந்தர்வ ஸ்திரீ இவள்; கண்ணா! உன்
குலம் கோத்திரங்களைக் கூறவா?

கண்ணன்:— கூறுமேன்:
ஐயர்மார் குலங் கோத்திரம் அறியேனா?
ஆரது, பிரமனா?

சோக்:— அறைவேன் அது கேள்:

"முதுமுனிற முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காதலஞ் சிறுவர்-
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்."

கண்ணன்:—ஐயரும் நானும் அண்ணன், தம்பியே.

கௌசி:—அது கிடக்கட்டும்; செட்டியார் அங்கே,—

சோக்:—வந்தனன்; மனைவியின் மணிச்சிலம்பு ஒன்றை
முந்துற விற்று, அம் முதலின் வாணிகம்
தொடங்குவான் சூழ்ந்து, தன் தோமறு மனைவியை
இடையர் சேரியில் இருத்திச், சிலம் பொடு

"மன்பெரும் பீடிகை மறுகில் செல்வோன்,
பேர்ன் செய் கொல்லன் தன் கைகாட்ட,
'கோப் பெருந்தேவிக்கு அல்லதை இச்சிலம்பு
யாப்புறவு இல்லை, ஈங்கு இருக்க' என்று ஏகி,
'பண்டு தான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறன் ஓர் கள்வன் கை' என,
வினைவிளை காலம் ஆதலின், யாவதும்
சினை அலர் வேம்பன் தேரானாகி,
கன்றிய காவலர்க் கூஉய், 'அக் கள்வனைக்
கொன்று, அச் சிலம்பு கொணர்க ஈங்கு' என,
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களம் காணாள், நெடுங்கண் நீர் உகுத்து,
பத்தினி ஆகலின் பாண்டியன் கேடு உற,"

மாண்தகு கற்பின் மதுரை தீ ஊட்டினள்

கௌசி:—கலியுகக் கூத்து! அப்புறம்?

சோக்:— கழறுவேன்:
பின்பு, அவள் வைகையின் கரைவழிப் பெயர்ந்து
அன்பனைச் செங்குன்று அருகினில் மீண்டும்

வானவர் வடிவினில் கண்டு, அவனோடும்,
ஏனையர் காண ஏறினள் விட்புலம்.
நிகழ்ந்த இறும் பூது இஃதே.

காயச :— நேற்று இரா,—
இல்லை இன்று காலைதான்,— இவ்வூர்
மாடல மறையோன், கூடலில் இருந்து
வருபவன், வழியில் வாணிகர் சிலருடன்
இதுபோல் பேசியது எட்டியது என் செவி;
அரசன் ஆராயாது ஆரையோ கொன்றிட
உரைசெய, அரமனைக் காவலர் உடனே
வெட்டி வீழ்த்தினர் செட்டியை என்றும்,—

கண்ணன் :—யாரு, நம்மவரையா?

காயச :— இனம் யான் அறியேன்;
பேர் ஊர் வினவப் பேசிலர் பதில் அவர்.

கௌசி :—கலியுகம்! கஷ்டம்!

காயச :— கலி என் செய்யும்?
விதிவசமே இது.

கண்ணன் :— விளங்க இல்லையே.
என்ன சங்கதி ஐயரே?

கௌசி :— இன்னும்
புரிய இல்லையா உனக்கு? மருமகன்
கோவலன் செட்டியார், கேவலம் சோரர்போல்,
ஊர்பேர் தெரியாத் தூர தேசம்போய்,
காரக காலம். மதுரை யிலே சிரச்
சேதம் ஆனுராம். செத்துவிட் டாராம்.

கண்ணன் :—ஐயோ! என்ன அநியாயம் இது!
ஐயோ தெய்வமே! தாயி அறிந்தால்
உயிரை விட்டிடுவளே! ஊரை விட்டு ஊர்போய்
செத்தாபோனுர்! சின்னவள் கேட்டால்
என்னமாய்ச் சகிப்பாள்? 'நம் மகள் பொன்னி
கண்ணாலச் சடங்குக்கு முன் கடிய

வந்திடுவார் அவர்; நொந்திடாதே நீ'
என்று என் பெண்காதிக்கு, நான் இன்று
தானே சொன்னேன்! நேற்றே தாயி
'அவர் இலேயே இதுகாண' என்று அழுதாள்!
இன்று இதைக்கேட்டால் எப்படிச் சகிப்பாள்!
நான் தான் எப்படிச் சொல்லுவேன்? [அழுகிறான்.]

கௌசி :— கண்ணே!
ஒன்றும் நீ சொல வேண்டாம்; உடனே
நான் போய் தீர்க்க விசாரணை நடத்தி,
வர்த்தமானம் எல்லாம் வ்யக்தமாய் அறிந்து,
உன் பினே வருகிறேன்; பிரலாபம் நிறுத்து; போ!

காயச :—அழுதால் என்ன, அடித்தால் என்ன!
எழுதாப் படிக்கு வராது எதுவும்மே. [போகிறார்கள்]

முதல் அங்கம் இரண்டாம் காட்சி முற்றிற்று.

முதல் அங்கம் முற்றிற்று

புறநானூற்று ஆராய்ச்சி.

Purananooru: A Study.

சென்னைக் கிறிஸ்தவன் கலாசாலையில் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் R. ரங்காசாரியார் அவர்கள், M.A., L.T., எழுதியது.

புறநானூறு என்பது சங்கப் புலவர்கள் அருளிச் செய்த 400 அகவற்பாக்கள் கொண்ட ஒரு தொகை நூல். அவற்றுள் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் மற்ற 399 பாக்களும் முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் கோவூர்கிழார் இறுதியாகவுள்ள 150 புலவர்களால் பாடப்பெற்றவை. இவற்றுள் சில பாடல்கள் இன்னாரால் பாடப்பட்டன என்று இக்காலத்தார் அறிவதற்கு முடியவில்லை. இந்நூலைத் தொகுத்த புலவர் எவரெனக் காண்டற்கும் வழியில்லை. இந்நூலைத் தொகுப்பித்த அரசன் யாரென்றும் விளங்கவில்லை இந்நூலில் கோக்கப்பட்ட பாக்களில் பல கடைச்சங்க காலத்திற்குச் சிறிது முன்னும் பின்னும் எழுந்தவையாகும். இப்பாக்களைப் பாடினோர் ஒரு காலத்தவரல்லர். ஒரு குலத்தவரல்லர்; ஒரு மதத்தினரல்லர்; ஓரிடத்தவருமல்லர்; இவர்களுள் அந்தணர் சிலர்; அரசர் சிலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர்; சமணர்; புத்தர் ஒரு சிலர்; பெண்பாலர் சிலர். பாடப் பட்டோருள் பலர் முடி அரசர்; சிலர் சிற்றரசர்; சிலர் வேளிர்; சிலர் தண்டத்தலைவர்; சிலர் வீரர்.

இப்பாக்களிற் பல பண்டைச் சேரசோழ பாண்டியர்கள் என்ற முடியுடை மூவேந்தரது வீரச்செயல்களையும், தண்ணளியையும், நட்பையும் கொடைச் சிறப்புக்களையும் கூறும்.

சிலகடையேழு வள்ளல்களின் அருமை பெருமைகளையும் கொடை மடத்தையும் தெரிவிக்கும். சில புலவர்களின் பெரு மிதத்தையும் வறுமையையும் விரித்துரைக்கும். சில அக் காலச் சரித்திர விஷயங்களையும் நாகரிகத் தன்மையையும், போர் முறைகளையும், நடையுடை பாவனைகளையும், வகுத் துரைக்கும். இத்தகைய பாக்களைக் கொண்ட இந்நூல் அக் காலத்துத் தமிழ்மக்களது நாகரிகம், ஆட்சி, மறம், கொடை, முதலியவற்றை அறிவதற்குத் தகுந்த கருவியாகுமெனக் கூறுவதற்கு என்ன தடை? இத்தகைய ஆராய்ச்சிக்கு இந் நூலை விட வேறு சிறந்த நூல்கள் இல்லையென்றே சொல்ல லாகும். புறநானூற்றை மூன்றாந் தமிழ்ச் சங்ககாலத்தைத் தோற்றுவிக்கும் பூதக்கண்ணாடி யென்றே கூறலாம். ஆனது பற்றி இந்நூலைத் துணையாகக்கொண்டு இந்நூலின் தொன் மை, புறப்பொருளின் பகுதிகள், தமிழரது போர் முறை, தமிழ்மக்களது வீரம், தமிழ்ப்புலவரது குணாதிசயங்கள், தமிழ் வள்ளல்களது கொடைச் சிறப்பு, முதலியனவும், தமிழ் மாந்தரது நாகரிகமும் ஆராயப்படும். இவ்வாராய்ச்சிக்குத் துணைக் கருவியாக ஆங்காங்கு வேறு சங்க நூல்களும் எடுத் தாளப் படுவது இன்றியமையாதது. இவ்வாராய்ச்சியின் பயனாகத் தமிழ் மொழியை விருத்திக்குக்கொண்டு வந்து முன்னாளில் அது பெற்ற உன்னத நிலையில் வைப்பார்க ளென்று கருதியே இது எழுதப்படுகிறது.

முதல் அதிகாரம்.

புறநானூறு தொகுக்கப்பட்ட காலம்.

ஆதிகாலத்தில் தமிழ்நாட்டில் முதலிடை கடையெனச் சங்கங்கள் மூன்றிருந்தன வென்பர். கடைச்சங்க கால நூல் களைத் தொகுத்து எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதி னெண் கீழ்க்கணக்கு என்ற நூல்தொகைகளுக்குள் அடக் குவர். இவற்றுடன் சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற காவி யங்களையும் சேர்ந்தவை. அவையிரண்டும் பிற்காலத்தெழுந்து

நூல்களுடன் சேர்ந்து ஐம்பெருங் காப்பியங்கள் என்ற பகுதியில் அடக்கப்பட்டன. ஆயினும் சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகளும், மணிமேகலை ஆசிரியராகிய சீத்தலைச் சாத்தனாரும், புறநானூற்றுப் பாடல் ஆசிரியராகிய பலபாவலருடன் சமகாலத்தவராகத் தெரிதலின், இவ்விரண்டு நூல்களும் நியாயமாகக் கடைச்சங்க நூல்களென்றே கருதப்படவேண்டும். அவ்வாறு அவை கருதப்படாமைக்குக் காரணம் என்ன? பிற சங்க நூல்களெல்லாம் கடைச்சங்க காலத்தில் சேர்க்கப்பட்டும் யாக்கப்பட்டும் அரங்கேறின வென்பதில் ஓர் ஐயமுமில்லை. ஆதலின் இந்நூல்கள் இரண்டும் சங்க காலத்தில் அரங்கேற்றப்படாமல் ஒழிந்தன வென்றும், இந்நூல்கள் எழுந்த பிறகு கடைச்சங்கமே கலைந்து அழிந்ததென்றும் கருதுவதற்கு இடமுள்ளது. அன்றேல் கடைச்சங்க நாளில் தோன்றிய இப்பெருநூல்களை ஆன்றோர் இவ்வாறு பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலிய நூல்களோடு வைத்து எண்ணினர் என்று ஒருவாறு ஊகிக்கலாம்.

இனி, கடைச்சங்க காலந்தான் எது? முதலிடைச் சங்கங்கள் எங்கெங்கே எக்காலத்திலிருந்தன? எத்துணைக் காலம் இவைகள் நிலையாக நின்று தமிழ்நூல்களை ஆராய்ந்தன? தமிழ்ச்சங்கந்தான் ஒன்றா? பலவா? என்ற கேள்விகள் இங்கு எழலாம். இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷய மொன்றுண்டு. அதாவது முதலிடை கடைச்சங்கங்கள் என்ற பிரிவும், அந்தந்த சங்கங்களில் இன்னின்ன நூல்கள் எழுந்தனவென்ற கொள்கையும் கடைச் சங்கப் புலவர்களின் வாயால் வெளிவந்தவையல்ல. அதனால் இப்பாகுபாடுகள் பின்னுள்ளோரால் வகுக்கப்பட்டன வென்பது வெளிப்படை.

சங்க வரலாறு.

முச்சங்கங்களைப்பற்றிய வரலாறு மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரர் எழுதிய இறையனார் களவியலுரையின் கண்ணே முதல் முதல் காணப்படுகின்றது. நக்கீரர் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த புலவர் 49-வரில் தலைமை

வகித்தவரென்பது பிரசித்தம் இவர்கண்ட இறையனர் களவியல் உரை மிகவும் ஒட்ப நுட்பம் பொருந்தியதென்று கருதப்பட்டதால் இம்மெய்யுரையே நக்கீரர்முதல் முசிரியாசிரியர் நீலகண்டனர் இறுதியாகப் பத்துத் தலைமுறைகாலம் உபதேச வாயிலாக நடந்துவந்தது. நீலகண்டனர் இவ்வுரையைத் தாம் கேட்டறிந்தபடி யாவருக்கும் பயன்படுமாறு ஏட்டில் வரைந்தனர். இவ்வாசிரியருக்குப் பிறகு இவ்வுரை பலரால் ஏட்டில் எழுதிக் கற்கப்பட்டு வந்தபோது கூட்டியும் குறைத்தும், மாற்றியும் உதாரணக் கவிகள் ஏற்றியும், எழுதப்பட்டதென் றெண்ணுவதற்கு இடமுண்டு தற்கால நிலையையடைந்தகாலம் கி. பி 770 என்பர். [செந்தமிழ்த்தொகுதி 5, பக்கம் 64] நக்கீரர் சிஷ்ய பரம்பரையில் உரைநடந்துவந்தபோது அதை மாற்றவும் கூட்டவும் எவரும் துணியார். பிற்காலத்து ஆசிரியர்கட்கு அவ்வித குருபக்தியும் குருவாக்குகளை மாற்றுவதால் ஏற்படும் மனத்துணுக்கும் இராவென்பது ஒருதலை அவர்கள் பழையவுரை விளங்கும் பொருட்டுத் தம் அகலவுரையை அத்துடன் ஓட்டுவது குற்றத்துக் கிடமாகாது. ஆதலின் முச்சங்கவரலாறு நீலகண்டனருக்குப் பிறகு வந்தோரால் ஒருவாறு திருத்திச் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று பலர் கொள்ளுகிறார்கள்.

இனி முச்சங்கவரலாறு பின்வருமாறு களவியலில் காணப்படுகின்றது:—

தலைச்சங்கம்.

தமிழ்மொழி தமிழ்ச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களிலும் நன்று ஆராயப்பட்டது. இச்சங்கமூன்றனையும் இரீஇயினர் பாண்டியர்கள்.

இனித் தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் அகத்தியனாரும், திரிபுர மெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐந்நூற்றுநாற்பத் தொன்பதின்மர். அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்ப

தின்மர் பாடினர். அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியா விரையு மென இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தார். அவர்களைச் சங்கமிரீஇயி னர் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோனீறாக எண்பத் தொன்பதின்மர். அவருட் கவியரங்கேறினர் எழுவர் பாண் டியர். அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப் பட்ட மதுரை. அவர்க்கு நூல் அகத்தியம்.

இடைச்சங்கம்.

இனி, இடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் அகத்திய னாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோமானும், கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினர். அவர்களாற் பாடப் பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலுமென இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத் தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசைநுணுக்க மும், பூதபுராணமு மென இவை. அவர் மூவாயிரத்து எழு நூற்று யாண்டு சங்கமிருந்தார். அவரைச் சங்கமிரீஇயினர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத் தொன்பதின்மர். அவருட் கவியரங்கேறினர் ஐவர் பாண்டியர். அவர்சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரத்து. அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் கடல் கொண்டது.

கடைச்சங்கம்.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமே தாவியாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடையானாரும், பெருங்குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையா சிரியனார் நல்லந்துவனாரும், மருதனிள நாகனாரும், கணக் காயனார் நக்கீரருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்ப தின்மர் [அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர்]

பாடினர். அவர்களாற்பாடப்பட்டன நெடுந்தொகைநானூறும், குறுந்தொகைநானூறும், நற்றிணைநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும்.கூத்தும்வரியும் பேரிசையும்சிற்றிசையு மென்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும், அவர்களைச் சங்கமிரீஇயினர் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி யீறாக நாற்பத்தொன்பதின்மர் அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்து உத்தரமதுரை. அவருட் கவியரங்கேறினர் மூவர் பண்டியர்.

சங்கம்	தமிழ் ஆராய்ந்தோர் தொகை	பாடினோர் தொகை	சங்கம் இருந்த காலம்	பாண்டியர் தொகை	கவியரங்கேறியபாண்டியர்	சங்கம் இருந்த விடம்
தலை	549	4449	4440	89	7	தென் மதுரை. நூல் அகத்தியம்
இடை	51	3700	3700	59	5	கபாடபுரம் நூல் அகத்தியமும் தொல்காப்பியமும்
கடை	49	449	1850	49	3	உத்தர மதுரை. நூல் அகத்தியம் தொல்காப்பியம்
III	649	8598	9994 1600 11590	197	15	

இச்சங்கவரலாற்றைக் குறித்துப் பலபண்டிதர்கள் பலவாறாக இதுகாறும் ஆராய்ந்துள்ளார்கள். சிலர் அது முற்றிலும் தள்ளத்தக்க தென்பர். சிலர் அதுமுழுவதும் கொள்ளத்தக்கதென்பர். ஒரு சிலர் அவற்றுள் ஒரு பாகத்தைக் கொண்டு பிறவற்றை விலக்குவர். உண்மை யாதாயினும்

ஆகுக. இவ்வரலாறு கடைசியாக ஏட்டில் எழுதப்பட்ட காலத்தில் அதாவது 8-ம் நூற்றாண்டில் முன்னாளிலாண்ட மதுரைப்பாண்டியர்கள் அக்காலத்துப்புலவர்பெருமக்களுக்கு ஞாபகத்திற் கெட்டாத காலங்களில் சங்கங்களை நிறுவித் தமிழாராய்ந்து வந்தனர் என்பதும், அவ்வாறு வந்த கடைச் சங்க காலத்தில் எழுந்த நூல்கள் இவையென்றும் கர்னபரம் பரையாக அவர்களுக்கு எட்டிய செய்திகளென்பதை ஒருவரும் மறுக்க இயலாது. மேலே காட்டிய அட்டவணையைக் கவனித்தால், இம்முச்சங்கங்களும் முறையே தென்மதுரை கபாடபுரம், தற்கால மதுரை என்ற பாண்டியர் தலை நகர்களில் ஏற்பட்டு 9990 ஆண்டுகள்வரை 197 பாண்டியமன்னர்களால் போற்றி வளர்க்கப்பட்டன வென்பதும், அச்சங்கங்களிலிருந்து தமிழாராய்ந்தோர் 649 தின்மர் என்பதும், அவருள்ளிட்டு 8598 மர் பாடினார் என்பதும் இக்காலத்துள்ளோர் செவிக்கு ஒரு கட்டுக்கதைபோலக் காணப்படுகின்றன. மேற்குறித்த சங்க வரலாற்றில் காணப்படும் 'என்ப', 'போலும்' என்ற சொற்களை உற்றுநோக்குவார்க்கு அது ஒரு கர்னபரம் பரைச்செய்தியென்பது தெரியவரும்; ஆயினும் முன்னாள் முதல் இன்னாள்வரை வந்த உரையாசிரியர்கள் எல்லாரும் இவ்வரலாற்றிற் குறித்த விஷயங்களையும் கடல் கோளையும் உண்மையெனக்கொண்டு தங்கள் தங்களுக்கு எட்டிய சாதனங்களை வைத்துக்கொண்டு கூட்டியும் விரித்தும் எழுதினர். இக்காலத்தெழுந்த விற்பன்னர்கள் இவ்வரலாறு ஒரு தலையாகக் கொள்ளத்தக்க தன்றென மறுத்துப் பலவாறாக அதைப் பற்றி ஆராய முயன்றுள்ளார். அவர் காட்டும் முக்கிய ஆட்சேபனைகளில் ஒன்று இவ்வரலாற்றை நிரூபிப்பதற்கான நூல்களே இல்லை என்பது. இது உண்மை தான். ஆயினும் உரையாசிரியராகிய இளம்பூரணர் முதலியோர் நாட்களிலிருந்த முன் காலத்துச் சில நூல்களும் இக்காலத்திற் கெட்டாமலிருக்கும்போது, இவ்வரலாற்றிற்காதரமாக விருந்த பண்டைய நூல்களை யாம் இக்காலத்தில் கையாளுவதெங்ஙனம்? அவை யாவும் இறந்தொழிந்தன

வாதலின், அவ்வுளயாசிரியர்களது கூற்றுக்களை மறுத்துரைப்பதற்கும் யாம் அருகரல்லோம். அன்னோர் தம் காலத்திற் கிடைத்த நூல்களைக்கொண்டும், கர்ணபரம்பரைச் செய்திகளைக் கேட்டும் ஆராய்ந்தவற்றை எழுதிப்போந்தாரே யன்றி நமக்கோர் கட்டுக் கதையைப் புகட்டி நம்மைக் களிப்பிக்கப் புக்கவரல்லர். சங்கமிருந்தநீண்டகாலமும், சங்கமிரீஇய பாண்டியர்களின் தொகையும் எவ்வாறாயினுமாகுக. கடல்கோளைப் பற்றிய விவரமும் தமிழ்ச் சங்கமிருந்து புலவர்கள் தமிழாராய்ந்ததும் தமிழ் வல்லாரால் மறுக்கற் பாலன வல்ல. இவ்விரண்டினையும் வலியுறுத்தும் சான்றுகள் மிகப்பல. முதலில் கடல் கோளைக் குறித்துப் பேசுவோம்

இக்காலத்துள்ள குமரி முனைக்கு தெற்கே நாடுகள் முன்னாளிலிருந்து கடலால் விழுங்கப் பட்டமை கலித்தொகை; சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் அறியக் கிடக்கின்றது. அவை வருமாறு:—

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்

[முல்லைக்கலி. 104.]

வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் மண்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள

[சிலப் XI-17 to 19]

புறநானூற்றிற்கண்ட 6,9 செய்யுட்களில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி என்பானைப்பற்றி முறையே காரிகிழாரும் நெட்டிமையாரும் பாடியுள்ளார். இவ்விரண்டு செய்யுட்களிலிருந்து குமரியின் தெற்கே நாடுகளிருந்தன வென்பதும அவற்றினூடே பஃறுளியாறு எக்கர் மணலைக் குவித்துக் கொண்டோடிய தென்பதும் விளங்குகின்றன. *சில வருஷங்களுக்கு முன் வெளிவந்த 'செங்கோன் தரைச்செலவு என்ற